# தமிழ் அகராதியில்

## ஆய்வடங்கல்

# தமிழ் அகராதியியல் ஆய்வடங்கல்

## (1992 வரை)

முனைவர் இரா. திருநாவுக்கரசு

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**தஞ்சாவூர் 613 010**

ISBN : 81-7090-395-5

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 334

திருவள்ளுவராண்டு 2039, ஆவணி -செப்டம்பர் 2008

| | | |
|---|---|---|
| நூல் | : | தமிழ் அகராதியியல் ஆய்வடங்கல் |
| ஆசிரியர் | : | முனைவர் இரா.திருநாவுக்கரசு |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | அகராதியியல் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2008 |
| பக்கம் | : | 8 + 221 |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரூ. 100/- |
| படிகள் | : | 1200 |
| ஒளியச்சு | : | இன்தாம் கணினி மையம், தஞ்சாவூர். |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர் |

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010.

முனைவர் ம.இராசேந்திரன்
துணைவேந்தர்

**அகர முதல...**

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'
திருக்குறளின் முதற் குறள் என்பதோடு
அகராதிக்கும் முதல் தரும் குறள்.
'அகர', முதற்சீர்
'ஆதி' நான்காம் சீர்
அகராதியை நினைவுபடுத்தும் முதற்குறளின் இரண்டு சீர்கள்
பேராசிரியர் முனைவர் வ.செயதேவன் அவர்களின்
'தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு'
இந்நூல் உருவாக முதல் தந்திருக்கிறது.
முனைவர் இரா.திருநாவுக்கரசு அவர்கள்
முன்னர் வந்துள்ள ஆய்வடங்கல்களின்
பின்னேராகத் தொடர்ந்திருக்கிறார்.
எனினும்
சொற்பொருள், அகராதி, நிகண்டு, ஆய்வுகள்
விளக்கக் குறிப்புகள், நூலாசிரியர், நூல் எனும்
தகவல்களோடு
ஒவ்வொரு நூலுக்கும் சுருக்கமும் தந்துள்ளார்.
அவரது உழைப்பினைப் பாராட்டலாம்.
பணிகள் தொடரவும், சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

(ம.இராசேந்திரன்)
துணைவேந்தர்

# முன்னுரை

பொதுநிலையில் ஆய்வென்பது இருவகையான தரவுகளை அடிப்படையாய்க் கொண்டமைகின்றது. அவை முதன்மைத் தரவுகள், துணைமைத் தரவுகள் என்பன. இவ்விரண்டனுள் துணைமைத் தரவுகள் என்பன குறிப்பிட்ட இலக்கியம், இலக்கணம் போன்ற ஆய்வுப்பொருள்கள் குறித்து இதுவரை வெளிவந்த ஆய்வுகளே ஆகும். ஒருவர் மேற்கொள்ளும் ஆய்வுத் தலைப்புத் தொடர்பாய் இதற்குமுன் வெளிவந்த நூல்கள், கட்டுரைகள் போன்ற பல்வகை ஆய்வுக்கூறுகளையும் அறிந்து கொள்ள வேண்டுவது மிகமிக அவசியம். அப்போதுதான் ஆய்வின் எல்லை முழுமை அடையும். இவ்வாறு பல்வேறு காலங்களில் பல்வேறு அறிஞர்களால் எழுதி வெளியிடப்பட்ட நூல், கட்டுரை பற்றிய தகவல்களை ஆய்வாளர் அரிதின் முயன்று திரட்ட வேண்டிய சூழல் இன்றுவரை தமிழாய்வுலகில் நிலவி வருகின்றது. குறிப்பிட்ட ஆசிரியரின் படைப்புகள், குறிப்பிட்ட கால இலக்கியம் குறித்த ஆய்வுகள், இலக்கண ஆய்வுகள், குறிப்பிட்ட ஆசிரியரின் படைப்புக் குறித்த திறனாய்வுகள், குறிப்பிட்ட அறிஞரின் சொற்பொழிவுகள் போன்ற பலவற்றையும் தொகுத்து அடைவுகளை உருவாக்கும் முயற்சி, இருபதாம் நூற்றாண்டு ஆய்வுப் போக்கில் ஒரு கூறாக அறிமுகமாகி வளர்ச்சி பெற்று வருகின்றது.

இத்தகு தொகுப்பு முயற்சியின் முன்னோடியாக அகிலன் ஆய்வடங்கல் (1974), மு.வ.ஆய்வடங்கல் (1976), ஜெயகாந்தன் ஆய்வடங்கல் (1978), கம்பன் ஆய்வடங்கல் (1978) போன்ற அடைவுகள் தமிழ்ப்புலத்தில் வெளிவந்துள்ளன. இவை, பொதுவான நூல் அடைவுகளினின்றும் வேறுபட்டு ஆசிரியரின் படைப்புகள், அப்படைப்புகள் குறித்த ஆய்வுகள் ஆகியவற்றின் வெளியீட்டுத் தகவல்களை மட்டுமே தராமல், மூலநூல் ஆய்வு குறித்த அடிப்படைச் செய்திகளைச் சுருக்கி ஒவ்வொரு தலைப்பின்கீழும் தந்துள்ளன. இத்தகைய விளக்கக் குறிப்புகள் குறிப்பிடப்பட்ட நூல், கட்டுரை எச்செய்தியை முன்வைக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளப் பேருதவியாய் அமைகின்றன.

இத்தகைய அடைவு உருவாக்கம் அவரவர் மேற்கொண்ட ஆய்வுப் பொருளில் ஒரு கூறாக வெளியிடப்பட்டது. இத்தகைய போக்குகளில் ஆய்வடங்கல்களாக இல்லை என்றாலும் வெளியீட்டுத் தகவல்களை மட்டுமே தரும் அடைவுகளும் தமிழில் வெளிவந்துள்ளன. அகராதி அடைவுகள், நாட்டுப்புறவியல் ஆய்வடைவுகள், அறிவியல் ஆய்வடைவுகள் போன்ற பலவும் வெளிவந்துள்ளன. இவையே அன்றித் தனிமனிதர்கள் தம் சுய முயற்சியால் சங்க இலக்கிய ஆய்வடைவை உருவாக்கும் முயற்சியையும் மேற்கொண்டுள்ளனர். இத்தகைய போக்கில் உருவானதுதான் இவ்வாய்வடைவும்.

தமிழியல் நோக்கு நூல்களின் வரலாறு பழமையானது. இலக்கணத்தின் ஒரு கூறாய் இருந்த சொற்பொருள் கூறும் பகுதியான உரியியல், பின்னாளில் வடமொழி நைகண்டுகம் எனும் சொற்பொருள் கூறும் நூலின் தாக்கத்தால் நிகண்டாக உருப்பெற்று வளர்ந்தது. கி.பி.8ஆம் நூற்றாண்டு தொட்டு, திவாகரம் முதலான நிகண்டுகள் பலவும் வளரத் தலைப்பட்டன. பின்னர், 1679இல் ஐரோப்பியர் வரவால் தமிழ் - போர்த்துகீசிய அகராதி அச்சுருவில் வெளிவந்தது. இதன்பின் பல்வேறு நிகண்டுகளையும் அடிப்படையாய்க் கொண்ட சதுரகராதி 1732இல் எழுத்துருப் பெற்று 1819இல் அச்சுருப் பெற்றது.

இதன்பின்னர் இராட்லர் (1834), வின்சுலோ (1862) போன்ற இருமொழி அகராதிகளும் பல ஒருமொழி அகராதிகளும் வெளிவந்தன. இவ்வகராதிப் படைப்புகளின் உச்சநிலையாக 1929 முதல் 1936 வரையில் சென்னைப் பல்கலைக்கழக அகராதி வெளிவந்தது. இவ்வகராதி உருவாக்கத்தின் ஒரு கூறாகப் பல நிகண்டுகளும் அடிப்படை நூல்களாய்ப் பதிப்பிக்கப்பட்டன. இப்பதிப்புகள் வெளியிடப்பட்ட காலத்திலேயே அவை குறித்த ஆய்வுரைகளையும் எஸ்.வையாபுரிப்பிள்ளை எழுதி வெளியிட்டார். இவ்வாறு துவக்கம் பெற்ற அகராதி ஆய்வுகள் இன்று பல்வேறு நிலைகளில் பரந்துபட்ட நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அகராதிகள் பலவும் உருவாகும் இன்றைய சூழலில் அவை குறித்த ஆய்வுகளும் பரவலாய் நடைபெற்று வருகின்றன.

இத்தகைய ஆய்வுப் போக்கின் வளர்ச்சியாக, கு.இன்னாசியின் சதுரகராதி ஆராய்ச்சி (1976), வ.ஜெயதேவனின் தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு (1985) ஆகிய முனைவர் பட்ட ஆய்வுகள் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்டன. இன்று அவை நூல் வடிவிலும் வெளிவந்துள்ளன. நிகண்டு பற்றிய ஆய்வுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட மு.சண்முகம்பிள்ளை பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டதுடன், நிகண்டுச்சொற்பொருட் கோவை (1982) எனும் நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவ்வகை நூல் ஆய்வுகளுக்கு எல்லாம் முன்னோடியாகத் திகழும் வையாபுரிப் பிள்ளையின் அகராதி நினைவுகள் (1959) எனும் நூல் குறிப்பிடத்தக்க ஒன்று. வையாபுரிப்பிள்ளையை அடியொற்றி, தமிழ் அகராதி வரலாற்றை முழுமையாக ஆவணப்படுத்தியவர் புதுவையைச் சேர்ந்த முதுபெரும் தமிழறிஞர் சுந்தர சண்முகனார் ஆவார். இவர் 1965இல் தமிழ் அகராதிக்கலை எனும் நூலை வெளியிட்டு அகராதி ஆய்வுலகில் ஒரு புது வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். இவ்வாறு வையாபுரிப் பிள்ளை அகராதியியலுக்கு இட்ட வித்து இன்று முளைவிட்டு, பெருமரமாய் வளரத் தலைப்பட்டுள்ளது.

இவ்வாய்வுத் தடத்தில் வந்த வ.ஜெயதேவனின் தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு (1985) எனும் நூல் ஆய்வு, அடைவு எனும் இருபகுதிகளைக் கொண்டதாய் அமைந்துள்ளது. அடைவுப் பகுதியில் பல்வகைப்பட்ட நிகண்டுகள், அகராதிகள், அடைவு நூல்கள் போன்றவை தொகுத்தளிக்கப்பட்டிருப்பதுடன் அகராதியியல் ஆய்வுகள் குறித்த பட்டியலும் தரப்பட்டுள்ளது. இவ்வடைவு கட்டுரை / நூல் தலைப்பு, ஆசிரியர், வெளியீடு எனும் நிலையில் வெளியீட்டுத் தகவல்களை மட்டுமே தந்துள்ளது. இதுதான் இவ்வாய்வடங்கலின் உருவாக்கத்துக்குத் தூண்டுகோலாய் அமைந்தது.

அகராதியியல் ஆய்வுகள் பெருகிவரும் இன்றைய சூழலில் சொற்பொருள், அகராதி, நிகண்டு போன்ற பொருண்மைகளில் வெளிவந்த ஆய்வுகளை விளக்கக் குறிப்புகளுடன் ஆய்வடைவாய் உருவாக்கித் தருவது பயன்பாடு உடையதாய் அமையும் என்பதால், இவ்வாய்வடைவு உருவாக்கம் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு நூலும், கட்டுரையும் எப்பொருள் குறித்து எப்போக்கில் ஆய்ந்துள்ளது எனும் ஆய்வுப்பொருட் சுருக்கம் ஒவ்வொரு தலைப்பின்கீழும் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைப்பின் ஆய்வுப் பொருளையும் போக்கையும் உணர்ந்து அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள இவ்விளக்கக் குறிப்புக்கள் ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இவ்வாய்வடைவு இருபெரும் பகுதிகளாக அமைந்துள்ளது. முதற்பகுதியில் நூல்/கட்டுரைத் தலைப்பு, ஆசிரியர், வெளிந்த ஆண்டு முதலான வெளியீட்டு விவரக் குறிப்புகள் தரப்பட்டு, அவற்றின்கீழ் அந்நூல் அல்லது கட்டுரையின் ஆய்வுப் பொருள் சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி கட்டுரை/நூல் தலைப்பின் அடிப்படையில் அகரநிரலில் தரப்பட்டுள்ளது.

மேலும், இப்பகுதியில் தமிழ்க் கட்டுரைகளுக்குப்பின் ஆங்கிலக் கட்டுரைகள் அதன் தலைப்பு ஆங்கிலத்தில் அகரவரிசையிலும் அதன் பின்னர்க் கட்டுரைச் சுருக்கம் தமிழிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

இனி இரண்டாவது பகுதியில் ஆசிரியர், கட்டுரை/நூல்தலைப்பு எனும் நிலையில் அகரநிரல் அடைவு ஒன்று தரப்பட்டுள்ளது. ஆசிரியர் பெயரை மட்டுமே அறிந்த ஒருவர் இப்பகுதியைப் பயன்படுத்தி அவர் எழுதிய நூல், அல்லது கட்டுரை இன்னதென்று அறிந்துகொள்ள முடியும்.

இவ்வாய்வடைவில் அச்சுருப்பெறாத ஆய்வரங்கக் கட்டுரைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய கட்டுரைத் தலைப்புகளின் பின் உடுக்குறி இட்டுக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாய்வடைவின் இறுதியில் பெரிதும் முயன்றும் நேரடியாய்ப் பார்த்து ஆய்வுச் சுருக்கம் எழுத இயலாத கட்டுரைகளின் பட்டியல் ஒன்று தரப்பட்டுள்ளது. இது தலைப்பு, ஆசிரியர், ஆண்டு, வெளிவந்த இதழ், இடம் போன்ற வெளியீட்டுக் குறிப்புகளை மட்டுமே உடையதாய் இருக்கும். எதிர்காலத்தே இவை தேடிச் சேகரிக்கப்பட்டு ஆய்வுச் சுருக்கத்துடன் முதற் பகுதியில் சேர்க்கப்படும்.

இரா. திருநாவுக்கரசு

# நன்றியுரை

'தமிழ் அகராதியியல் ஆய்வடங்கல்' எனும் தலைப்பில் நான் மேற்கொண்ட இந்த ஆய்வினை நூலாக்கம் செய்ய முதன்மைக் காரணமாய் அமைந்தவர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்பமை முனைவர் ம.இராசேந்திரன் அவர்கள். தொலைநோக்குப் பார்வையுடன் பல்கலைக்கழகத்தின் அகத்தையும் புறத்தையும் மாற்றியமைத்துச் செழுமைப்படுத்திக் கொண்டிருக்கும் பெருமைமிகு நம் துணைவேந்தருக்கு என் முதல் நன்றியை வழங்கி மகிழ்கிறேன்.

அருமை நிறைந்த துணைவேந்தரின் ஆற்றல் வாய்ந்த பணிகள் அனைத்தையும் சிறப்புடன் நிறைவேற்றத் துணைநிற்பவர் மதிப்பிற்குரிய தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) முனைவர் க.பாஸ்கரன் அவர்கள். இந்த இனிய வேளையில் அவருடைய கரங்களிலும் என் நெஞ்சார்ந்த நன்றியை ஒப்படைக்கிறேன்.

இந்த அகராதியியல் ஆய்வடங்கலை முறையாகவும் முழுமையாகவும் உருவாக்கத் துணைபுரிந்தவர், துறைத்தலைவர் முனைவர் எச்.சித்திரபுத்திரன் அவர்கள். அந்த நல்ல உள்ளத்திற்கு என் இதயப்பூர்வமான நன்றியை அள்ளி வழங்குகிறேன்.

அகராதிக்கலையில் என்னை ஆர்வமுடன் ஈடுபாடு கொள்ளச் செய்தவர் பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் பெ.மாதையன் அவர்கள். அயராத உழைப்பின் உருவமாகத் திகழும் அவருக்கும் என் கனிவான நன்றியைத் தந்து மகிழ்கிறேன்.

என் ஆய்வுப் பணிக்கும், கல்விப் பணிக்கும் ஊக்கமும், உற்சாகமும் தந்து கொண்டிருக்கும் கெழுதகை நண்பர்கள் முனைவர் பெ.இராமலிங்கம், முனைவர் சா.உதயசூரியன், முனைவர் மா.பார்வதிஅம்மாள், முனைவர் அர.கமலதியாகராசன் ஆகியோர்களுக்கும் என் பாசம் கமழும் நன்றியை அறிவித்துக் கொள்கிறேன்.

விரைவாகவும் அழகாகவும் இந்நூல் அச்சாக்கம் பெற்றிட உதவிக்கரம் நீட்டியவர் பதிப்புத்துறை இயக்குநர் முனைவர் ஆறு.இராமநாதன் (துறைத்தலைவர் நாட்டுப்புறவியல் துறை) அவர்கள். அவர்களின் இந்த உதவிக்கும் எந்நாளும் நன்றி சொல்லி அகம் குளிர்வேன்.

மெய்ப்புத் திருத்தப் பணிகளை மேற்கொண்ட ஆய்வு மாணவர்கள் அ.தீபா, ந.இரஞ்சன், க.சுதா ஆகியோருக்கும் என் இனிய நன்றி.

## ஆய்வடங்கல் குறிப்புகளுடன்
## தமிழ் – நூல்/கட்டுரை அடைவு

**"அகராதி"**

சோமலெ, *(1968)* வளரும் தமிழ், பதிப்பு - *3*, பக்.*373-376*, பாரி நிலையம், சென்னை.

அகராதி பற்றிய பொதுவான கருத்துக்கள் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன. தமிழில்தான் அகராதி முதன்முதலில் வெளிவந்தது என்றும், *1679*-ல் தமிழ்-போர்ச்சுகீசிய அகராதியும், *1719*-ல் தமிழ்-ஆங்கில அகராதியும், *1819*-ல் சதுரகராதியும் வெளிவந்தது என்றும், *1838*-ல் யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் அகராதியும், *1842*-ல் வின்சுலோ அகராதியும், *1834*-ல் ராட்லரின் அகராதியும் பின்பு ஏராளமான அகராதிகளும் வெளிவந்தன என்றும், *1926*-ல் சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் லெக்சிகனை 7 தொகுதிகளாக வெளியிட்டது என்றும், விஞ்ஞான வளர்ச்சியும், மொழி வளர்ச்சியும் விரைவாக வளர்ந்து வருவதால், பல மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்க வேண்டியிருப்பதாலும் புதிய அகராதிகள் வெளியிடப்பட வேண்டும் என்றும், தமிழ் அகராதிக்கலை என்னும் ஆய்வு நூலைப் பற்றியும் இக்கட்டுரை மொழிகின்றது.

**"அகராதி"**

வீராசாமி, தா.வே. (1986) வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-1, பக்.69-87, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அகராதியினைப் பற்றிய முழுமையான செய்திகள் இக்கட்டுரையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அகராதி என்ற சொல் வந்த வரலாறு, அகராதியின் வளர்ச்சி நிலை, தொல்காப்பியத்திலிருந்து, நிகண்டு, பின் ஆங்கிலேயர் வருகைக்குப்பின் முழுமையாக வளர்ச்சியடைந்த வரலாறு ஒவ்வொன்றும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. ஒருமொழி, இருமொழி, பன்மொழி அகராதி ஒவ்வொன்றும் விளக்கமாகத் தரப்பட்டுள்ளது. அகராதிகளில் இதுவரை வெளிவந்துள்ள ஒவ்வொரு அகராதியும் வரலாற்று அடிப்படையில் விளக்கப்பட்டும், அகராதி எவ்வாறு அமையவேண்டும் என்பதைத் தலைச்சொல், இலக்கணம், பொருள், மேற்கோள், குறிப்பீடு, படவிளக்கம் போன்று பல குறுந்தலைப்புகளில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அகராதியினைப் பற்றிய தெளிவான, விரிவான செய்திகள் இக்கட்டுரையில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

**"அகராதி"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (1954) கலைக் களஞ்சியம், தொகுதி-1, பக்.15-18, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.

இக்கட்டுரை, தமிழ் அகராதியின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு முதலியவற்றை விளக்குகின்றது. தொல்காப்பியம் முதற்கொண்டு நிகண்டுகளின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் விளக்கி, வீரமாமுனிவரின் சதுரகராதி முதற்கொண்டு சென்னைப் பல்கலைக்கழக அகராதி வரையில் தமிழில் தோன்றிய அகராதிகளின் அமைப்பு, வளர்ச்சி முதலியவற்றை இக்கட்டுரையில் காண முடிகின்றன. தமிழ் அகராதிகள் சொற்களின் பிறப்பு வரலாற்றை மொழிநூல் முறையில் உணர்த்தியும், சொல்லின் வடிவங்களையும் பொருள்களையும் கால முறைப்படி நிறுவி இன்ன சொல் இன்ன காலத்தில் இன்ன பொருளில் வழங்கி வந்தது என்பதை ஆதாரங்களுடன்

விளக்குவதும், புதுச் சொற்களைச் சேர்ப்பதும், கலைக் குறியீட்டு மொழி அகராதிகளையும், கொடுந்தமிழ், திசைச்சொல் பற்றிய அகராதிகளை இயற்றுவதும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்றும் இதில் கூறப்பட்டுள்ளது.

**"அகராதி அனுபவங்கள்"**

*வையாபுரிப் பிள்ளை, எஸ். (1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி-2, பக்.436-443, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை.*

இக்கட்டுரை, அகராதி உருவாக்குவதில் ஏற்படும் இடர்பாடுகளைத் தமிழ்ப் பேரகராதி உருவாக்குவதில் ஏற்பட்டவை மூலம் விளக்கப்பட்டுள்ளன. இவ்வகராதி இருமொழி அகராதி என்ற செய்தியையும், இதன் முன்னோடியாக வின்சுலோ அகராதி பயன்பட்ட செய்தியையும், சொற்கள் பற்றிய அளவில் பேரிலக்கியங்கள், பேரிலக்கணங்கள், கல்வெட்டுகள், தொழில் பற்றிய நூல்கள் அனைத்தையும் படித்து, தொகுத்தச் செய்தியையும், இவ்வாறு சொற்களைச் சேர்ப்பதில் ஏற்பட்ட இடர்பாடுகள் சான்றுகள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. சாதிப் பெயர்கள், இடப் பெயர்கள் சேர்ப்பதனால் ஏற்பட்ட இடர்பாடுகளும், இரவு பகலாக உழைத்தமையையும் விரிவாக விளக்குகின்றது.

**"அகராதி ஆக்கப்பணியில் கணிப்பொறி"**

*செல்லமுத்து, கா.செ. (1989) தமிழ்க்கலை, தமிழ்-7, கலை-1,2 பக்.146-155, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

அகராதி ஆக்கப்பணியில் கணிப்பொறியினைப் பயன்படுத்தும்போது ஏற்படும் சிக்கல்களும் அவற்றைத் தீர்க்கும் வழியும் இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றன. அகராதியின் வகைகளாக ஒருமொழி, இருமொழி, பன்மொழி, வேற்று மொழியில் அறிவியல் கலைச்சொல்லகராதி, தானியங்கு மொழிபெயர்ப்புக்குரிய கணிப்பொறி அகராதி என்ற ஐவகை அகராதிகளைக் கூறி, அவற்றை உருவாக்க கணிப்பொறி

பயன்பட்ட முறையும் கணிப்பொறி மூலம் அகராதிப் பணியைச் செயற்படுத்தும் முறையும் அதில் அமைந்துள்ள சிக்கல்களும், ப ,ன்களும் தரப்பட்டுள்ளன. கணிப்பொறி வழி அகராதி செய்யும் திட்டத்தைச் சொல்தொகுப்பு, இடுவரல், கணிப்பொறிவழித் தொகுப்பு, திருத்தம், விடுவரல் என்று ஐந்து வகைகளாகப் பிரித்து, அகராதிச் செயற்பாட்டுத் திட்டத்தின் செயல்பாடுகள், வரைபடம் முதலியனவற்றைச் செம்மையாகவும் சிறப்பாகவும் இக்கட்டுரை விளக்குகின்றது. அகராதியைத் திறம்பட குறுகிய காலத்தில் கணிப்பொறி மூலம் செய்து முடிக்கலாம் என்றும் கூறுகின்றது.

**"அகராதி – ஒரு பார்வை"**

*வசந்தா, க. பெருஞ்சொல் அகராதித்துறை, அகராதிக்கலைக் கருத்தரங்கு, மார்ச்-1989, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

அகராதியின் வகை, தொகுக்கும் முறை பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அகராதி என்னும் சொல் முதன்முதலில் திருமந்திரத்தில்தான் இடம்பெற்றது என்பார் செயதேவன் என்றும், அகராதி என்னும் சொல்லை இன்று வழங்கும் பொருளில் முதலில் கையாண்டவர் வீரமாமுனிவர் என்றும் கூறப்பட்டுள்ளது. அகராதி, களஞ்சியம்,அகராதியின் வகைகள் போன்றவற்றின் விளக்கங்களும், பலபொருள் ஒருசொல், ஒருபொருட் பன்மொழி போன்றவற்றை அறிய அகராதி உதவும் என்றும், தலைச்சொல், இலக்கணம், பொருள், சொற்கள் தெரிவுசெய்ய வேண்டிய நூல்கள், சுருக்கக் குறியீடு இவற்றுக்கான விதிகளை வகுத்தபின் அகராதிப் பணியினைத் தொடங்க வேண்டும் என்றும் இக்கட்டுரை பேசுகிறது.

**"அகராதிக்கலையும் மொழியியலும்"**

*சதாசிவம்,மு. (1981) ஆய்வுக்கோவை-13, தொகுதி-2. பக்.114-118, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.*

அகராதிக் கலைக்கு மொழியியல் எந்த அளவு தேவை என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இதில்

தொல்காப்பியத்திலிருந்து அகராதித் தொகுப்பு முறைகள் வளர்ந்தாலும் சதுரகராதியில்தான் அவை முழுமைப் பெற்றுள்ளன என்றும், அகர வரிசை முறை ஒவ்வொரு அகராதியிலும் எவ்வாறு அமைந்துள்ளது என்றும், அகராதி அமைப்புக்கு மொழியியலின் உதவிகள் எந்த அளவு தேவைப்படுகின்றன என்றும், அகராதியின் முன்னுரை எவ்வாறு அமைய வேண்டும் என்றும், பல வகையான அகராதிகளை வரிசைப்படுத்திக் கூறியும், அகராதியின் நோக்கம் என்ன என்றும், எவ்வாறு திட்டமிட்டு ஓர் அகராதியை அமைக்க வேண்டும் என்பது பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

**"அகராதிக்கு அப்பால்"**

*மீனாட்சிசுந்தரம், க. (1977) பக். 9-17, மங்கை நூலகம், சென்னை.*

இக்கட்டுரை, சொல்லுக்குப் பொருள் கூறும் அகராதிக்கு அப்பாலும் பொருள் உள்ளது என்னும் கருத்தில் எழுதப் பட்டுள்ளது. ஒரு சொல் தனிச்சொல்லாக இருக்கும்போது பல பொருளைக் குறிக்கு[ம்] என்றும், வாக்கியத்தில் அல்லது பேச்சில் பயன்படுத்தப்படும்போது சூழல், இடம் போன்றவற்றிக்குத் தக்கவாறு பொருள் மாறுபடும் என்றும், அகராதி என்பது இந்தச் சொல்லுக்கு இந்தப் பொருள் தான் என்று கூறும் என்றும், ஆனால் வாக்கியத்தில் வரும்போது பல பொருள்களிலும் பொருத்தமான பொருள் எது என்று கண்டறிந்தே கூற முடிகின்றது என்றும், மொழியின் வடிவ அமைப்பையும் இலக்கணப் போக்கையும் மட்டும் வைத்து ஒரு சொல்லின் முழுமையான பொருளைக் காண முடியாது என்றும், சூழல், இடம் போன்ற எல்லாக் கருத்துக்களையும் கொண்டுதான் ஒரு சொல்லின் பொருளை முழுமையாகக் காண முடியும் என்றும் இக்கட்டுரையில் மொழியப்பட்டுள்ளது.

**"அகராதிகள்"**

*மறைமலையடிகள், (1960-61) செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு-35, பக். 91, 141, 175, 223, 283, 326, 349, 452, 513.*

இக்கட்டுரை, அகராதிகளின் வரலாற்றையும், அதன் அமைப்பையும் விளக்குகின்றது. தமிழில் முதல் அகராதி வீரமா முனிவர் இயற்றிய சதுரகராதி என்றும், இதில் ஒற்றுக்களுக்குப் பழங்கால வழக்கப்படி புள்ளி இல்லை என்றும், பெயர், பொருள், தொகை, தொடை என நான்கு பிரிவுகள் காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளன. தமிழில், முதலில் அச்சிடப்பெற்ற பெப்ரீசியசு அகராதி தமிழ்-ஆங்கில அகராதியாகும். அடுத்து ஆங்கில-தமிழ் அகராதியும் மேற்கண்டவர்களால் இயற்றப்பட்டதாகவும், 10,000க்கு மேல் சொற்கள் காணப்படுவதாகவும் கூறப் பட்டுள்ளன. இதைத் தவிர தொடர்ந்து வெளிவந்துள்ள அகராதிகளைப் பற்றிய அமைப்பு, சொல், பொருள் முதலியவை பற்றியும் இக்கட்டுரையில் பேசப்பட்டுள்ளன.

**"அகராதிகளில் குறிப்பான்களும் விளக்கக் குறிப்புகளும்"**

சித்திரபுத்திரன், எச். (6-3-1989) பெருஞ்சொல் அகராதித் துறை, அகராதிக் கலைக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

அகராதித் தொகுப்பில் எழும் சிக்கல்களையும் அகராதித் தொகுக்கப் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். குறிப்பான்களும், விளக்கக் குறிப்புகளும் ஓர் அகராதியில் இடம்பெற வேண்டிய அவசியத்தையும், அதனால் ஏற்படும் பயன்களும், அவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகளும் விளக்கப்படுகின்றன. குறிப்பான்கள் பொருளின் காலம், இடம், சமுதாயம் முதலியவற்றை விளக்கும் என்றும், குறிப்பான்களை 3 வகையாகப் பிரித்தும் விளக்கப்பட்டுள்ளது. விளக்கக் குறிப்புகளைப் பயன் படுத்தப்படும் முறையும், அதன் பயன்பாடும், வகைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. குறிப்பான்களையும், விளக்கக் குறிப்புகளையும் பயன்படுத்த 12 விதிமுறைகள் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

**"அகராதிச் சொற்கள்"**

மாதையன், பெ. (மார்ச்-சூன் 1989), தமிழ்க்கலை, தமிழ்-7, கலை-1, 2. பக்.74-87, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தமிழில் அகராதிப் பதிவுகளைத் தெரிவு செய்வதில் கவனிக்கப்பட வேண்டிய நெறிகளை இக்கட்டுரை கூறுகின்றது. இலக்கணத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாட்டினையும், அகராதிச் சொல் என்பது மொழியில் வழங்கும் சொற்களுக்கு அப்பாற்பட்டது என்றும், சொல்லடுக்கு என்பது பல்வகையில் விரிந்துவரும் சொல்லாகும் என்றும் கூறப்படுகின்றது. சொல்விரிவுகள் அனைத்தையும் எளிதில் வரவழைக்கும் வடிவமே அடிப்படை வடிவம் என்றும், பொருள் வேறுபாட்டையும், வடிவ வேறுபாட்டையும் தெளிவாய் உணர்ந்து அகராதிச் சொற்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்றும், வினைச்சொல்லின் சொல் விரிவுகள் சிக்கல் வாய்ந்தன என்றும், பெயர்ச்சொற்கள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்றும், வினையெச்ச வாய்பாட்டுச் சொற்கள், வினையடைகள் அகராதிச் சொற்களாய்க் கொள்ளல் வேண்டும் என்றும், ஆக்கச் சொற்களை விகுதி சேர்ந்தவை, கூட்டுச் சொற்கள் என இரண்டாகப் பிரித்து அகராதியில் பதிவு செய்ய வேண்டுமென்றும், சொல்விரிவு, ஆக்கச் சொற்கள் ஆகியவற்றின் பயன்பாடுகளைத் தெளிவாக, முழுமையாக அறிவதே அகராதிச் சொற்களின் தெரிவுக்கு அடிப்படை என்பதையும் இக்கட்டுரை புலப்படுத்துகின்றது.

**"அகராதித் தொகுப்பில் எழும் சில சிக்கல்கள்"**

சுப்பிரமணியன், பா.ரா. (மார்ச்-சூன் 1989) தமிழ்க்கலை, தமிழ்-7, கலை-1, 2, பக்.69-73, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இக்கட்டுரை, ஓர் அகராதித் தொகுக்கும்போது எழும் சிக்கல்களை விளக்குகின்றது. அகராதியில் தலைச்சொற்களாகப் பெயர், வினைகளைத் தேர்ந்தெடுக்கும்போது ஏற்படுகின்ற சிக்கல்களை உதாரணங்களோடு விளக்குகின்றது. பெயர், வினைச்சொற்களை மேற்கொள்ளப்பட்டுள்ள முறையைச் சொல் விகற்ப முறை என்பர். சொற்பொருள்களை வரலாற்று முறையில் கொடுக்கும்போது வடிவமும் அந்த அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்றும், வினையாக்கத்தை இரண்டு வகையில் குறிப்பிடலாம் என்றும், இரண்டாவது வகையாகப் பண்புச் சொற்களிலிருந்தும், எதிர்மறை அடிகளிலிருந்தும் தெரிநிலை

வினைகளுக்கு இணையாக வடிவங்கள் வழங்கப்படுகின்றன என்றும், அந்த வடிவங்களுக்குத் தாய்ச்சொல்லாக ஒரு வடிவத்தைத் தலைச்சொல்லாகக் கொடுக்க வேண்டும் என்றும் கூறுகின்றார். ஒருமொழி, இருமொழி அகராதிகளில் எழும் சிக்கல்கள் சான்றுகளுடன் விளக்கப்படுகின்றன. அகராதி உருவாக்கும்போது ஏற்படும் சிக்கல்கள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டு நிறைவான அகராதியையே உருவாக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"அகராதி நிகண்டு"**

செயதேவன், வ. (1986) வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-1, பக்.87-88, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இக்கட்டுரை, அகராதி நிகண்டு என்னும் நிகண்டு நூலினை விளக்கிக் கூறுகின்றது. சிதம்பர இரேவண சித்தர் இதனை இயற்றினார் என்றும், முதன்முதலில் அகராதி என்னும் சொல்லை இது கொண்டது என்றும், இதில் ஒரு சொல், ஒரு பொருள் மற்றும் பல பொருளையும் உணர்த்தும் என்றும், பிறமொழிச் சொற்களும், பேச்சு வழக்குச் சொற்களும், திசைச் சொற்களும் இதற்கண் மிகுந்து காணப்படுகின்றன என்றும், தமிழ் அகராதியியலுக்கு முதன் முதலில் அகரநிரலை இதுவே அறிமுகம் செய்தது என்றும், இது 10 தொகுதியினை உடையது என்றும் கூறப்பட்டுள்ளது. இதில் சில குறைபாடுகள் இருந்தாலும் அகரநிரலை அறிமுகம் செய்தது இதுவானதால் அகராதியியல் வரலாற்றில் இதற்குத் தனியிடம் உண்டு என்றும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**"அகராதி நினைவுகள்"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி-2, பக்.427-435, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை தமிழ்ப் பேரகராதியைப் பதிப்பித்த காலத்தின் நினைவுகள்

இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன. 1926 இறுதியில் பேராசிரியர் நியமனம் செய்யப்பட்டார் என்றும், ஆராய்ச்சி செய்வதில் இவருக்கு இருந்த ஈடுபாடு பற்றிய செய்திகளும், ஆராய்ச்சி வன்மையும், புலமையும், இவரது சிறந்த கட்டுரைகளும் கூறப்பட்டுள்ளன. அகராதிச் சொற்களைக் கொண்ட கடுதாசித் துண்டுகள் தயாரிப்பது முதல், அச்சுப்பணி முடியும் வரையிலுள்ள எல்லா நிலைகளையும் உணர்ந்து, லெக்சிகன் ஆரம்ப காலத்தில் நோட்டுப் புத்தகத்தில் எழுதப் பெற்றதையும் பின்பு அட்டைகளில் எழுதப் பெற்றதையும், நூல்களை வாதித்துப் புதுப் பதங்களைச் சேர்ப்பதற்குப் பேராசிரியர் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பற்றியும், சொல் பொருள்களில் ஏற்பட்ட இடர்பாடுகளும் அவை திருத்தப்பெற்ற முறைகளும் இக்கட்டுரையில் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

**"அகராதிப் பணியில் சில மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்"**

*மணவாளன், அ.அ. (1989) தமிழ்க்கலை, தமிழ்-7, கலை-1, 2. பக்.132-139, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

அகராதி மொழிபெயர்ப்பில் எழும் சிக்கல்களை எடுத்து மொழிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அகராதிச் சொற்கள் பொருண்மைப் பதிவு, சொன்மைப் பதிவு என இருவகைச் சொற்களைக் கொண்டிருக்கும் என்றும், அகராதிப் பதிவில் இவை இரண்டும் அமையும் கூறுகள் பொருண்மைக்கூறு, சொன்மைக் கூறு எனப்படும் என்றும், பொருண்மைக் கூறுகளைப் பதிவதில் மொழிபெயர்ப்பு இருவகையில் இடர்படும் என்றும், அவற்றிற்கு எடுத்துக்காட்டு மூலம் விளக்கங்களும் செய்யப்பட்டுள்ளன. ஒரு மொழிச் சொல் பிற மொழியில் இல்லாமையாலும், பண்பாட்டு வேறுபாட்டாலும் மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் ஏற்படும் என்றும், இலக்கண அமைப்பில் மொழிகள் வேறுபடுவதால் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்றும், இடைச்சொல், வினை, குன்றிய வினை, குன்றா வினை என்னும் இலக்கணக் குறியீடுகள் ஆகியவை தமிழ்-ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் வேறுபடுவதால் மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்றும் வழங்கப்பட்டுள்ளது.

**"அகராதிப் பேரறிஞர் உவின்ஸ்லோவின் தமிழ் பற்றிய ஆய்வுரை"**

சதாசிவம், மு. (1963-64) செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு - 38, பக்.185, 209.

இக்கட்டுரை, உவின்ஸ்லோ தம் அகராதி முன்னுரையில் தமிழைப் பற்றிய ஆய்வுரையின் தமிழாக்கமே ஆகும். பேராசிரியர் மாக்ஸ்முல்லர், தமிழ் தூரானியக் குடும்பத்தைச் சார்ந்தது என்றும், கால்டுவெல் திராவிட மொழிகள் அனைத்தும் பின்னிய மொழி பிரிவிலிருந்து தோன்றியன என்றும், எல்லாத் திராவிட மொழிகளிலும் தமிழ்மொழி தொன்மை வாய்ந்தது என்றும், அதில் வடசொற்கள் கலந்து காணப்பட்டாலும், அந்த வடசொற்களை நீக்கினாலும் அது தனித்து நிற்கும் ஆற்றல் உடையது என்றும், தமிழைப் பிறமொழிகளோடு ஒப்பிட்டும் கூறியுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலை நாட்டவர்கள் தமிழின் பெருமை அறிந்தே பல நூல்களையும், அகராதிகளையும் எழுதியுள்ள தாகவும், பிறமொழிகளிலிருந்து தமிழ்த் தொன்மை வாய்ந்தது என்பதனை உவின்ஸ்லோவும் கூறியுள்ளதாகவும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**"அகராதியியலும் தகவில் மொழியும்"**

செயதேவன், வ. (1984) தமிழாய்வு, தொகுதி-14, தமிழ் மொழித் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

தகவில் மொழி என்றால் என்ன? அது அகராதியில் எங்ஙனம் இடம் பெறுகின்றது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வாழ்வியலில் கல்வி அறிவு இல்லாதவர்களுடைய மொழி தகவில் மொழி என்றும், கல்வி அறிவு உள்ளவர்களது மொழி தகு மொழி என்றும், தக்வில் மொழி என்பது dialect, Vernacular, Jargon, cant, argot, lingo, Patois, slang, vulgarsis போன்றவற்றை உள்ளடக்கியது என்றும், பேசுவோரது இடம், சாதி, சமயம், தொழில் முதலியவற்றைப் பொறுத்து அமைவது குழூஉ மொழியாக விளங்குவது என்றும் எடுத்துக்காட்டு மூலம் விளக்கப்பட்டுள்ளது. அகராதி என்பது தகவில் மொழியைத் தீண்டாமைக்குரியதாகக் கருதாமல் வழக்குப் புலக்குறிப்பின் துணையால் வழக்காற்றின் தகவில் நிலையைச் சுட்டலாமே ஒழிய

மொழியில் உயர்வு, தாழ்வுப் பாராட்டி உயர்ந்ததை மட்டுமே பதிவு செய்தால் அகராதியியல் நெறிக்குப் புறம்பானதாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"அகராதியில் பொருள் வரையறை"**

*செயதேவன், வ. (1989) அகராதிக் கலைக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

இக்கட்டுரை, அகராதியில் பொருள் வரையறை எவ்வாறு கொடுக்கப்பட வேண்டும் என்று கூறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஓர் அகராதி அலகுக்கு இணைப்பொருள் கொண்ட சொல் அல்லது சொற்களைச் சுட்டுவதன் வாயிலாகவும், அல்லது படங்கள் வாயிலாகவும், அல்லது இன்ன சொல் இன்ன பொருளில் வழங்குகிறது என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் பதிவுச் சொல்லெனும் அரிய சொல்லால் பொருள் வரையறைச் செய்யப்படுதல் வேண்டும். பொருள் வரையறையில் இடம்பெறும் சொற்கள் பதிவுச் சொற்களாகவே அமைக்கப் பெறுதல் வேண்டும் என்றும், சூழல் தன்மை, பொருள் மயக்கம், குன்றக்கூறல், மிகைபடக்கூறல் முதலிய குறைகள் கூடாதன என்றும், பொருள் வரையறை துல்லியமானதாகவும், அறுதியுடையதாகவும் இருக்க வேண்டும் என்றும் மொழியப்பட்டுள்ளது.

**"அகராதியில் பொருள் வரையறை – அசை"**

*வீராசாமி, தா.வே. (1989) பெருஞ்சொல் அகராதித்துறை, அகராதிக் கலைக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

'அசை' என்னும் சொல் எந்த எந்தப் பொருளில் அகராதிகளில் இடம் பெற்றுள்ளது என்பதைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அசை என்னும் சொல் சங்க காலப் புலவர்களால் பதினெண் மேற்கணக்கு நூல்களில் எந்தெந்த நூலில் எந்தெந்த இடங்களில் எவ்வகைப் பொருளில் வந்துள்ளது என்பதையும், இலக்கண நிலையில் இந்த அசை எப்படிக் கலைச்சொல்லாகப் பயன்படுகிறது என்பதையும், சீவக சிந்தாமணியிலும், வீரமா முனிவர், கதிர்வேற்பிள்ளை

போன்றோர்கள் எந்தப் பொருளில் வரையறை செய்துள்ளார்கள் என்பதும் விளக்கப்படுகின்றது. சென்னைப் பல்கலைக்கழக அகராதியிலும், தமிழ்ப் பல்கலைக்கழக அகராதியில் 18 பகுப்புகளில் அசை என்ற சொல்லின் பொருளை வரையறை செய்துள்ளது என்றும், பல்வேறு சூழல்களால் இப்பகுப்புகளை மேலும் பெருக்கவும், வகைப்படுத்தவும் முடியும் என்பதால், எதிர்கால அகராதிக் கலைஞர்களுக்கு விரிந்த பரந்த ஆய்வுக்களம் உள்ளது என்றும் இக்கட்டுரை பேசுகின்றது.

**"அகராதியில் மீட்டுருவம் – ஒரு குறிப்பு"**

சுப்பிரமணியம், வ.ஐ. (1989) தமிழ்க்கலை, தமிழ் - 7, கலை - 1, 2. பக்.123-126, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அகராதியில் மீட்டுருவம் தேவை என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒரு மொழியைச் சார்ந்த ஒரு சொல்லுக்குப் பல உருவம் இருக்குமானால் அதை மீட்டுருவம் செய்ய முடியும் என்பது சான்றுகள் மூலம் விளக்கப்படுகின்றது. மீட்டுருவம் தர்க்க ரீதியாக இருக்க வேண்டுமென்றும், ஒலி மாற்றம் சிறுகச் சிறுக இருக்க வேண்டுமென்றும், ஒத்த சூழலில் ஒத்த எடுத்துக்காட்டிலும் அது பொருந்துவதாக இருக்க வேண்டும் என்றும், பிறநிலை மீட்டுருவம் கிளைமொழியை அடிப் படையாகக் கொண்டது என்றும், மீட்டுருவம் அமைக்கும்போது கிளைமொழிகள் அனைத்திலும் அவ்வுருவம் இருக்க வேண்டும் என்றும், சொல்லை அடிப்படையாகக் கொண்டு நாம் பலவற்றை ஊகிக்க முடியும் என்பது, 'போல' என்ற சொல் கொண்டு விளக்கப்படுகிறது. அகராதியைக் கால ஆய்வு அல்லது கால மீட்டுருவம் செய்தால் ஏராளமான செய்திகள் கிடைக்கும் என்பதும் கூறப்பட்டுள்ளது.

**"அகராதியில் வினைச் சொற்கள்"**

பாலசுப்பிரமணியன், க. (1978) ஆய்வுக்கோவை-10, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

அகராதிகளில் வினைச்சொற்கள் எவ்வாறு கொடுக்கப்பெற வேண்டும் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின்

நோக்கமாகும். ஒரு சொல்லின் அடிச்சொல்லை அகராதியில் கொடுக்க வேண்டுமெனில் அதன் மற்ற வடிவங்களை எளிதில் பெறக்கூடிய வகையில் சொல் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். வினைச்சொற்களில் இரண்டாம் வேற்றுமை ஏற்றல் அடிப் படையில் செயப்படுபொருள் குன்றிய, குன்றா வினைகள் பகுக்கப்படுவன போல் மற்ற வேற்றுமை ஏற்கும், ஏலாத் தன்மைகளையும் குறிப்பிட வேண்டும் என்றும், தெரி, புரி, வலி போன்ற வினைகள் எழுவாய் வேற்றுமை ஏற்பதில்லை என்றும், கொடு போன்ற வினைகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வாரா என்றும் இவை போன்ற எல்லாக் குறிப்புகளும் அகராதியில் கொடுக்க வேண்டும் என்றும் கூறுகின்றது.

"**அகராதியின் வரவும் வளர்ச்சியும்**"

*தட்சிணாமூர்த்தி, வை. (1963) செந்தமிழ்ச்செல்வி, தொகுதி-59, பக்.43.*

இக்கட்டுரை, அகராதிகளின் தோற்றம், வளர்ச்சி முதலியவற்றை விளக்குகின்றது. தமிழில் அகராதி வளர்ச்சி ஐரோப்பியர் வருகைக்குப் பின்பே ஆரம்பித்தது என்றும், புரோயன்சா தொகுத்த தமிழ்-போர்த்துகீசிய அகராதியே முதல் அகராதி என்றும், தமிழில் வீரமாமுனிவர் 1732-ல் சதுரகராதியை முதன்முதலில் உருவாக்கினார் என்றும், பின் 1838-ல் யாழ்ப்பாண அகராதியும், பின் பல தமிழ் அகராதிகள் தோன்றின என்றும் கூறப்பட்டுள்ளது. பொது அகராதியன்றி, பழமொழிகளைத் தொகுத்து பழமொழி அகராதி, இலக்கியச் சொல்லகராதி, தமிழ் இலக்கிய அகராதி அகரவரிசை என்று ஒரு துறைச் சிறப்பு அகராதிகளும் பல தோன்றின என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"**அகராதியின் வளர்ச்சி**"

இராமராசன், எஸ்.கே. *(1989)* பெருஞ்சொல் அகராதித் துறை, அகராதிக்கலைக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அகராதியின் அவசியம் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இலக்கிய.

இலக்கணத்தைப் பொருள் குழப்பமின்றி உணர அகராதிப் பயன்படும். தொல்காப்பியரின் எண்ணம் இதுவானமையால் இடையியல், உரியியலில் பல சொற்களுக்கு விளக்கம் தந்தார். நிகண்டுகள் அகவல், வெண்பா, அறுசீர், எண்சீர், விருத்தம், கட்டளைக் கலித்துறை என்ற வடிவிலமைந்தன. நிகண்டு கற்று செய்யுள் எழுதியோர் நிகண்டுப் புலவர்கள். சதுரகராதிக்குப் பின் பல அகராதிகள் தோன்றின. தற்காலத்தில் இராமசுப்பிரமணிய நாவலர் உரிச்சொல் பனுவலை இயற்றியுள்ளார் என்றும் அகராதிக் கலை காலந்தோறும் வளர வேண்டிய ஒன்று என்றும் கூறப்பட்டுள்ளது.

**"அச்சேறாத தமிழ் நிகண்டுகள்"**

*சற்குணம், மா. (1987) ஆய்வுக்கோவை-19:2, பக்.118-123, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.*

அச்சேறாத தமிழ் நிகண்டுகள் பற்றிய குறிப்புகள் இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளன. அச்சேறாத நிகண்டுகள் சுவடி நிலையில் உள்ளவை, பெயரளவில் மட்டும் உள்ளவை என இருவகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன என்றும், அகராதி எதுகை, அபிதான மணிமாலை, கயிலாய உரிச்சொல் போன்ற சில நிகண்டுகளில் காணப்படும் காலம், ஆசிரியர், தொகுதி, சொற்கள், பதிப்புகள் போன்ற விவரங்களைத் தனித்தனித் தலைப்பினில் செய்தியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. பதிப்பாசிரியர் சிலருடைய குறிப்புகளிலிருந்து வேறு சில நிகண்டுகளைப் பற்றிய செய்திகள் தெரிய வருவதாகக் கூறி, உசிதசூடாமணி நிகண்டு, பொருள் விளக்க நிகண்டு என்று அவற்றின் பெயர்களை வரிசைப்படுத்திக் கூறி, அந்த நிகண்டுகளைப் பற்றித் தெரியவரும் குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

**"அரசஞ்சண்முகனாரின் நவமணிக் காரிகை நிகண்டு"**

*ஞானசம்பந்தன், கு. (1986) ஆய்வுக்கோவை-18, தொகுதி-2, பக்.159-164, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.*

அரசஞ்சண்முகனாரின் நவமணிக் காரிகை நிகண்டு பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந் நிகண்டு பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும், ஒன்பது வகை மணி போன்ற செய்திகளைக் கொண்டு கட்டளைக் கலித்துறையில் பாடப்பெற்றது என்றும், மற்ற நிகண்டுகள் போலன்றி நூல் முழுமையும் அந்தாதியாக அமைந்துள்ளது என்றும், ஆறு தொகுதிகள் பொருள் வகையும், பண்பு, செயல் பற்றி மூன்று தொகுதிகளாக மொத்தம் ஒன்பது தொகுதிகளைக் கொண்டுள்ளது என்றும், நூல் கிடைக்காது கைப்பிரதியே கிடைத்துள்ளதாகவும், 8 தொகுதிகள் கிடைக்காது தெய்வப்பெயர் தொகுதி மட்டுமே கிடைத்துள்ளதாகவும், அந்தத் தெய்வப்பெயர் தொகுதியில் கூறப்பட்டுள்ள செய்திகள் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**"அரபு-தமிழ் அகராதியின் அளவீடும் சில சிக்கல்களும்"**

*அஜ்மல்கான், பீ.மு. (மார்ச் 1989) அகராதிக் கலைக் கருத்தரங்கு, பெருஞ்சொல் அகராதித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

இக்கட்டுரையில் அரபு-தமிழ் அகராதியின் தேவை, அமைப்பு, பயன்பாடு, சிக்கல்கள் போன்றவை விளக்கப் படுகின்றன. 1905 ஆம் ஆண்டு வெளியான முதல் அகராதி 3 எழுத்துக்களுக்கு மட்டுமே பொருள் கூறியதாகவும் 1913-லும், 1937-லும் வெளியான அகராதிகள், அகராதிப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே பயன்படும் வகையிலும் 1983-ல் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தாரால் வெளியான அகராதியே சிறந்த நிலையில் அமைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. அகராதி உருவாக்கச் சிக்கல்களாக வருகை நிலையிலும், சான்றுகள் நிலையிலும் காணப்படும் சிக்கல்கள், ஒலி நிலையிலும், ஒலியன் நிலையிலுமான சிக்கல்கள், உருபன் மற்றும் இலக்கண நிலை சிக்கல்கள், சொற்பொருள் வகையிலான சிக்கல்கள் என்று நான்கு வகைச் சிக்கல்களின் காரணகாரியங்கள் எடுத்துக் காட்டுகளுடன் விளக்கப்படுகின்றன.

**"அருகிய சொற்கள்"**

மல்லிகா, பா. (1987) ஆய்வுக்கோவை-19, தொகுதி-2, பக்.258-261, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

மலையாளத்தில் வழக்கில் இருக்கும் சொற்களில் சில அருகிய சொற்களே தமிழில் உள்ளன என்பதைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சதுரகராதியே அகராதி நூல்களுக்கெல்லாம் முதல் நூலாகவும் வழிகாட்டியாகவும் விளங்குகின்றது. 1957-ல் கந்தையாப் பிள்ளை தொகுத்த செந்தமிழ் அகராதியில் பல சொற்கள் மலையாள மொழியில் காணப் படுகின்றன. அவை தமிழில் அருகிய சொற்களாகும்.

| | | | |
|---|---|---|---|
| (எ-டு) | அசூயை | - | பொறாமை |
| | அச்சாறு | - | ஊறுகாய் |
| | அணர்த்தம் | - | துன்பம் |
| | உத்தமம் | - | நன்மை |

இவை போன்ற எண்ணற்ற சொற்கள் மலையாளத்தில் இன்று வழக்கில் உள்ளன. அச்சொற்களில் ஒருசில தமிழில் செய்யுளிலோ, வழக்கிலோ அருகிக் காணப்படுகின்றன.

**"அரும்பத உரையும் அகராதிக் கலையும்"**

வீராசாமி, தா.வே. (1989) கட்டிலேற்றச் சொற்பொழிவு, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இக்கட்டுரை, சிலப்பதிகார அரும்பத உரையாசிரியரின் உரையைக் கொண்டு அதில் காணப்படும் அகராதிக் கூறுகளைப் பற்றிக் கூறுகின்றது. சிலப்பதிகாரத்திற்குப் பொருள் கூறும் பதிவுகளில் 1800 பதிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன என்றும், உரையாசிரியர் தாம் எடுத்துக் கொண்ட நூலில் உள்ள கடினமான, பொருள் விளங்காச் சொற்களுக்கு உரை எழுதும் முயற்சியால், ஆசிரியரின் அகராதிக்கலையின் தொகுப்புக் கூறுகள் நன்கு புலப்படுகின்றன என்றும், தலைச் சொல்லிற்கு இலக்கணக் குறியீடு கொடுத்தும், அருகிய பொருளுக்கு மேற்கோள்காட்டியும்,

ஒரு பொருள் பல சொற்கள் வருமிடத்தில் சுருங்கக்கூறியும், ஒரு சொல் பல பொருள் இருப்பின் முதன்மை தரவேண்டியதை முதலிலும் மற்ற பொருள்களை இரண்டாம், மூன்றாம் நிலையிலும் கொடுத்திருப்பதையும் காணும்போது ஆசிரியரின் உரையில் அகராதிக் கூறுகளைக் காண முடிகின்றன. மேலும் இவ்வுரை தொல்காப்பிய மரபை அடியொற்றியும் பெயர், வினை, அசைச்சொல், வேற்றுமை போன்ற இலக்கண வரையறை களையும் கொண்டு எழுதப்பட்டுள்ளது என்றும், பிற மொழிச் சொற்கள், ஒரு சொல் பல பொருள், சொற்பொருள், உவமை, உருவகம், பண்பாடு எனச் சிறு தலைப்பிட்டுச் சில காட்டுகள் கொடுத்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**"அரும்பொருள் விளக்க நிகண்டு"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (1989) தமிழின் மறுமலர்ச்சி. தொகுதி-2, பக்.343-372, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

அரும்பொருள் விளக்க நிகண்டினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். முதலில் பல்வேறு வகையான நிகண்டுகளின் வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இந்நிகண்டின் ஆசிரியர் அருமருந்தைய தேசிகர் என்றும் சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, அகராதி நிகண்டு, கயாதர நிகண்டு என்பனவற்றிலுள்ள ஒரு சொல் பல்பொருட் பெயர்களைத் தொகுத்து 700 விருத்தங்கள் உள்ளன என்றும், இதன் காலம் கி.பி.1763 என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்நிகண்டின் ஏட்டுப் பிரதிகள் கிடைத்தமை பற்றியும் அவற்றைச் சரிபார்த்து அச்சிட்ட முறையையும் இக்கட்டுரை விளக்குகின்றது.

**"அரும்பொருள் விளக்க நிகண்டு"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (1928) செந்தமிழ், தொகுதி - 27, பக்.328.

அரும்பொருள் விளக்க நிகண்டின் தோற்றம், அமைப்புப் பற்றி இக்கட்டுரை விளக்குகின்றது. சென்னை அரசாங்க

கையெழுத்துப் புத்தகச் சாலையிலிருந்து இந்நிகண்டு கிடைக்கப் பெற்றது. இதன் ஆசிரியர் அருமருந்தைய தேசிகர் என்பவர். இந்நூ 166 ஆண்டுகளுக்கு முன் தன் குருவின் கட்டளையின் பேரில் அவர் தலைமையில் வெளியிடப்பட்டது என்றும், பிற நிகண்டுகளான் சூடாமணி, உரிச்சொல், அகராதி நிகண்டு, கயாதரம் போன்றவற்றை ஆராய்ந்து இந்நூல் செய்யப்பட்டது என்றும், சூடாமணி நிகண்டின் பதினோராவது தொகுதி முறையைப் பின்பற்றியது என்றும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**"அறிவியல் சிறப்பகராதிகள்"**

*சித்திரபுத்திரன், எச். (1989) வளர்தமிழில் அறிவியல், 2-வது கருத்தரங்கு. பக்.430-442, அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழகம், தஞ்சாவூர்.*

அறிவியல் சிறப்பகராதிகளின் அமைப்பு, அதன் பயன்பாடு பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒன்றிற்கு மேற்பட்ட சொற்களை உள்ளடக்கி ஒரே தொகுதியாக வரும் அகராதி, குறிப்பிட்ட ஒரு சொற்களை மட்டும் உள்ளடக்கி வரும் அகராதி என்று அறிவியல் அகராதி இரண்டு வகைப்படும். இந்த அகராதி உருவாக்குவதற்குச் சொல்தேர்வு, சொல்தொகுப்பு, அகராதி அமைப்பு, பொருள் கட்டுமானம் போன்றவை அமையவேண்டும் என்றும், அகராதியின் தன்மைக்கு ஏற்பவே சொற்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றும், தேர்வு செய்த சொற்களை வரன்முறைப்படுத்தும்போது, சொற்களின் பயன்பாடு, எல்லை, வருகைமுறை, வருகை எண்ணிக்கை, சொல்லின் தன்மை போன்ற நெறிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்றும், அறிவியல் விளக்கங்கள் தெளிவாக எளிய நடையில் உலக, கருத்துப் பொருள்கள் தெளிவுடையதாக இருக்க வேண்டும் என்றும், கூட்டுச் சொற்களின் பொருள் விளக்கத்தில் மயக்கம் தராத வகையில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் விவரிக்கின்றது.

**"அறிவியல் தமிழ்ச் சொல்லாக்கத்திற்குச் சில நெறிமுறைகள்"**

சின்னராஜ், சொ. & சாம் டேனியல், பி. (1989) வளர்தமிழில் அறிவியல் 2-வது கருத்தரங்கு, பக்.479-481, அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர்.

அறிவியல் சொற்கள் தமிழில் எவ்வளவு ஆக்கப்படுகின்றன என்பதைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அறிவியல் சொற்களைத் தமிழாக்கம் செய்யும்போது ஒலிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு ஆகிய முறைகளிலும் ஆக்கம் செய்யலாம் என்பதை எடுத்துக்காட்டுக் கொண்டு விளக்கியும் அவ்வாறு மொழிபெயர்ப்புச் செய்யும்போது சொல்ல வந்த கருத்துத் தெளிவாக அமையும் வகையிலும், தமிழாக்கம் செய்யும்போது அவை தமிழ்ச் சொற்களாகவே ஆகிவிடும் என்றும், அடிச்சொற்களுடன் ஒட்டுச் சொற்களை இணைத்து உருவாக்குவது எளிய முறை என்றும், அவை ஒவ்வொன்றும் தெளிவாக விளக்கப்படுகின்றது.

**"ஆய்வடங்கலில் காணும் சிக்கல்கள்"**

வேங்கடராமன், சு. (1986), அகராதிக்கலைக் கருத்தரங்கு, தொகுப்பியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

ஆய்வடங்கல்கள் தயாரிக்கும்போது ஏற்படும் சிக்கல்களை, அகிலன், மு.வ. ஆகியோரின் ஆய்வடங்கல்களுக்குப் பணி செய்தபோது ஏற்பட்ட அனுபவங்கள் இவண் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. எழுத்தாளர்கள், வாசகர்கள், பதிப்பாசிரியர்கள், பல்கலைக்கழகம் உள்ளிட்ட எல்லா நிலைகளிலும் சரியான பாதுகாப்பின்மையால், ஆய்வாளர்களின் உண்மையான உழைப்பின் காரணமாகவும், ஆய்வின்மீது உள்ள பற்றின் காரணமாகவும், பொருட்செலவு, உடல் அயர்வு ஒன்றும் பாராட்டாது இருந்தால் மட்டுமே நல்ல சிறந்த ஆய்வடங்கலை உருவாக்க முடியும் என்பது விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

**"இடப்பெயர்த் தொகுப்புகள்" (பட்டியல்கள், அகராதிகள்)**

நாச்சிமுத்து, கி. (மார்ச்-சூன் 1989) தமிழ்க்கலை, தமிழ்-7, கலை-1,2, பக்.44-55, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அகராதிகளில் எவ்வகையான இடப்பெயர்களைக் கொடுத்தல் வேண்டும் என்றும், நிகண்டுகளில் கொடுத்துள்ள இடப்பெயர் முறைகளையும் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பழங்காலத்திலும், பக்திக் காலத்திலும் இடப்பெயர்கள் எவ்வாறு தொகுக்கப்பட்டன என்றும், ஆங்கிலேயர் வருகைக்குப்பின் அவை எவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ளன என்பதும் விளக்கப்பட்டுள்ளன. இடப் பெயர்களின் தொகுதிகளைப் பட்டியல், அட்டவணை முறை, கலைக்களஞ்சிய முறை, அகராதி முறை எனப் பல உட்தலைப்புகளின் கீழ் ஆராயப்பட்டுள்ளன. இடப் பெயர் அகராதிகள் எங்கெங்கு வெளியிடப்பட்டுள்ளன என்றும், இடப்பெயர் அகராதியின் நோக்கம், அதன் முறை, ஆங்கில இடப்பெயர் அகராதிகள் ஆகியவை விளக்கப்படுகின்றன. இடப்பெயர் அகராதியின் அமைப்பு, தலைப்புச்சொல் வருமிடங்கள், வரலாற்று மாற்று வடிவங்கள், பொருள்கள், மீட்டுருவாக்கமும் சொல்லாக்கமும், சொற்பொருள் விளக்கம் என்று ஐந்து பகுதிகளாக அமையலாம் என்றும், அந்தப் பகுதிகள் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கமும் செய்யப்பட்டுள்ளது.

**"ஊழ் என்ற சொல்லின் பொருள் – கலைஞருக்கும் பிற உரையாசிரியருக்கும் உள்ள வேறுபாடு"**

மாணிக்கம், ச. (1987), ஆய்வுக்கோவை-19, தொகுதி-2, பக்.262-267. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

**ஊழ்** என்ற சொல்லின் பொருள் பற்றிப் பிற உரையாசிரியர்களுக்கும், கலைஞர் கருணாநிதிக்கும் உள்ள வேறுபாட்டைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். **ஊழ்** என்ற சொல்லுக்குப் பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி, வினை, பழண்ம எனப் பல பொருள்கள் உள்ளன. ஊழாவது முன்பு

செய்த வினை பின்பு விளையும் முறையே என்று மணக்குடவரும், இருவினைப் பயன் செய்தவனையே சென்றடைவதற்கு ஏதுவாகிய நியதி என்று பரிமேலழகரும், மேலான சென்மத்தின் வினைப் பயனைச் சொல்வது என்று பரிதியாரும், பழம் பிறப்புகளிற் செய்த இருவினைப் பயன் செய்தவனைச் செய்த முறைப்படி சென்றடையும் இயற்கை ஒழுங்கு என்று பாவாணரும், இருவினைப் பயன்களும் செய்தவனையே நாடிநிற்கும் முறைமை என்று கா.சு.பிள்ளையும், ஊழ் என்பது செயல்திறனின் முதிர்ச்சி என்று மு.கருணாநிதியும் குறிப்பிட்டுள்ளதாக இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**"ஒருசொல் பல்பொருள், பொருள் விரிவையும், வளர்ச்சியையும் அகராதியில் காட்டும் முறை"**

*சுப்பிரமணியன், பா.ரா. (ஏப்ரல் 1984), அகராதிக்கலைக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

ஒரு சொல்லுக்குப் பொருள்களை முறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களையும், முறைப்படுத்தும்போது மேற்கொள்ள வேண்டிய நியதி ளையும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒரு சொல்லுக்குப் பல பொருள் கொடுக்கும் முறை எடுத்துக்காட்டுடன் விளக்கப்பட்டுள்ளது. சில பொருள் முன்னர்க் கொடுத்திருக்கும் பொருளுக்கு எந்த வகையிலும் பொருத்தம் இல்லாது இருக்கும்போது அதனை எங்ஙனம், எங்கே கொடுப்பது என்பதும் விளக்கப்பட்டுள்ளது. சொல்லுக்குப் பொருள் கொடுக்கும் முறையை ஆங்கில அகராதி மூன்றில் கொடுக்கப் பட்டுள்ளதைக் கூறி, பொருள் கால முறைப்படி கூறும்போது சில விடுபாடுகளும், குறைபாடுகளும் இருக்கும் என்றும், பொருள்களைத் தருக்க அடிப்படையில் பாகுபாடு செய்து, பிரிவுகள் அமைத்து ஒவ்வொரு பிரிவுனுள்ளும் ஓரினப் பொருள்கள் ஒவ்வொன்றாக அமையும் என்றும், எல்லாச் சொற்களின் பொருளும் பொது, சிறப்பு, கருப்பொருள், பருப்பொருள் என்று விரிவடையும் என்றும், சில பொழுது பருப்பொருள் கருப்பொருளின் பின்னர் வருவதும் உண்டு என்றும் கூறப்பட்டுள்ளது.

**"ஒருபொருட் பல சொல் – அகராதிப் பதிவு"**

*மாதையன், பெ. (1987, 1988) தமிழ்ப்பொழில், துணர் 61, மலர் 12, பக்.367-379, துணர் 62, மலர் 1, பக்.21-24, கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.*

இக்கட்டுரை, அகராதிப் பதிவில் ஒருபொருள் பலசொல்லை எந்த நெறிமுறையில் அமைக்க வேண்டும் என்றும், தற்போதைய அகராதிகளில் காணப்படும் குறைகளையும் விளக்குகிறது. தமிழில் வெளிவந்துள்ள ஒருமொழி இருமொழி அகராதிகளில் ஒருபொருட் பலசொல் பதிவுகள் பற்றியும், இதில் ஒருமொழி அகராதிகள் சிக்கல்வாய்ந்தவை என்றும், இத்தகு சிக்கல்களுக்கு முறையான குறுக்கு நோக்கீடு இன்றிக் கொடுத்திருப்பதே காரணமாய் அமைந்து உள்ளதைச் சான்று மூலம் விளக்கப்படுகிறது. ஒருபொருட் பல சொற்களை அகராதியில் பதிவாக அமைக்கும்போது ஏற்படும் குறைபாடுகள் சிலவற்றைச் சென்னைப் பல்கலைக்கழக அகராதியின் மூலம் விளக்கப்பட்டுள்ளன. இத்தகு குறைபாடுகள் நீங்க ஒருபொருட் பலசொல் பதிவமைப்பில் கைக்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் சிலவற்றை உரிய சான்றுகள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

**"ஒன்று எண்ணுப்பெயர் – ஓர் ஆய்வு"**

*செயக்குமார், சி. (1987). ஆய்வுக்கோவை 19, தொகுதி-2, பக்.354-359, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.*

'ஒன்று' எண்ணுப்பெயரைப் பற்றி ஆசிரியர்களின் கருத்துக்களையும், அது இலக்கணத்தில் பெறும் இடத்தையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பிற எண்ணுப் பெயர்களுக்கெல்லாம் அடிப்படையாய் அமைவது ஒன்று என்னும் எண்ணுப்பெயராகும். இது ஓர், ஒரு, ஒருக்கம், ஒருக்கு, ஒருத்தன் எனப் பல மாற்று வடிவம் உடையது என்றும், ஒன்றின் மூல வடிவம் ஒறு என்று மு.வ.வும், ஒக் என்று கால்டுவெல்லும்

கூறியுள்ளதாகவும், ஒரு, ஓர், ஒருவர், ஒருவன், ஒற்றை என்ற சொற்கள் எங்கெங்கு எப்படி, எப்படி வரும் என்பதைச் சான்றுகள் மூலம் விளக்கியும் கூறப்பட்டுள்ளது. ஒன்று என்னும் எண்ணுப் பெயர் தொடர்நிலை, வாக்கிய நிலை, மரபுத்தொடர் போன்றவற்றில் பல்வேறு பிற பொருள்களைத் தருகின்ற அமைப்பில் ஆளப்படுவதாகக் கூறப்படுகிறது.

**"கயாதர நிகண்டு"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி-2, பக்.374-385, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

இக்கட்டுரை, கயாதர நிகண்டினைப் பற்றி விளக்கிக் கூறுகின்றது. கயாதரம் முதலில் கயாகரம் என்று வழங்கியதாகவும், அதன் ஆசிரியரான கயாதரரைப் பற்றியும் கூறுகின்றது. கயாதரத்தைப் பதிப்பிக்க மூன்று ஓலைப் பிரதிகளும், ஒரு கடிதப் பிரதியும் கிடைத்தன என்றும், அதனைப் பதிப்பித்தவர்களைப் பற்றியும் இந்நிகண்டில் பதினொரு தொகுதிகள் அமைந்து உள்ளன என்பதையும், கற்றவர்கள் நினைவில் வைக்கத்தக்க வகையில் இந்நிகண்டு அமைந்துள்ளது என்றும், இந்நூலின் பயன்களாக ஒரு சில பெயர்களின் உண்மை வடிவத்தைக் கூறுவதும், ஒரு சில பெயர்களுக்குப் பொருள் வரையறை செய்தற்கண்ணும், திவாகரத்தைத் திருத்தமுறப் பதிப்பிப்பதற்கும் பயன்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. நூலில் காணும் சில மரபுகளும், பதினொராந் தொகுதி பதிப்பித்தலிற் சில நியமங்களை ஆசிரியர் மேற்கொண்டவற்றையும் இக்கட்டுரை விளக்குகின்றது.

**"கலைக்களஞ்சிய உருவாக்கம் சில அடிப்படைக் குறிப்புகள்"**

மூர்த்தி, து. (ஏப்ரல்-சூன் 1983) மொழியியல், தொகுதி-6, எண்-4, பக்.75-92, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர்.

இக்கட்டுரையில் கலைக்களஞ்சியம் உருவாக்குவதில் ஏற்படுகின்ற சிக்கல்களும், களஞ்சிய அமைப்பு முறையும்

விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. கலைக் களஞ்சியம் உருவாக்குதற்குரிய அடிப்படைக் குறிப்புகள் பொதுச் செய்திகள், சிறப்புச் செய்திகள், வடிவச் செய்திகள் என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பொதுச் செய்திகள் வெளியிடுவோர், பதிப்பாசிரியர், கட்டுரையாளர்கள் போன்றவர்கள் பற்றிப் பொதுவாகக் கூறப்பட்டுள்ளன. சிறப்புச் செய்திகளில்தான் கட்டுரையின் அமைப்பு, தொடர் ஒழுங்கு, கூறியது கூறாமை, நடுநிலைமை, உலகக் கண்ணோட்டம், மொழிநடை, மொழி அமைப்பு, நூலடைவு, அதன் தன்மை முறைமை போன்ற முக்கியக் கூறுகள் எப்படி, எப்படி அமைய வேண்டும் என்று விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. வடிவ அமைப்பில் சொற்களஞ்சியக் கட்டமைப்பு, தோற்றம், பிற்சேர்க்கைகள், துணைத்தொகுதிகள், பிழைப்பட்டியல், துண்டு இணைப்புத்தாள், சுருக்கக் குறியீட்டு விளக்கங்கள் போன்றவை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

**"கலைக்களஞ்சியக் கலை"**

மோகனசுந்தரம், சிறுவை. (1984-85). உயராய்வு, தொகுதி-2,3. பக். 69-88. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

இந்திய மொழிகளில் கலைக்களஞ்சியம் தோன்றிய விதத்தை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்திய மொழிகளிலேயே தமிழில்தான் முதன்முதலில் கலைக்களஞ்சியம் தோன்றியது என்றும், அக்கலைக் களஞ்சியங்கள் எவ்வாறு தொகுக்கப்பட வேண்டும் என்ற விதிமுறைகளையும் இக்கட்டுரை ஆராய்கின்றது. மேலும் நம்நாட்டுக் கலைக்களஞ்சியங்கள் என்னும் தலைப்பின்கீழ் சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் தோன்றிய கலைக் களஞ்சியங்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

**"கலைக்களஞ்சியக் கலை"**

மோகனசுந்தரம், சிறுவை. (ஜூன், ஜூலை, ஆகஸ்டு 1984), செந்தமிழ்ச்செல்வி, பக்.406, 446, 486.

இக்கட்டுரை வெளிநாடுகளில் கலைக்களஞ்சியக் கலை எவ்வாறு சிறந்துள்ளது என்பது பற்றியும், இந்திய நாட்டிலும்,

இந்திய மொழிகளிலும் இக்கலை எந்த நிலையில் உள்ளது என்பதைப் பற்றியும், தமிழில் இக்கலை எவ்வாறு வளர்ந்து வருகிறது என்பதையும் விளக்குகின்றது. இந்திய மொழிகளிலேயே தமிழில்தான் தமிழ்க் கலைக் களஞ்சியம் பிரிட்டானிகா கலைக்களஞ்சியத்தை முன்மாதிரியாகக் கொண்டு தோன்றியது என்றும், இது 1953-ல் அச்சுக்குச் சென்று 1963-ல் 9 தொகுதிகளாக வெளிவந்தது என்றும், மேலும் குழந்தைகள் கலைக் களஞ்சியமும் பிற கலைக் களஞ்சியங்கள் பற்றிய குறிப்புகளும் காணப் படுகின்றன. நம்நாட்டுக் கலைக்களஞ்சியம் என்ற தலைப்பின்கீழ் சமஸ்கிருதம், கன்னடம், மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளில் கலைக் களஞ்சியங்கள் உருவாக்க வரலாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"**கலைக்களஞ்சியத்தில் தமிழியல் பொதுக்கட்டுரைகள்**"

*மோகனராசு, கு. (1974) தமிழாய்வு, தொகுதி-3, பக்.61-83, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*

இக்கட்டுரை, கலைக்களஞ்சியத்தில் வெளிவந்துள்ள தமிழியல் பற்றிய 25 கட்டுரைகளைப் பற்றிய மதிப்பீடாக அமைந்துள்ளது. தெ.பொ.மீ., மு.வ. போன்ற அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளும் அவற்றின் சிறப்புக் கூறுகளும் விளக்கப் பட்டுள்ளன. அ.ச.ஞானசம்பந்தம் எழுதிய தமிழ் லெக்சிகன் என்ற கட்டுரையில் அதன் தோற்றமும் வளர்ச்சியும் விளக்கமாகவும், அகராதி, அகராதிக்கலை என்ற இரண்டு கட்டுரைகளின் நுண்ணிய வேறுபாடுகளும், கலைக்களஞ்சியமும் நாளைய கடனும் என்ற தலைப்பில் கலைக்களஞ்சியக் கட்டுரைகளில் காட்டிய மேற்கோள்கள் எந்த நூலிலிருந்து எடுத்தாளப்பட்டன என்பதும் சுட்டிக் காட்டப்படுள்ளன. மேலும் இனிவரும் காலங்களில் இந்தக் குறைகள் களையப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

"**கலைச்சொல்லாக்கத்தின் மொழி நிலை**"

*சரோஜா மேரி, சு. (1981), ஆய்வுக்கோவை 13, தொகுதி-2, பக்.123-128, அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.*

மொழியில் கலைச்சொல் உருவாக்கம் அமையவேண்டிய நெறிமுறைகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒரு மொழி சிறப்படைய, நாடும் மக்களும் காரணம் என்றும், அறிவியலின் புதிய கலைச் சொல்லாக்கத்தினையும், வடமொழிப் பற்றாளர் செய்த தவறினையும், மொழித்திறன் விரும்புவோர் கொண்ட சொல்லாக்கத் திறத்தினையும் விளக்குகின்றது. ஆங்கில அமைப்பிலேயே எளிய முறையில் கலைச்சொல் உருவாக்கம் செய்ய வடமொழிச் சொற்கள் பயன்படுகின்றன என்று எடுத்துக்காட்டு மூலம் விளக்கப்படுகின்றது. ஆங்கில அடிப்படைச் சொல் ஒன்றாக இருக்க தமிழில் பல சொற்களாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலைநாட்டு மொழிகளுக்கு ஈடாகத் தமிழ் வளர்ச்சியடைய பல கலைச்சொற்கள் புதிதாக உருவாக்கம் செய்யப்பட வேண்டும் என்று மொழியப்பட்டுள்ளது.

"**கலைச்சொல் உருவாக்கமும் அதன் பயன்பாடுகளும்**"

*மதிவாணன், ஒப்பிலா. (1989) வளர்தமிழில் அறிவியல், 2-வது கருத்தரங்கு, பக்.516-523, அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழகம், தஞ்சாவூர்.*

கலைச்சொல் ஆக்கம் என்றால் என்ன? அதன் பயன்பாடுகள் போன்றவை இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. ஒரு சொல்லுக்குப் பல பொருள் தருகின்ற நிலையில் கலைச்சொற்கள் உருவாக்கப்படுகின்றன என்றும், ஆட்சித் துறையில் தமிழ்ப் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் கலைச்சொற்களைச் சொல் சுருக்கம், பொருளறிந்து ஆக்குதல், தமிழ்வழி மரபுச்சொல், தமிழாக்கம் என்ற நான்கு நிலையில் பிரிக்கப்பட்டு அவை விளக்கப்படுகின்றன. பொருட்செறிவும், தெளிவும், சொல் சுருக்கமும் உடைய சொற்கள்தான் கலைச்சொல்லுக்கு வாழ்வளிக்கும் என்றும், கலைச்சொல் காலநிலைக்கு ஏற்ப மாறுபடும் என்றும், கலைச்சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைக் கொண்டிருக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"கலைச்சொற்களின் பயன்பாடு"**

சிதம்பரநாத பிள்ளை, வே. (1989) வளர்தமிழில் அறிவியல், 2-வது கருத்தரங்கு, பக்.454-458, அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர்.

கலைச்சொற்களின் பயன்பாடு பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கலைச்சொற்களை எளிமையாக்கித் தருதல், சுருக்கித் தருதல், விளக்கமாகத் தருதல், தெளிவினைத் தருதல், நினைவாற்றலைத் தருதல், அறிவாற்றலை வளர்த்தல் என்று ஆறு குறுந்தலைப்பின்கீழ் ஆக்கம் செய்யலாம் என்றும், அவை ஒவ்வொன்றினையும் எடுத்துக்காட்டு மூலம் விளக்கியும் கூறப்பட்டுள்ளது. இறுதியாகக் கலைச்சொற்கள் புதிதாகப் படைக்கும்தோறும் எண்ணிறந்த புதிய படைப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"கலைச்சொற்றொகுதிகளில் ஒலிபெயர்ப்பு – ஓர் ஒப்பாய்வு"**

இராதா செல்லப்பன், (1981) ஆய்வுக்கோவை 13, தொகுதி-2, பக்.53. அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

கலைச்சொற்களின் தமிழ் ஒலியமைப்பில் இடம்பெறாத பிறமொழி மெய்யொலிகளை, ஆசிரியர்கள் தற்போது ஒலிபெயர்த்துள்ள முறைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கல்லூரித் தமிழ்க் குழுவினரால் தயாரிக்கப்பட்ட கலைச்சொல்லகராதிகள், இலங்கை அரசினால் வெளியிடப் பட்ட கலைச்சொல்லகராதி ஆகிய இருநூல்களில் உள்ள ஒலிபெயர்ப்புச் சொற்கள் ஒப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆங்கிலக் கலைச்சொற்களில் இடம்பெறும் உரசொலிகள், மூச்சொலிகள், வல்லொலிகள் முதலியவை தமிழ்மொழி அமைப்பில் இல்லை என்றும், ஆங்கிலச் சொற்களிலுள்ள ஒலிப்பின ஒலிகள் தமிழில் எவ்வாறு பெயர்க்கப்பட்டுள்ளன என்றும், ஆங்கிலச் சொற்களைப் பெயர்க்கும் போது மரபிலக்கணங்களை ஒட்டியும், நெகிழ்ச்சி கொடுத்தும் கல்லூரித் தமிழ்க் குழுவினர் ஒலிபெயர்த்துள்ளனர் என்றும், இலங்கைக் குழுவினர் மரபிலக்கணத்தை ஒட்டியே பெயர்த்துள்ளனர் என்றும் பேசுகின்றது.

**"கழகத் தமிழ் அகராதி"**

கணபதிப் பிள்ளை, மு. (நவம்பர் 1966), செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு-41, பக்.138, இலங்கை வானொலி.

இக்கட்டுரை, இலங்கை வானொலியில் மு.கணபதிப் பிள்ளை வழங்கிய மதிப்புரையாகும். அகராதி அ என்ற எழுத்தை முதலாகக் கொண்டு, அகரவரிசை என்றும், அகரமுதலி என்றும், பின்பு 1538-ல் தாமஸ் எலியட் என்பவர் மூலம் அகராதி என்ற பெயர் அமைந்ததாகவும் கூறப்பட்டுள்ளன. தமிழில் முதலில் அகராதி நிகண்டும் அதன் பின்னர் சதுரகராதியும் இதனை அடுத்து பல அகராதிகள் தோன்றியதாகவும் கூறப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த கழகத்தால் வெளியிடப்பட்ட கழக அகராதியில் மொழித் தூய்மையும், கருத்துச் செறிவும், விளக்கத் தெளிவும் காணப் படுவதாகவும், கலைச்சொற்கள் தடித்த சொற்களிலும் பொருள் விளக்கங்கள் தெளிவாக அமைந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளன.

**"கள் இறக்குவோர் பேச்சில் கலைச்சொற்கள்"**

மகேசுவரன், சி. (1981) மொழியியல், தொகுதி-5, எண்-2, பக்.43-49, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

இக்கட்டுரையில், கள் இறக்குவோர் பேச்சில் இடம்பெறும் கலைச்சொற்களின் தன்மைப் பற்றி ஆராயப்பட்டுள்ளது. கள் இறக்குவோர்கள் தங்களுக்கு என்றே தனியாகக் கலைச்சொற்களைக் கையாளுவதாகவும், அவர்கள் இடமாற்றம் செய்தாலும் மற்ற பேச்சு வழக்குகள் மாறுபட்டாலும் கள் இறக்கும் தொழில் தொடர்பான கலைச்சொற்கள் மாறுபடுவதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. கலைச்சொற்கள், கள் இறக்கப் பயன்படுத்தப் பெறும் கருவிகள், பனைவகை, பனை மரத்தின் உறுப்புகள், பனைபடுபொருட்கள், சில சிறப்பான தொடரியங்கள் என்ற மூன்று தலைப்பின்கீழ்க் கொடுக்கப்பட்டு அவற்றின் பொருள்களும் தரப்பட்டுள்ளன. இத்தொழில் கலைச்சொற்களில் அகணி, புறணி என்ற இரண்டும் பழந்தமிழ்ச் சொல்லான அகம், புறம் என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

**"கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கும் சில சொற்களின் விளக்கங்கள்"**

குளோரி கிறிஸ்டோபர், (1987) ஆய்வுக்கோவை 19, தொகுதி-2, பக்.84-89, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கும் சில சொற்களின் விளக்கங்களைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சொற்கள் ஒவ்வொன்றும் ஏதாவது காரணம் பற்றிக் காரணப் பெயர்களாக வழங்கி வருவதையும், பொருள் அடிப்படையில் பெயர் பெற்றதும், 16 சொற்களைக் கொண்டு விளக்குகின்றது. மொழிக்கு அடிப்படை ஒலி, எழுத்து, சொல் என்னும் இந்தச் சொற்கள் காலத்திற்கு ஏற்பவும், இடத்திற்கு ஏற்பவும் மாறுபடும் என்று கூறி 16 சொற்களும் விளக்கங்களுடன் கூறப்பட்டுள்ளன.

**"காலப்போக்கில் தமிழ் அகராதிகள்"**

முத்துச்சண்முகம் பிள்ளை, (மார்ச் 1989) அகராதிக்கலை கருத்தரங்கு, பெருஞ்சொல் அகராதித் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

சதுரகராதி முதல் பேரகராதி வரை அகராதித் தொகுப்பில் ஏற்பட்ட சிக்கல்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ் அகராதி ஒரு மொழியகராதி, இருமொழியகராதி, பன்மொழி அகராதி என மூன்று வகைப்படும் என்றும், ஒரு சொல்லுக்கு ஒவ்வொரு அகராதியிலும் ஒவ்வொரு எண்ணிக்கையில் பொருள் இருப்பதாகவும், தமிழ்மொழி அகராதியில்தான் முதன்முதலில் இலக்கணக் குறிப்புக் கூறப்பட்டது என்றும், இராட்லர் அகராதியில்தான் தலைச்சொல், கூட்டுச் சொற்களுக்கு ஆங்கிலத்தில் மட்டுமே பொருள் தந்துள்ளார் என்றும், வின்ஸ்லோ அகராதியில் செயவென் எச்சம், வினையடை போன்றவையும், ஒவ்வொரு சொல்லுக்கும் தமிழ்-ஆங்கிலப் பொருள் தரப்பட்டதாகவும், வினையைத் தொழிற்பெயர் வடிவில் தலைச்சொல்லாகக் கொடுக்கும் முறை முதலில் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில்தான் புகுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளன.

**"கிரியாவின் அகராதி"**

*தமிழ்க்குமரன், இரா. (ஆகச்டு 1992) மேலும், இதழ்-15, பக்.31-35.*

இக்கட்டுரை, கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியைப் பற்றிய விமர்சனமாக எழுதப்பட்டுள்ளது. இவ்வகராதி 1956-க்குப்பின் எழுந்த படைப்புகளிலிருந்தும், தகவல் தொடர்புச் சாதனங்களிலிருந்தும் வழங்கிய சொற்களைக் கொண்டு கணிப்பொறி வழியாகத் தயாரிக்கப்பட்டது என்றும், பெருவாரியான மக்கள் பேசும் தமிழை ஒதுக்கிவிட்டு நகர்ப்புறம் சார்ந்த, தகவல் தொடர்புகளில் ஆதிக்கம் செலுத்துகிற தமிழ் மட்டுமே இங்கு எழுத்துத் தமிழ் என்று கணக்கிடப்படுவதாகக் குறைபட்டுக் கொண்டும், சில சொற்கள் விடுபட்டும், சொற்களுக்குப் பொருள் விடப்பட்டும் இருப்பதைச் சில எடுத்துக் காட்டுகளைக் காட்டிக் கூறியும், தற்காலம், எழுத்துத் தமிழ் என்ற இரண்டு போர்வைகளில் தமிழன் கையைக் கொண்டே தமிழன் கண்ணைக் குத்தும் அவலம் மீண்டும் ஒருமுறை வெற்றிகரமாக அரங்கேறியிருக்கிறது என்றும், ஆசிரியர் இக்கட்டுரையில் விமரிசித்து இருப்பதைக் காணமுடிகிறது.

**"கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி"**

*மோகன், சிவகங்கை. (செப்டம்பர் 1992) நிகழ்-23, பக்.9-15.*

இக்கட்டுரை, கிரியாவின் தற்காலத் தமிழகராதியில் உள்ள குறை, நிறைகளைக் கூறுகின்றது. அருகிவரும் சொற்கள் எவை என்றும், சமூக வழக்கு, வட்டார வழக்குச் சொற்களில் எல்லா வட்டார, சமூகச் சொற்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், எந்தச் சமூகச் சொற்களும் விடக்கூடாது என்றும், சாதியைக் குறிக்கும் சொற்கள் தேவையில்லை என்றும், ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும், மற்றும் பிறமொழிச் சொற்கள் இலங்கைத் தமிழ் இலக்கியச் சொற்கள் போன்றவற்றில் உள்ள குறைபாடுகளையும் சில சொற்களுக்கு விளக்கங்களும், சில சொற்களுக்குப் படங்களும் கொடுத்திருப்பன சிறப்பு என்றும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**"குமரி மாவட்ட வயல் பெயராய்வு"**

*செயக்குமார், கி. (1989) அனைத்திந்தியத் தமிழ் இலக்கியக் கழக 3-ஆம் கருத்தரங்கு, தொகுதி-2, பக்.141-146, தஞ்சாவூர்.*

குமரி மாவட்ட தோவாளைத் தாலுகா, தாழக்குடி என்பதிலுள்ள வயல் பெயர்கள் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வயல்களின் மொத்த நிலப்பரப்பைப் புரவு அல்லது பத்து என்றும், இது வட்டம், வயல் என இரண்டாகப் பிரிக்கப்படும் என்றும், வயல் பெயர்கள் ஆள், சாதி, தெய்வம், தானம், ஊர், பட்டப் பெயர், காரணப்பெயர், இட அடையாளம், அமைப்பு, நிகழ்வுப் பெயர், பண்பு, இடம் போன்ற நிலைகளில் சுட்டப்பெறும் என்பதும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப் பட்டுள்ளது.

**"கூட்டு வினைகளும் பொருண்மையும்"**

*கார்த்திகேயன், ஆ. (1989) தமிழ்க்கலை, தமிழ்-7, கலை-1, 2, பக்.127-131, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

கூட்டுச் சொற்களைக் கண்டறிந்து அவற்றை அகராதியில் பதிவு செய்யும் முறையை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்றக் கூட்டுவினைகள் இடைச்செருகலால் வரும் வினைகள் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றும், கூட்டு வினைகளில் முதலில் வரும் பெயர்ச்சொல்லை ஒரு பெயரடையோ, வினையை ஒரு வினையடையோ தழுவி வராததன் மூலமாகவும் கூட்டு வினைகளைக் கண்டுபிடிக்க முடியும் என்பதைத் தகுந்த சான்றுகள் மூலம் விளக்கியும், கூட்டு வினையில் வரும் வினைச்சொல்லை மாற்ற முடியாது என்றும், கூட்டு வினைகள் சொற்பொருள் உணர்த்தும் தன்மை குறித்துச் சில சான்றுகள் மூலம் விளக்கப் படுகின்றன. கூட்டு வினைகள் குறிப்புப் பொருள் உணர்த்தாது கருத்துப் பொருள் உணர்த்துகின்றன என்றும், சில இரண்டு பொருளையும் சேர்த்து விளக்குகின்றன என்றும், கூட்டு

வினைகளில் அடிநிலைக் கிளவியாக விளங்கும் பெயர்ச்சொல் அக்கூட்டு வினையின் கருத்துப் பொருளைத் தருகின்றது என்றும், வினைச் சொல் குறிப்புப் பொருளைத் தந்து சில இடங்களில் பொருளேதும் தராமல் வருகின்றது என்றும் சுருக்கமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**"சங்க இலக்கிய உரைகளும், அகராதிச் சொற்பொருளும்"**

*மாதையன், பெ. (1989) அகராதிக்கலைக் கருத்தரங்கு, பெருஞ்சொல் அகராதித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

பொருள் வரையறை செய்வதற்கு உரைகள் எங்ஙனம் பயன்படுகின்றன என்பதைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சங்க இலக்கியத்திற்குப் பொருள் வரையறை செய்ய உரைகள் பயன்படுவதைக் கூறி, அவ்வுரைகளைச் சரிவரப் பயன்படுத்தாமையாலும், சொற்பொருள் வரையறையில் நேர்ந்துள்ள குறைபாடுகளைச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி, சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு எடுத்துக்காட்டுகள் மூலம் ஆசிரியர் விளக்குகின்றார். பொருந்தா உரைவிளக்கம், சொற்பொருளின்றிக் கருத்துப்பொருள் சுட்டல், ஒன்றிற்கு மேற்பட்ட பொருள் கூறல், பாடற்சொற்களை அப்படியே பொருளாகக் கூறுதல் போன்ற பல்வேறு குறைபாடுகள் சான்றுகள் மூலம் கூறப்பட்டுள்ளன.

**"சதுரகராதி முதல் தமிழ்ச் சங்க அகராதி வரை – சொற்கோவையின் வளர்ச்சியும் சிறப்புப்பெயர் சேர்ந்த முறையும்"**

*சண்முகம் பிள்ளை, மு. (ஏப்ரல் 1984) அகராதிக்கலைக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

சதுரகராதி முதல் தமிழ்ச்சங்க அகராதி வரை சொல்வளமும், பொருள் வளமும் எந்த அளவு வளர்ச்சி அடைந்துள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தொல்காப்பியத்தில் சொற்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுப் பெயர்ச் சொற்களே முதலிடம் பெற்றன என்றும்,

சொல்லுக்குப் பொருள் காணும் முறை உரிச்சொல் பனுவலிலிருந்து தொடங்கி நிகண்டு வரை வந்தது என்றும், நிகண்டுகளை ஒற்றிச் சதுரகராதியில் பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என்னும் இரண்டும் தந்துள்ளார். இதனை அடுத்து ஏராளமான அகராதிகள் வந்தாலும் தமிழ்ப் பேரகராதியில் தமிழ்ச்சொற்கள் நல்ல முறையிலும், புதிய சொற்கள் உடுக்குறியிட்டும் காண்பிக்கப்பட்டன என்றும், கூறப்பட்டுள்ளது. 20ஆம் நூற்றாண்டுத் தமிழ் அகராதியில் ஏராளமான சொற்கள் தொகுத்துக் கொடுக்கப்பட்டன என்றும், தமிழ்ச்சங்க அகராதியானது எல்லாவகையான சொற்களையும், பொருள்களையும் ஒரே அகராதி அமைப்பில் கொண்டு, வடமொழிச் சொற்கள் அதிகமாகவும், மூலங்கள் கிரந்த எழுத்திலும் எழுதப்பெற்றன. பின்னர் இலக்கியச் சொற்கள் பற்றிய இலக்கியச் சொல்லகராதி, இருமொழி அகராதி போன்றவை வெளிவந்து சொற்கோவையும், சிறப்புப்பெயர்களும் பெருகியே வந்தன என்றும் இக்கட்டுரை உரைக்கின்றது.

**"சதுரகராதியின் சிறப்புக் கூறுகள்"**

இன்னாசி, சூ. (மார்ச் - சூன் 1989) தமிழ்க்கலை, தமிழ் - 7, கலை - 1,2, பக்.12-20, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சதுரகராதியின் அமைப்பினையும், அதன் சிறப்புக் கூறுகளையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சதுரகராதி பெயர், பொருள், தொகை, தொடை என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகவும், சொற்கள் இதற்கு முன் வந்த அகராதியை விட அதிகமாக இருப்பதாகவும், பெயர், பொருள், தொகை, தொடை என நான்கும் சிறந்த முறையில் அமைந்திருப்பதாகவும், 19ஆம் நூற்றாண்டில் ஒன்பது பதிப்புகளைக் கண்டது சதுரகராதி ஒன்றே ஆகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"சில வழக்குச் சொற்கள்"**

*இரத்தினசாமி, பொ. (1974) ஆய்வுக்கோவை 6, பக். 601, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலைநகர்.*

இக்கட்டுரை, கன்னியாகுமரி மாவட்டம் அகத்தீசுவரம் தாலுகாவில் விவசாயப் பெருங்குடி மக்களிடையே விவசாயத்தில் வழங்கப்பட்டு வருகின்ற சில வழக்குச் சொற்களைப் பற்றியதாகும். விவசாயத்தில் நிலத்தைப் பண் படுத்துவதிலிருந்து, விதைவிதைத்து, நாற்றுநட்டு, தண்ணீர் பாய்ச்சி, எரு இட்டு, வயல் அறுவடை செய்வது வரை உள்ள எல்லா விவசாயச் சொற்களும் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. கல்லாதவர்களாக இருந்தாலும் கற்றவர்களாக இருந்தாலும் இந்த வழக்குச் சொற்கள் எல்லோருக்கும் பொதுவானவை என்று கூறப்பட்டுள்ளது.

**"சூடாமணி நிகண்டில் இடப்பெயர்த் தொகுதி"**

*சாரதா, சு. (1986) ஆய்வுக்கோவை 18, தொகுதி -2, பக். 107-111, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலைநகர்.*

சூடாமணி நிகண்டில் ஐந்தாம் தொகுதியாகிய இடப்பெயர்த்தொகுதி பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இடப்பெயர்கள், ஊர், நகரம் போன்ற பெரும் பெயர்களும் அடங்கும் என்றும், இந்த இடப்பெயர்கள் ஒருபொருள் பன்மொழி வகையைச் சார்ந்தன என்றும், பூமியைக் குறிக்க 44 பெயர்களும், மலையைக் குறிக்க 41 பெயர்களும், கடலைக் குறிக்க 37 பெயர்களும், நீர்நிலையைக் குறிக்க 29 பெயர்களும், ஊர் என்ற பொருளைக் குறிக்க 40 பெயர்களும், மேலும் வீதி, வீடு, அகழி, வழி போன்ற பொருளை அடிப் படையாகக் கொண்டு எழுந்த சொற்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**"சூழல் விளைவித்த சொற்களஞ்சியமும் சொற்பொருண்மையும்"**
வைத்தியலிங்கம், செ. (6.3.89), அகராதிக்கலைக் கருத்தரங்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இக்கட்டுரையில் சொற்பொருண்மை நோக்கில் அகராதிகளும், நிகண்டுகளும் அமைந்துள்ள பாங்கினையும், வெளிநாட்டார் ஆற்றியுள்ள தொண்டினையும் ஆசிரியர் நினைவு கூறுவதோடு, ஒரு சொல்லுக்குரிய பொருளை அதனுடைய சூழலாலேயே தீர்மானிக்க முடியும் என்பதைச் சான்றுகளுடன் விளக்குகிறார். (எ.கா.) கோளாறு என்றும், சொல்லுக்குத் 'தாறுமாறு', 'குற்றம்', 'சண்டை', 'உபாயம்', 'இலக்கு', எனும் பொருள்களை அகராதியில் காணலாம் என்றும், மதுரை போன்ற சில ஊர்களில் இதனைக் கோளாறாகச் செய்திருக்கிறான் என்று குறிப்பிடுகையில் மிகத்திறமையாக - நன்றாகச் செய்திருக்கிறான் எனப்பொருள்படும் என்றும் காட்டுகிறார். அடுத்து சொற்பொருண்மையில் ஒரு பொருட்பன்மொழி அமைந்துள்ள தன்மையையும் கூறுகிறார். மேலும் இந்தச் சொற் பொருண்மையானது காலத்திற்கும், இடத்திற்கும், சூழலுக்கும் ஏற்பவே அமையும் தன்மையைப் பெற்றுள்ளமையால், அகராதித் தொகுக்க நினைப்பவர்கள், பண்பும் அனுபவமு முடையவர்களோடு உரையாடிக் களஆய்வு செய்து சூழலுக்கேற்ற சொற்பொருண்மை காணுதல் வேண்டும் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

**"சூளாமணியில் வரும் மாற்றுப் பெயர்கள்"**
தேவபிரசன்னகுமாரி, ம. (1987) ஆய்வுக்கோவை 19, தொகுதி-2, பக்.182-185, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

சூளாமணியில் இடம்பெறும் மாற்றுப் பெயர்களைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மாற்றுப் பெயர்கள் பெயர் அல்லது பெயர்த்தொடருக்குப் பதிலிகளாகச் செயல்படும் என்றும், இதில் மூவிடப் பெயர், மாற்றுப்பெயர் போல் விளி ஏற்காது னகரம் ஒருமையையும், மகரம் பன்மையையும்

உணர்த்தும் என்றும், மூவிடங்களிலும் வெவ்வேறு வடிவங்களை உடையன என்றும், மூவிடப் பெயர்கள் எழுவாயில் தனி வடிவாயும் வேற்றுமை உருபேற்கும் நிலையில் கூட்டு வடிவங்களாகவும் அமையும் என்றும், கூட்டுப் பெயர்கள், வினாப் பெயர்கள் இரண்டும் அடிச்சொற்கள் விகுதிகள் போன்றவை எவ்வாறு வரும் என்பதும் ஆராய்ந்து தரப்பட்டுள்ளது.

**"செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம்"**

*செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு - 52, (மார்ச் 1978)*

இக்கட்டுரை, செந்தமிழ்ச் சொறபிறபபியல் அகரமுதலித் திட்டத்தின் சிறப்புத் தன்மையையும், அதன் பயன்பாட்டையும், உருவாக்கத்தையும் விளக்குகின்றது. இவ்வகரமுதலி 1974ஆம் ஆண்டு பாவாணரை இயக்குநராகக் கொண்டு தொடங்கப் பட்டதாகவும் இதன் சிறப்புத்தன்மைகளாக, சொற்களுக்கு வேரும், வரலாறும் கூறப்படல், தமிழ்ச் சொற்களையும் பிற சொற்களையும் வேறுவேறாகத் தொகுத்தல், திராவிட கலைச்சொற்களுடன் ஆரிய இனச் சொற்களும் காட்டப்படல், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் நெறிமுறைகள் ஒரு துணை மடலாக வருதல், இந்திய அகரமுதலிகட்கெல்லாம் வழிகாட்டியாதல் போன்றவை கூறப்பட்டுள்ளன.

**"சொல் கற்பித்தல்"**

சுப்பையா, பொன். (1984) ஆய்வுக்கோவை 16, தொகுதி -2, பக்.141-146, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

இக்கட்டுரை, மொழியில் சொல் கற்பிக்கும் முறையை விளக்குகின்றது. மொழி கற்பித்தல், மொழித்தொடர் கற்பித்தல், சொல் கற்பித்தல், இலக்கியம் கற்பித்தல் என்று நான்கு நிலையில் உள்ளது என்றும், சொற்களின் பகுப்பு முறை எண்ணற்றவையாக இருந்தும் அவற்றைக் கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் கலைச்சொல்,

வழக்காற்றுச் சொல் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. கலைச்சொற்கள் மொழிபெயர்ப்பின் அடிப்படையிலும், மொழியியல் சொல் வழக்காற்றுப் பண்பு அடிப்படையிலும் அமைக்கப் பெற்றுள்ளன. வழக்காற்றுச் சொற்களைச் சொல் அமைப்புமுறை, பொருண்மைமுறை, பயனாகு முறை என்று மூன்று நிலையில் பிரிக்கலாம் என்றும், பொருண்மை முறையை ஒரு பொருள் குறித்த பலசொல், பலபொருள் குறித்த ஒருசொல், ஒருபொருள் குறித்த ஒருசொல் என மூன்றாகப் பிரிக்கலாம் என்றும், சொல் கற்பித்தல் மொழிக்கு இன்றியமையாத ஒன்று என்றும், அது மொழியில் கொண்டுள்ள பயன்பாடும், மாறுபாடும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

**"சொல் சொல்லும் சோகக்கதை"**

சௌரிராசன், பொன். *(1992)* ஆய்வுக்கோவை *23*, தொகுதி-*1*, பக்.*437-438*, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை.

தமிழ்ச் சொற்களின் பொருள் தாழ்ச்சி, தமிழர்தம் வீழ்ச்சியை எப்படி விளக்குகின்றது என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். குவியல் என்பதைக் குறிக்க எழுந்த சொல் குப்பை என்ற பொருளில் கீழ்நிலையடைந்தது என்றும், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் தமிழேழு சுரங்கள் தமிழிசையிலும் இல்லை. (சரிகமபதநி) இழந்த சொற்களால் தமிழ்ச் சமுதாயத்தில் தமிழன் வாழ்வில் நலக்கேடு, சிந்தனை இழப்பு போன்றவை ஏற்பட்டன என்றும் கூறப்பட்டுள்ளது.

**"சொல்லடைவு அகராதி"**

சுப்பிரமணியன், வி.ஐ. *(மார்ச் 1963)* கலைக்கதிர், மலர் - *15*, இதழ் - *3*, பக். *20-24*.

இக்கட்டுரை, சொல்லடைவு அகராதியின் தேவையையும் அதன் வகைகளையும், தமிழில் தோன்றியுள்ள சொல்லடைவின் விவரங்களையும், சொல்லடைவு தயாரிப்பதில் உள்ள

சிக்கல்களையும், பயன்களையும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

நல்ல இலக்கண, இலக்கிய ஆய்விற்குச் சொல்லடைவு தேவை என்பதனைச் சுட்டுவதோடு, இச்சொல்லடைவு சொல்லிசைவு அகராதி, அருஞ்சொல்லகராதி, சொல்லடைவு, பேரகராதி என ஒவ்வொன்றின் தன்மைக்கேற்பப் பாகுபடுத்தி விளக்கப்பட்டுள்ளது. தமிழில் ஜி.யூ.போப் திருக்குறளுக்குச் சொல்லிசைவு அகராதியும், பேரகராதியும் 1886ஆம் ஆண்டு வெளியிட்டார் என்றும், இதனைத் தொடர்ந்து சங்க இலக்கியங்களுக்கும் ஏனைய நூல்களுக்கும் சொல்லடைவுகள் தோன்றலாயின என்றும், இச்சொல்லடைவை அது கொண்டுள்ள செய்திகள் அடிப்படையில் சொல்லகர வரிசை, சொல்லடைவு அகராதி, பிறப்புமுறைச் சொல்லடைவு என்று பிரித்து விளக்கப் பட்டுள்ளது. மேலும், சொல்லடைவு தயாரிப்பதில் உள்ள சிக்கல்களும் ஆராயப்பட்டுள்ளன. இறுதியில் சொல்லடைவின் பயன்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**"சொல்லடைவும் பயன்பாடும்"**

சித்தார்த்தன், த. (1983) ஆய்வுக்கோவை 15, தொகுதி - 2, பக். 129-134, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

இக்கட்டுரை, சொல்லடைவு, அதன் பயன்பாடு, அதன் வரலாறு ஆகியவற்றை விளக்குகின்றது. சொற்களைப் பிரித்து அகரவரிசைப் படுத்தி ஒவ்வொரு சொல்லின் வரன்முறையையும், பகுபத உறுப்பையும் கூறி அச்சொல் ஒவ்வொன்றும், எந்த இலக்கணங்களில், எந்தப் பொருளில், எந்தப் பகுதியில் வந்துள்ளது என்பதை விடாது குறித்து வைப்பதே சொல்லடைவு என்றும், சொல்லடைவுகள் குறிப்பிட்ட காலம், ஆசிரியர், வகை போன்ற ஏதாவது ஒருவகையில் தெரிவுசெய்யலாம் என்றும், ஆங்கிலேயர் வரவிற்குப் பின்னே இது வளர்ச்சி அடைந்தது என்றும், சொல்லடைவு தயாரிப்பது எப்படி என்றும், அதன் பயன்களாக 25 கருத்துக்களையும் இக்கட்டுரையில் காணமுடிகின்றன.

**"சொல்லாக்கம்"**

மறைமலை, இ. (1982-83) தமிழாய்வு, தொகுதி -13, பக்.45-66. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

தமிழில் சொல்லாக்கம் எவ்வகையில் அமைகின்றது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இலக்கியப் படைப்புகளும், மனிதனது சிந்தனையும் வளர்ந்துகொண்டே வருவதனால் புதிய கருத்துகளையும், புதிய சிந்தனைகளையும் பெயரிட்டு அழைக்க புதிய சொற்கள் தேவைப்படுகின்றன என்றும், வையாபுரிப்பிள்ளையின் கருத்துப்படி, இரண்டு சொற்களின் சேர்க்கை, இரண்டு வினையடிகளின் சேர்க்கை, வினையடிகள் நீட்டல், புதிய விகுதிகளின் சேர்க்கை போன்ற பல வழிமுறைகளினால் புதிய சொற்கள் உருவாகும் என்பதும், தமிழில் சொல்லாக்கம், விகுதிவழி ஆக்கம், கூட்டுச் சொல்லாக்கம், ஒலிவழி ஒப்பாக்கம் முதலிய பல்வேறு பிரிவுகளைக் கொண்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

**"சொல்லாக்கம்"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி - 2, பக். 215-221, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

இக்கட்டுரை, சொல்லாக்கம் எவ்வகையில் அமைகின்றது என்பதில் 'மொழி ஆராய்ச்சி' என்ற தொடர் எவ்வாறு ஆக்கம் பெற்றுள்ளது என்பதைப் பற்றிக் கூறுகின்றது. மொழி - நூல் - ஆராய்ச்சி என்பதில் முதல் இரண்டும் மிகவும் பழமையானவை. ஆராய்ச்சி என்றசொல் தொல்காப்பியர் காலத்திலும், வள்ளுவர் காலத்திலும் வழக்கில் இருந்தது என்றும், பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குவதாகவும், ஓசை பற்றி வரும் இரட்டைக்கிளவி உருவாக்குவதாலும் புதிய சொற்கள் உருவாகின்றன என்பதை எடுத்துக்காட்டு வழி விளக்கியும், இரண்டு தமிழ்ச்சொற்கள் சேருவதாலும், தமிழ்ச்சொற்கள் விகாரப்படுவதாலும், விகுதிகள் சேர்ப்பதாலும், தன்னாற்றல் பிறமொழிச் சொற்களைக் கையாளுதல் என்பதாலும் தமிழில் புதிய சொற்கள் ஏராளம் வழக்கில் வந்துள்ளன என்றும் கூறுகின்றது.

**"சொல்லாராய்ச்சி : சொல்லின் அரும்பொருட்கள்"**

சௌந்தரபாண்டியன், எஸ். (1987) ஆய்வுக்கோவை 19, தொகுதி -2, பக். 178-181, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

சொல்லின் பொருள் எப்படியெல்லாம் அமைகின்றது என்று ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒரு சொல்லுக்குப் பெரும் பொருள் தவிர அரும்பொருள் ஏராளம் உண்டு என்பதும், பல நுட்பப் பொருள்களும் உண்டு என்பதும் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கப்படுகின்றது.

பேச்சு - விவாதம் (அதிகாரியுடன் பேசினால் விடிவு பிறக்கும்)
ஏச்சு (பலரிடம் பேச்சு வாங்குவது யார்)
கருத்து (தலைவன் பேச்சுக்கு மறுபேச்சில்லை)
மறுத்தல் (பேசாமல் ஒத்துக்கொள்)
அறிவுரை (என் பேச்சைக் கேட்காமல் போனால்)

இவ்வாறு பல எடுத்துக்காட்டுக் கூறி ஒரு சொல்லுக்கு நேரடியாக ஒரு பொருள் இருந்தாலும் மறைமுகமாகப் பல்வேறு பொருள்களில் வரும் என்பதையும், பேசுதல் என்ற சொல் எத்தனைப் பொருளில் வரும் என்பதையும் விளக்கமாக மொழிகின்றது.

**"சொல் வரலாற்று நியதி"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி - 2, பக். 191-203, வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

இக்கட்டுரை, சொற்களை வரலாற்று முறைப்படி ஆராய்தல் வேண்டும் என்பதை, உரையாடல் வாயிலாக விளக்குகின்றது. தொல்காப்பியர், வள்ளுவர், கம்பர், பாரதியார் என்று முறைப்படுத்தி முன் தோன்றியவர்கள் நூல்கள் பின் தோன்றியவர்களுக்கு விளங்கும் என்றும், பின் தோன்றியவர்கள் இயற்றிய நூல்கள் முன் தோன்றியவர்களுக்கு விளங்காது என்றும், அந்த, இந்த என்ற சொற்கள் தொல்காப்பியர், வள்ளுவர் காலத்தில்

இல்லை என்பதையும் பத்திரிகை என்பதற்கு இலை என்ற பொருள் முற்காலத்தில் பனையோலையில் செய்திகளை எழுதியதால் வந்தது என்றும், பத்திரிகை என்ற சொல் மிகப்பிற்பட்ட கம்பர் காலத்து வழங்கியிருக்கலாமாயினும் தொல்காப்பியர், வள்ளுவர் காலங்களில் வழக்கில் இல்லை என்பன போன்ற செய்திகளை இக்கட்டுரை விளக்குகின்றது.

**"சொல் வரலாற்று வினோதங்கள்"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (பிப்ரவரி 1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி - 2, பக். 204-207, வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

சொல்லாராய்ச்சியில் நடைபெற்ற வினோதங்களை இக்கட்டுரை விளக்குகின்றது. சொற்களை ஒவ்வொரு எழுத்தாகப் பிரித்து ஒவ்வொரு எழுத்தும் பற்பல பொருட் பண்புகளை உணர்த்துவதாகக் கொண்டு, சொல்லால் குறிக்கப்பட்ட பொருளுக்கேற்ற பண்புகளை ஒருங்கக்கூட்டி அச்சொல் அப்பொருளை ௨ணர்த்துவதாகக் காட்டிய செய்தியையும், தமிழ் எழுத்துக்கள் எல்லாம் ஓம் என்ற மூலத்திலிருந்து பிறந்துள்ளன போலவே தமிழ்ச் சொற்கள் எல்லாம் ஒரு மூலத்திலிருந்து தோன்றியிருத்தல் வேண்டும் என்றும், சொற்களின் வரலாறு நாட்டு வரலாற்றினையும், மக்கள் வரலாற்றினையும் உள்ளடக்கி நிற்பது என்றும், தத்துவ நூல், உளநூல், மக்கள் வரலாற்று நூல் முதலியவற்றிற்கு மொழியாராய்ச்சி இன்றியமையாதது என்றும் இக்கட்டுரை பேசுகின்றது.

**"சொல்லின் ஒலிவடிவும் வரிவடிவும்"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி - 2, பக். 151-153, வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

'சொல்லின் ஒலி வடிவும் வரி வடிவும்' என்னும் இக்கட்டுரை மொழியாராய்ச்சியைப் பற்றியதாகும். சொல்லின்

ஒலி வடிவும், அதனைக் குறிக்கின்ற வரி வடிவும் நாம் நன்றாய் உணர்ந்து கொள்ளும் வகையில் அமைவதில்லை என்பது பலம், பழம் என்ற எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கம் பெற்றுள்ளது. அடுத்து பெரியாழ்வார் திருமொழியில், 'சீரொன்றுதூ தாய்த்து துரியோதனன் பக்கல்' என்ற அடியைப் பற்றிய சிந்தனை இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளது. மேற்கண்ட அடியில் பெரியாழ்வார் 'திரியோதனன் பக்கல்' என்றுதான் அருளி செய்திருக்கவேண்டும். இதனை வடமொழி வல்லவர்கள் 'துரியோதனன்' என்று திருத்திவிட்டார்கள் என்பது சான்றுகளுடன் விளக்கப்பெற்றுள்ளது. சாதாரண மக்கள் பேச்சு வழக்கில் வழங்கிவரும் சொற்களே அக்காலத்து நூல்களிற் பெரும்பாலும் கொள்ளத்தக்கன என்று இதற்குச் சான்றாகக் 'கல்யாணம்' என்ற சொல்லை இக்கட்டுரை காட்டியுள்ளது. 'கல்யாணம்' என்ற இச்சொல்லை, தேசியகவி பாரதியும், பெரியாழ்வார் அவருடைய திருமொழியில் அருளிய செய்தியையும் இக்கட்டுரை விளக்கமாகக் கூறுகிறது.

**"சொல்லின் வளர்ச்சி"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி - 2, பக். 160-167, வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

இக்கட்டுரை சொற்கள் காலப்போக்கில் எவ்வாறு மாறுதல் அடைந்தன என்பதைச் சங்கப் பாடல்கள் கொண்டு ஆய்கின்றது. தமிழ் நாட்டார் ஆரியர்களிடமும், வடநாட்டார்களிடமும் கொண்ட தொடர்பில் பல புதிய சொற்கள் கிடைத்த செய்தியையும், போர்த்துறை, காதல்துறை பற்றியும் தமிழில் சொற்கள் நிரம்ப ஏற்பட்டன என்றும், நூதன அறிவியல் துறைகளைக் கற்று மேம்பட்டதாலும், உள்நாட்டு வணிகத்தாலும், வெளிநாட்டு வணிகத் தொடர்பாலும் கருத்துகளும், சொற்களும் ஏராளமாக இடம்பெறலாயின என்பதைச் சங்க இலக்கியப் பாடல்களைக் கொண்டு சான்று காட்டி விளக்கியுள்ளது.

**"சொல்லும் சமுதாயப் பண்பாட்டுக் கூறுகளும்"**

சித்திரபுத்திரன், எச். (1987) அகராதிக்கலைக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பண்பாடும் மொழியும் நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றன. அவை ஒவ்வொன்றும் தொடர்புடையன என்றும், சொற்கள் சமுதாய நோக்கோடு சமுதாயத்தைச் சார்ந்து நிற்பன என்றும் கூறப்பட்டுள்ளது. சொற்களின் அமைப்பையும், பொருளையும் வரலாற்று நிலையில் விளக்கும் வரலாற்று அகராதிகள், சொல் மற்றும் பொருளின் வளர்ச்சியைக் காட்டல், சொல் வழியே அம்மக்களின் சமுதாயப் பண்பாட்டு வளர்ச்சியைக் காட்டல் என்பன இரண்டு முக்கிய பணிகள் என்றும், பண்பாட்டுக் கூறுகளை அறிந்திட இருமொழி அகராதிகள் பயன்படுவதாகவும் கூறுப்பட்டுள்ளது. சொற்கள் சமுதாயத்தால் வரையறை செய்யப்படுகின்றதென்றும், ஒரு சமுதாயத்தில் பயன்படும் சொற்கள் அடுத்த சமுதாயத்தில் பயன்படுவதை எடுத்துக்காட்டுக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது. சமுதாய, வட்டார பண்பாட்டுக் கூறுகள் அகராதிகளில் குறிப்பான்கள் மூலம் குறிக்கப்பெறுகின்றன.

**"சொல்லும் பொருளும்"**

தங்கமணியன், (1985) மொழியியல், தொகுதி - 9, எண் - 1,2, பக். 1-18, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகம், அண்ணாமலை நகர்.

சொற்பொருண்மைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சொல்லின் பொருண்மையை அதன் கருத்தினாலும், அறிவியல் அணுகுமுறையினாலும் அணுகலாம் என்றும், ஒரு சொல்லுக்கே ஏராளமான பொருள்கள் இருப்பதாகவும், அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும், விளக்கம் அளிப்பதாகவும் உள்ளன என்றும், சொற்கள், பொருண்மை வேறுபட்டு ஒரே இலக்கணத்தைச் சார்ந்ததாகவும், சொற்பொருண்மையில் மட்டுமின்றி இலக்கண வகையிலும் வேறுபட்டதாகவும், பல பொருண்மைச் சொற்களாகவும், என மூன்று வகையான பொருள் மாற்றத்தை அடையும் என்றும், அந்தப்

பலபொருண்மைச் சொற்களை முற்றுகை, கருத்துக்குறியீடு, நடையில் பயில்வன, தொடரில் பயில்வன என்று அதன் தன்மை அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம் என்றும், அவை ஒவ்வொன்றையும் சான்றுகள் மூலம் விளக்கியும் கூறப்பட்டுள்ளது.

**"சொல்லும் பொருளும்"**

*வையாபுரிப் பிள்ளை, எஸ், (1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி - 2, பக். 168-175, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை.*

சொற்களின் பொருட்கள் காலந்தோறும் வேறுபட்டு வரும் நிலையினை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். உயிர் என்ற சொல் மூச்சு, பிராணன், ஆத்மா, பிராணவாயு என்று காலப்போக்கில் பொருள் எவ்வாறு மாறுபட்டது என்பது விளக்கப்படுகின்றது. தற்போது வழக்கிலுள்ள சொற்கள் பழங்காலத்தில் எவ்வாறு வழங்கப்பட்டன என்றும், காலப்போக்கில் அவை எவ்வாறு சிதைவடைந்தன என்றும் விளக்கப்படுகிறது. பொருட் சிறுமை நெறி, பொருட் பெருமை நெறி என்ற இரண்டினையும் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. பொருட்களின் கூறுகள் காலத்திற்குக் காலம் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதும் விளக்கப்படுகிறது.

**"சொல்லும் மொழியும்"**

*வையாபுரிப் பிள்ளை, எஸ், (1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி - 2, பக். 154-159, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை.*

சொற்கள் வளர்ச்சியுற்ற முறையையும், அவை பொருள் பொதிந்ததாக அமைந்ததையும் விளக்கமாகக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பேச்சு, சொல், மொழி என்பனவற்றின் விளக்கங்களும், வேறுபாடுகளும் எடுத்துக்காட்டுக் கொண்டு விளக்கப்படுகின்றன என்றும், மொழி கடவுளால் தோற்றுவிக்கப்பட்டது என்ற நம்பிக்கைதான் மொழி ஆராய்ச்சிக்குத் தடையாய் இருந்தது என்றும், பொருளைக் குறிக்க சொல் குறியீடாகவே இருந்தது என்றும், மொழியின் நியதிகள்

எவ்விதம் அமையவேண்டும் என்பதையும், மொழியை ஒவ்வொருவனும் தனது சொந்த முயற்சியால் புதிதாகக் கற்றுக்கொள்ள வேண்டியதே அவசியம் என்பதையும், ஒவ்வொரு தலைமுறையினனும் தானும் முயன்று புதிதாகத் தேடிக்கொள்ளும் முயற்சியே மொழி என்பதையும் சான்றுகளுடன் விவரிக்கின்றது.

**"சொற்பகுப்பு – அன்றும் இன்றும்"**

*மீனாட்சிசுந்தரம், கா. (1973) ஆய்வுக்கோவை 5, பக். 753-757, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.*

சொற்பகுப்பு என்பது தொல்காப்பியம், நன்னூல் போன்றவற்றில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும், இன்று மொழியியலார் வழங்கும் முறையைப் பற்றியும் இக்கட்டுரை விளக்குகின்றது. தொல்காப்பியம், நன்னூலில் மொழி நான்கு வகையில் பிரிக்கப்பட்டுள்ளது என்றும், பொது மொழி ஒரு நாட்டு மக்கள் எல்லோராலும் அறியக்கூடிய பொதுவான சொற்களைக் கொண்டது என்றும், இன, இட வேறுபாடுகளால் சில சொற்கள் ஒலி வடிவத்திலும், பொருள் வடிவத்திலும் வேறுபடுவது கிளைமொழி என்றும், தொல்காப்பியம், நன்னூலில் இவை திசைமொழி, திசைச்சொல் என்றும் வழங்கப்பெறும் என்றும், பிறமொழியிலிருந்து கடன் வாங்கும் மொழி இலக்கணங்களில் வடசொற்கிளவி, வடசொல் என்றும் கூறப்படுகின்றன. மொழியியலாரும், தமிழ் இலக்கணங்களும் ஒரே அடிப்படையில் நான்கு மொழிகளையும் கையாண்டது என்பதை இக்கட்டுரை மூலம் அறிய முடிகின்றது.

**"சொற்பிரிப்புக் கோட்பாடு"**

*கோதண்டராமன், பொன். (1981) ஆய்வுக்கோவை 18, தொகுதி - 2, பக். 87, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.*

சொற்களை எவ்வண்ணம் பிரிக்கவேண்டும் என்பதைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இரண்டு

சொற்களில் உருவாலும், பொருளாலும் ஒரு பகுதி ஒத்து நிற்குமானால் ஏனைய பகுதியைப் பிரிக்கலாம் என்றும், வண்ணனை நோக்கில் பொருளால் ஒத்து நில்லாத சொற்பகுதிகளைப் பிரிப்பது சற்றும் பொருந்தாது என்றும், இலக்கண நோக்கில் சொற்களைப் பிரிக்கும்போது வரலாற்று ஆய்வின் அடிப்படைகளையும், வண்ணனை ஆய்வின் அடிப்படைகளையும் புரிந்துகொள்ள வேண்டும் என்றும், வண்ணனை நோக்கில் சொற்களைப் பிரிப்பதற்கும் வரலாற்று நோக்கில் சொற்களைப் பிரிப்பதற்கும் வேறுபாடுகள் உண்டு என்றும், மரபிலக்கணங்கள் பெரும்பாலும் வண்ணனை நோக்கில் அமைந்தன என்றும் கூறப்பட்டுள்ளது.

**"சொற்பிறப்பியல் அகரமுதலி"**

மதிவாணன், இரா. (1982-83) தமிழாய்வு, தொகுதி - 13, பக்.9-27, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

சொற்பிறப்பியல் அகரமுதலி பற்றிய செய்திகள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. சொற்பிறப்பியல் நெறிமுறைகள், சொற்பிறப்பியல் அகரமுதலியின் தனிக்கூறுகள், உலக மொழிகளில் தோன்றியுள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகள், தமிழில் தோன்றியுள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகள், சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு இன்றியமையாது வேண்டப்படுவன என்று பல்வேறு கூறுகள் ஆராயப்பட்டுள்ளன. மொழியின் வளர்ச்சிக்குச் சொல்வளம் மிகவும் இன்றியமையாதது என்றும், புதிய சொற்கள் வேண்டுமிடத்து வேரும், மூலமும் காட்டிப் பல்லாயிரம் புத்தம் புதிய சொற்களை உருவாக்கச் சொற்பிறப்பியல் அகரமுதலி வழிகாட்டும் என்றும், மொழிவளர்ச்சிக்குச் சொற்பிறப்பியல் அகரமுதலி ஆணிவேர் என்றும் சுட்டப்பட்டுள்ளது.

**"சொற்பிறப்பும் அகராதிக்கலையும்"**

மதிவாணன், இரா. (1985) அகராதிக்கலைக் கருத்தரங்கு, தொகுப்பியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சொற்பிறப்பு என்றால் என்ன? அது அகராதிக்கு எவ்வாறு முக்கியமானது என்று ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சொற்களுக்கு வேர்மூலம் காண்பதும், திரிபடைந்த சொற்களுக்குப் பழைய சொற்களை மீட்பதுமே சொற்பிறப்பு என்றும், அகராதித் தொகுப்பவர்க்கு ஒருசொல் எந்த மொழிக்கு உரியது என்பதைக் காண்பதில் சிக்கல் எழும்போது அதன் மூலம் தெரிந்தால் அது இந்த மொழிக்குரியது என்பதை அளவிடமுடியும் என்றும் சொல்லின் தலைமைப் பொருளைக் கொடுப்பது அதன் வேராகும். எனவே, அகராதித் தொகுப்பவர்கள் வேர்ச்சொல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் சொற்பிறப்பை உணர்ந்தவராக இருக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"சோழர் காலக் கல்வெட்டுகளில் புதிய சொற்களும் அகராதியும்"**

கோவிந்தராசனார், சி. (மார்ச் - சூன் 1989) தமிழ்க்கலை, தமிழ் - 7, கலை - 1, 2, பக். 98-107, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சோழர் காலக் கல்வெட்டுகளில் காணப்படும் புதிய சொற்களைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பிற்காலச் சோழர் காலமும் அவர்களின் உரிமையிடங்களையும் கூறி, மொழி நிலையைக் கூறுமிடத்துப் பிறமொழித் தாக்கங்களினால் கலப்புச் சொற்கள் காணப்பட்டன என்றும், பேச்சு வழக்கும் ஏட்டு வழக்கும் இருந்த காலத்திலேயே தமிழ்நாட்டிலே கல்வெட்டுகள் தோன்றின என்றும், எனவே, சொற்களில் வடமொழிக் கலப்பு ஏராளம் இருந்தது என்றும், சோழர் காலத்தில் தோன்றிய கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள அரிய புதிய சொற்கள் சிலவற்றை அகரவரிசையில் பொருளமைதியுடன் தொகுத்துத் தரப்பட்டுள்ளன என்றும், ஒவ்வொரு சொல்லும் தனித்தனியாக எழுத்து, பொருள் கூறும் முறையில் அவை எவ்வாறு அமைகின்றன என்றும், கல்வெட்டு மூலமாகப் பொருள் கூறப்படும் சொற்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில் காணப்படும் கலைச் சொற்களுக்குப் பொருளுரையும் தரப்பட்டுள்ளது. அரசியல், சமயவியல், வழக்கியல், சமுதாயவியல், வணிகவியல், வேளாணியல், பொருளியல், கலையியல் ஆகிய துறைகட்கு

இலக்காகக் கலைச்சொற்களில் புதிய சொற்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**"தமிழ் அகராதி"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (பிப்ரவரி 1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி-2, பக். 409-416, வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

இக்கட்டுரை, தமிழில் அகராதியின் தோற்றம் பற்றி விளக்குகின்றது. 1732-ல் சதுரகராதி என்னும் அகராதி வீரமா முனிவரால் முதன்முதலில் இயற்றப் பெற்றது என்றும், அகராதிக்குச் சொற்பொருள் விளக்கும் கருவி நூல்கள் இருந்தன என்றும், அவை நிகண்டு என்ற பெயரால் வழங்கப்பட்டன என்றும், நிகண்டுகளைப் பற்றியும், அவ்வை இருக்கும்போது அகராதித் தோன்றுவதற்கான காரணங்களைப் பற்றியும், சிதம்பர ரேவண சித்தர் என்பவரால் அகராதி நிகண்டு தோன்றியது என்றும், அகராதி என்பது பொருளை மாத்திரம் உணர்த்துகின்ற கருவிநூல் என்பதோடு ஒரு மொழியின் ஆரம்ப காலத்திலிருந்து தற்காலம் வரையிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் ஆதாரமாகவும் அது விளங்கவேண்டும் என்றும், அகராதி எல்லா இனத்தவருக்கும் எல்லாத் தொழிலினருக்கும், எல்லாப் பருவத்தினருக்கும் பயன்படும் வகையில் அமையவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"தமிழ் அகராதிக் கலை"**

சித்திரபுத்திரன், எச். அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், புதுடெல்லி (1992).

தமிழ் அகராதிக் கலையின் வளர்ச்சிப் பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ் அகராதிக் கலை தொல்காப்பியக் காலத்திலேயே இருந்ததாகவும், தொல்காப்பிய உரியியலில் அகராதிக் கூறுகள் காணப்பட்டன என்றும், மரபு இலக்கணங்களில் ஒரு கூறாகக் கருதப்பட்ட உரிச்சொற்கள் கால வளர்ச்சியில் நிகண்டுகளாக வளர்ச்சியடைந்தன. ஐரோப்பியர்

வருகையால் அகராதிக்கலை மேலும் வளர்ச்சியடைந்தது. தமிழில் இருமொழி அகராதிகள், ஐரோப்பிய அகராதிகள், பெரிய நிலையிலான ஒருமொழி, இருமொழி அகராதிகள் தோன்ற களம் அமைத்தன என்றும், தமிழ் அகராதிகள் ஏராளம் தோன்றினாலும் தற்காலத் தமிழ் அகராதி எல்லா அகராதிகளுக்கும் மகுடம் வைத்தாற்போல் உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**"தமிழ் அகராதிக் கலை"**

*சுந்தரசண்முகனார், (1965) பதிப்பு - 2, புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், பாண்டிச்சேரி.*

'தமிழ் அகராதிக் கலை' என்னும் இந்நூல், தமிழ் அகராதியியலைப் பற்றி அறிவதற்கு ஏற்ப வெளிவந்துள்ள முதல் தமிழ் நூலாகும். இந்நூல், ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது. முதல் பாகம் தமிழ் அகராதிக் கலையில் வரலாற்றாராய்ச்சியினையும், இரண்டாம் பாகம் கிடைத்துள்ள நிகண்டுகளுள் முதலாவதும் மற்ற நிகண்டுகளுக்கு முன்னோடியாகியதுமான சேந்தன் திவாகர நிகண்டைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி விளக்கத்தினையும், மூன்றாம் பாகம் பிங்கலம் முதலாகிய முப்பதுக்கு மேற்பட்ட நிகண்டுகளைப் பற்றிய அமைப்பு, ஆசிரியர், காலம் பற்றிய வரலாற்றினையும், நான்காம் பாகம் நூற்றுக்கு மேற்பட்ட அகராதிகளின் அமைப்பு, வளர்ச்சிநிலை ஆகியன பற்றியும், ஐந்தாம் பாகம் சொல்லும் மொழியும் என்ற தலைப்பில் சொற்பொருள் பற்றிய மொழியாராய்ச்சியினையும் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

**"தமிழ் அகராதிகளில் சொற்பொருள்"**

*மாதையன், பெ. (பிப்ரவரி - மார்ச் 1992) தமிழ்ப்பொழில், துணர் - 66, மலர் - 11, பக்.527, கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சாவூர்.*

இக்கட்டுரை, தமிழ் அகராதிகளில் சொற்பொருள் தரும் நெறி எவ்வாறு அமைந்துள்ளது என்பதை விளக்குவதை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் காலந்தொட்டு வளர்ந்துவரும் அகராதி மரபில் நிகண்டுகளும் ஒருமொழி, இருமொழி அகராதிகளும் தோற்றம் பெற்று வளர்ந்து வந்துள்ளன என்றும், அம்மரபில் பலவகை அகராதிகளும், பல்வகை பதிவமைப்பு முறைகளும், இலக்கணம் சுட்டல், மேற்கோள் தருதல், விளக்கப் பொருள் தருதல், சொல் மூலங்காட்டுதல், இனமொழிச் சொற்களைத் தருதல் போன்ற அகராதிக் கூறுகளில் வளர்ச்சி காணப்படுகின்றது. தமிழ் அகராதி சொற்பொருள் நெறியில் காணப்படும் வளர்ச்சிப் போக்குகள், இதில் காணப்படும் குறைகள், எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் போன்றவை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

**"தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு"**

செயதேவன், வ., *(1985)* ஐந்திணைப் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை.

இவ்வாய்வு நூல் ஐந்து இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் இயல், தமிழ் அகராதியியல் வரலாற்றைச் சுருக்கமாக அறிமுகம் செய்கிறது. இரண்டாவது இயல், நிகண்டுகளுக்கு முற்பட்ட காலத் தமிழ்அகராதியியலைக் கால நிரலில் ஆராய்கிறது. மூன்றாவது இயல், நிகண்டுகளின் பொது அமைப்பை விளக்கி நிகண்டுக் காலத்தில் அகராதியியல் எவ்வாறு இருந்தது என்பதைத் தெளிவாக்குகிறது. நான்காவது இயல் அகராதிகள், கலைக் களஞ்சியங்கள் ஆகியவற்றின் பல்வேறு வகைகளைச் சுட்டுவதோடு அகராதியியல் எவ்வெவ்வாறு வளர்ந்து வந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. ஐந்தாவது இயல் இவ்வாய்வினால் விளைந்த பயன்களைத் தொகுத்து உரைக்கிறது. தமிழ் அகராதியியல் நூற்றொகையும், இந்நூலின் அடைவும் நூலின் இறுதியில் அமைந்துள்ளன.

**"தமிழ் அகராதியியலும் அகரநிரலும்"**

செயதேவன், வ., *(1976)* தமிழாய்வு, தொகுதி - 4, பக். 59-68, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

தமிழ் அகராதியியலின் தோற்றத்தினையும், வளர்ச்சியினையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சங்க காலத்தில் அகராதியியலைப் பற்றிய செய்திகள் இல்லை என்றும், தொல்காப்பியத்தில் அகரமுதல் என்ற சொல் மட்டுமே உள்ளதாகவும், கி.பி. 8-ல் பல நிகண்டுகள் தோன்றினாலும் அவற்றில் அகர நிரல் காணப்படவில்லை என்றும், பின்பு 15-ஆம் நூற்றாண்டில் தோன்றிய அகராதி நிகண்டில்தான் அகராதி என்னும் சொல் காணப்பட்டது என்றும், பின் பல நிகண்டுகள் தோன்றினாலும் அவற்றில் எழுத்து வடிவில் மட்டுமே அகரநிரல் காணப்பட்டது என்றும், முதல் ஓரெழுத்தின் பின் இரண்டெழுத்து என்று அகரநிரல் வளர்ச்சியடைந்து தமிழ் அகராதியியலில் அகரநிரல்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கியதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் வருகைக்குப்பின் 18-ஆம் நூற்றாண்டில் சதுரகராதியே தமிழ் அகராதியியலுக்கு வழிகாட்டியாக அமைந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"தமிழ் இலக்கணங்களில் உரிச்சொல் ஆய்வு"**

*சண்முகம், செ.வை. (1987) பக். 105, அனைத்திந்தியத் தமிழ் மொழிஇயல் இரண்டாவது மாநாட்டுக் கருத்தரங்கு மலர்.*

தமிழ் இலக்கண நூல்கள் வரிசையில் நேமிநாதம், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகியவை எவ்வாறு தொல்காப்பிய உரியியலைத் தழுவி எழுதப்பெற்றுள்ளன என்று ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நேமிநாதத்தில் தொல்காப்பியத்தில் காணப்பட்ட விளக்கம் என்பதை உரியியலில் கூறி இருப்பதோடு தொல்காப்பியர் கூறிய உரிச்சொல் பண்புகள் நான்கில் பயிலாத சொற்களுக்குப் பயின்ற சொற்களைக் கொண்டு பொருள் கொள்வதை விட்டுவிட்டார். இலக்கண விளக்கம், தொல்காப்பியச் சூத்திரங்களைச் சேர்த்துக்கூறியும், குறைத்தும், சூத்திரங்களின் வைப்பு முறையில் மாற்றமும் செய்துள்ளது. முத்துவீரியத்தின் 22 சூத்திரங்களில் 21 தொல்காப்பியத்தின் தழுவலாகும். அந்த ஒரு சூத்திரமும் நன்னூலின் தழுவல். சுவாமிநாதத்தில் உரிச்சொல்லிற்கு என்று தனி இயல் இல்லை. எச்சமரபு என்ற இயலில் ஒரு சூத்திரத்தில் உரிச்சொல் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.

**"தமிழ்க்கலைச்சொல்லாக்க நெறிமுறைகள் ஒரு வரலாற்று அளவீடு"**

சண்முகம், செ.வை, (1988) மொழியியல், தொகுதி -11, எண் - 1,4, பக்.43, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

கலைச்சொல்லாக்க நெறிமுறைகள் தொல்காப்பியக் காலம் தொட்டுத் தற்காலம் வரை விளக்கிக் கூறப்பட்டுள்ளன. கலைச்சொல்லாக்க ஆய்வு நோக்கில் தொல்காப்பியம் கடனாட்சி, பொருள் விளைவு, ஒலிபெயர்ப்பு முறை ஆகியவற்றைக் குறிப்பாக உணர்த்தி உள்ளது என்றும், தொல்காப்பியம், மணிமேகலை ஆகிய நூல்களில் காணப்பட்ட கலைச்சொற்கள் கோடிட்டும் காட்டப் பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டில் கலைச்சொல்லாக்கம் நன்கு வளர்ச்சியடைந்தது என்றும், அந்தக் கலைச்சொல்லாக்க நெறிமுறைகளை மொழிக்கொள்கை, கடன்சொல், உள்நிலை ஆக்கம் ஆகிய பெரும் பிரிவுகளில் பல உட்பிரிவுகள் மூலம் மொழியியல் நோக்கில் பொதுமைப்படுத்திக் காட்டப் பட்டுள்ளன.

**"தமிழ்ச் சொற்களஞ்சியத்தில் நிலையாக்கம்"**

பாலகிருட்டிணன், இரா. (டிசம்பர் - பிப்ரவரி 1979), மொழியியல், தொகுதி - 2, எண் - 3, பக். 113-127, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

தமிழில் சொற்களஞ்சியம் வளர்ந்த வரலாற்றையும், அந்தச் சொற்களஞ்சியத்தில் சொற்கள் எவ்வாறு நிலையாக்கம் பெற்றுள்ளன என்பதையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நிகண்டுகளின் தோற்றத்திலிருந்து தற்கால லெக்சிகன் வரை நடந்த அகராதி வளர்ச்சி தொகுத்துத் தரப்பட்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சி போன்ற பல துறை வளர்ச்சியின் காரணமாகக் கடன் வாங்குதல், மொழிபெயர்த்தல், தழுவுமுறை போன்றவற்றின் மூலம் புதிய சொற்கள், உருவாக்கப்பட்டன. இந்தச் சொற்கள் அந்தந்தத் துறையினரால்

நிலையாக்கம் செய்யப்பெற்று மொழியின் சொல்பொருள் வளர்ச்சியை வெளிப்படுத்தின. சொற்களஞ்சியத்தில் இடம் பெறாத சொற்கள் நிலையாக்கம் செய்யப்பட்டவை, செய்யப் படாதவை என இரண்டாகப் பிரியும். சொற்களஞ்சியத்தில் காணப்படும் ஆயிரக்கணக்கான சொற்கள்கூட நிலையாக்கம் செய்யப்படாமல் இருக்கின்றன.

**"தமிழ்ச் சொற்பிறப்பியல் : ஞானப்பிரகாசர் – பாவாணர் ஓர் ஒப்பாய்வு"**

குணசேகரன், துரை. (1987) ஆய்வுக்கோவை 19, தொகுதி -2, பக். 78-84, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

ஞானப்பிரகாசர் - பாவாணர் ஆகியோர் சொற்பிறப்பில் கையாண்ட நெறிமுறைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சொற்களின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு ஆகியவற்றை முறையான மொழி வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆய்ந்து, மூல வடிவத்தைக் கண்டறிந்து அம்மொழிக் குடும்பத்தின் ஏனைய உறுப்புகளைக் கண்டறிவது சொற்பிறப்பியல் எனப்படும் என்றும், ஞானப்பிரகாசர் சொல்லுக்கு அடிப்படையான அர்த்தம், அண்மை, சேய்மை, கீழுறல், மேலுறல் என்னும் இடச்சார்புகளின் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு, சொல் எந்த மாற்றம் அடைந்தாலும் அதன் பொருள் மூலவடிவப் பொருளோடு தொடர்புடையதாகவே அமையும். பொருள் வேறுபடும் சொற்கள் உருவம் ஒன்றானதும் அடிகள் வேறு என்றும் கூறுவதாகவும், பாவாணர் வேர், அடி, முதனிலை என்று வேர்ச்சொற்கு மூலமான முளை, முளைக்கு மூலமாக விதைச் சொற்களையும் குறிப்பிடுவதாகவும், சொற்பிறப்பியல் நெறிமுறைகள் 20 என்றும், அதனைப் பின்பற்றாவிட்டால் ஏற்படும் வழுக்கள் 7 என்றும், எழுவகை உருவத்திரிபினால் சொற்கள் இடமாற்றம் பெறுவதாகவும் இருவரும் கூறுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

**"தமிழ் – தமிழ் அகராதி அமைப்பு"**

சண்முகம் பிள்ளை, மு. (1989) தமிழ்க்கலை, தமிழ் - 7, கலை -1,2. பக். 1-11, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இக்கட்டுரை, தமிழ் - தமிழ் அகராதிகளின் வளர்ச்சி நிலையை விளக்குகின்றது. சதுரகராதியே தமிழில் வந்த முதல் அகராதி என்றும், இதில் பெயர், பொருள், தொகை, தொடை என்ற நான்கு பிரிவுகள் உள்ளன என்றும், இவ்வகராதியின் எழுத்து வரிசைப் பற்றியும், சொற்களைப் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. 1842-ல் வெளிவந்த மானிப்பாய் அகராதியின் சொற்களின் எண்ணிக்கை, அடுத்து இதனை அடியொற்றி வெளிவந்த இராமசாமி நாயுடுவின் பேரகராதி குறித்த செய்திகளும், 1909-ல் இராமநாதன் என்பவரால் வெளியிடப்பட்ட இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அகராதியினைப் பற்றியும், மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட தமிழ்ச் சொல்லகராதியினைப் பற்றியும், 1908-ல் இரத்தினவேலு முதலியார் வெளியிட்ட சிறப்புப் பெயரகராதியினைப் பற்றியும், 1914-ல் குமரசாமிப் பிள்ளை தொகுத்த இலக்கியச் சொல்லகராதியினைப் பற்றியும் விளக்கமாகக் கூறியுள்ளது.

**"தமிழ்நாட்டு அரசுச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டமும் விளக்கமும்"**

கொண்டல் மகாதேவன், சு. (மார்ச் 1975) செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு - 49, பக். 333.

இக்கட்டுரை, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம் துவங்கிய வரலாறு, அதன் அமைப்பு ஆகியவற்றைப் பற்றிக் கூறுகின்றது. இவ்வகரமுதலி 13 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதல் தொகுதி 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது உயிர் எழுத்துக்களையும், அடுத்த எல்லாத் தொகுதிகளும் 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மெய்யெழுத்துக்களையும், ஆராய்வதாகக் கூறப்பட்டுள்ளது. இதன் சிறப்புத் தன்மைகளாக வழக்குச் சொற்களைக் கூறுதல், எல்லாப் பொருளையும் கூறுதல்,

வேர்ச்சொல் கூறுதல், தூய தமிழ்ச் சொல்லில் கூறல், பிற அகராதியிலிருந்து தனிப்பட நிற்றல் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

**"தமிழ் நிகண்டுகள் – ஒரு மேல்நோக்கு"**

*சற்குணம், மா. (அக்-நவ 1982) தமிழ்ப்பொழில், துணர் - 56, மலர் - 7, பக். 289-294, கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சாவூர்.*

இக்கட்டுரை, தமிழில் நிகண்டுகள் தோன்றியதன் காரணத்தையும், அதன் தேவையையும், நிகண்டு என்னும் சொல்லுக்கு விளக்கத்தினையும், திவாகர நிகண்டின் அமைப்பினையும் விளக்குவதை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

பேச்சு வழக்கில் மொழியைப் பயன்படுத்துவோருக்குச் சிக்கல் இல்லை என்றும், இலக்கிய வழக்கில் பயன் படுத்துவோருக்குச் சிக்கல் உண்டு என்றும், எனவே, இச்சிக்கலைப் போக்க நிகண்டுகள் தேவை என்பதையும், நிகண்டு என்ற சொல்லுக்குப் பொருளைக் கூறியும், நிகண்டு என்ற சொல் முதன்முதலில் கி.பி.8 அல்லது 9ஆம் நூற்றாண்டாகக் கருதப்படும் இறையனார் களவியல் உரையில்தான் காணப்படுகிறது என்றும், இதே காலகட்டத்தில் எழுதப்பட்ட திவாகரம், பிங்கலந்தை இரண்டிலும் இச்சொல் காணப்படுகிறது என்றும், 16ஆம் நூற்றாண்டில் மண்டலபுருடர் தாம் இயற்றிய நூலுக்கு நிகண்டு சூடாமணி என்று பெயரிட்டதாகவும், அதன் பின்னர் சொற்பொருள் கூறும் நூற்களுக்கு நிகண்டு என்று பெயர் அமைந்தது என்றும் விளக்குவதோடு, முதல் நிகண்டாகக் கருதப்படும் சேந்தன் திவாகர நிகண்டின் அமைப்பினையும் இக்கட்டுரையில் காணமுடிகின்றது.

**"தமிழ் நிகண்டுகளில் யாப்பு"**

*சற்குணம், மா. (1989) ஆய்வுக்கோவை 21, தொகுதி - 2, பக்.94-99, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.*

இக்கட்டுரை, தமிழ் நிகண்டுகளில் யாப்புக் குறித்து ஆராய்கின்றது. தமிழ் நிகண்டுகள் வெவ்வேறு யாப்புகளில் இயற்றப்பட்டன என்றும், திவாகரம் நூற்பா முறையிலும், தொல்காப்பியம் முதலான பண்டைய நூல்களில் எதுகை நயமிக்க சொல்லாட்சி முறைகள் நிகண்டுகளில் அமைந்துள்ளன என்றும், அகராதி நிகண்டு எதுகை முறையிலும், 14-ஆம் நூற்றாண்டில் இயற்றிய உரிச்சொல் நிகண்டு வெண்பா முறையிலும், நாமதீப நிகண்டும் வெண்பா முறையிலும், ஆசிரிய நிகண்டு விருத்தப்பாவிலும், கயாதரம், பல்பொருள் சூடாமணி, கந்த சுவாமியம், பொதிகை நிகண்டு, பொருட்தொகை நிகண்டு ஆகியவை நூற்பாவால் ஆனவை என்றும், நிகண்டுகள், வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம் என்னும் பாவகைகளால் வளர்ச்சி நிலை அடைந்தன என்றும் கூறப்பட்டுள்ளது.

**“தமிழ்ப் பேரகராதியில் இடம்பெற வேண்டிய சொற்களும் அவற்றின் அடிப்படைகளும்”**

*பாலசுப்பிரமணியன், க. (ஏப்ரல் 1984) அகராதிக்கலைக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

தமிழ்ப்பேரகராதி உருவாகக் காரணம், சொற்கள் அமையும் முறை போன்றவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சென்னைப் பல்கலைக்கழக அகராதிக்குப் பின் சுமார் 45 ஆண்டுவரை எந்த அகராதியும் வெளிவராத காரணத்தால் தமிழில் புதுத்துறைப் பயன்பாட்டிற்கும் இடைக்காலத்தில் வெளிவந்த எண்ணிறந்த நூல்களுக்காகவும், தமிழ்ப் பேரகராதி தொகுக்கப்பட்டது. இந்த அகராதி, தமிழில் அன்று முதல் இன்றுவரை வெளிவந்த நூல்களைப் பயில துணைபுரிவனவாக அமையவேண்டும். இவ்வகராதியில் பழைய வழக்குகள், கிளைமொழி, பேச்சுத்தமிழ், இலக்கியத் தமிழ், கலைச்சொற்கள் போன்ற அனைத்தும் இடம்பெற்று, முழுநிலை விளக்க அகராதியாய், சொல்லும் செய்தியும் செறிவு உடையதாகவும், வரலாற்று முறைமையை விளக்கக் கூடியதாகவும் அமையவேண்டும் என்று ஆசிரியர் விளக்குகின்றார்.

**"தமிழ்ப் பேரகராதியில் வடசொற்கள் இடம்பெறுதல்"**

*திருஞானசம்பந்தம், பெ. (ஏப்ரல் 1984) அகராதிக்கலைக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

*தமிழ்ப் பேரகராதியில் வடசொற்கள் எங்ஙனம் இடம் பெற்றுள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வடசொற்கள் தொல்காப்பியர் காலந்தொட்டே வழக்கில் இருந்து திவாகர நிகண்டு போன்றவற்றிலும் ஏராளம் பயின்று வருகின்றன. ஒரு சொல்லுக்கு வடமொழியில் ஒரு பொருளும், தமிழில் ஒரு பொருளும் இருந்தால் அதனை வேறுபடுத்தியும், ஒரேசொல் ஒவ்வொரு துறை இலக்கியங்களில் வெவ்வேறு பொருளைத் தருமானால் அதனை வேறுபடுத்தியும், மணிப்பிரவாள நடையினைத் தனிப்படுத்தியும், ஒரே பொருளைக் குறிக்கும் ஒரு மொழிச் சொற்களும் அகராதியில் இடம்பெற வேண்டும். இறுதியாகத் தமிழ்மொழி, வடமொழிக் கலப்பில்லாத காரணத்தால் வடமொழிப் பொருளுடன் அகராதியில் இடம்பெறல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.*

**"தமிழன் பெருமை கொள்ள ஒரு அகராதி"**

*சுபமங்களம்.*

*கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் அமைப்பையும், தனிச் சிறப்பினையும் பற்றி இக்கட்டுரை விளக்குகின்றது. தமிழில் பல அகராதிகள் வெளி வந்திருந்தும் தற்காலத் தமிழ் அகராதி அவற்றைக் காட்டிலும் சிறந்தது என்றும், 1956க்குப்பின் தமிழில் வழங்கும் எல்லாச் சொற்களையும் உள்ளடக்கிச் சிறந்ததாக 16,000 சொற்களைக் கொண்ட அகராதி என்றும், படங்கள் மூலம் பொருள் விளக்கப்பட்டுள்ளது என்றும், இலக்கணக் குறிப்புகளைக் கொண்டதாகவும், பெரிய கல்வி நிலையிலிருந்து சிறியவர்கள் வரை அனைவரும் படிக்கத் தக்க வகையில் இது அமைந்துள்ளது என்றும் சுட்டப்பட்டுள்ளது.*

"**தமிழில் 'கொஞ்சுதல்' பொருளைக் குறிக்க வழங்கும் சொற்கள்**"

சாந்தா, எம்.எஸ். (டிசம்பர் 1991) ஆய்வுக்கோவை 22, பக்.299-304, புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை.

கொஞ்சுவதற்குத் துணைசெய்யும் சொற்கள் தமிழின் வளத்தை எங்ஙனம் புலப்படுத்துகின்றன எனக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நாணமிகு தலைவியின் பேச்சு குறைவாதலால் அவளது 'கொஞ்சுதல்' மொழி குறித்துத் தொல்காப்பியத்தில் துறையில்லை என்றும், தலைவன் தலைவியின் அழகைப் பாராட்டுவதாய் சங்க இலக்கியம், காப்பியங்களில் இச்சொல் வந்துள்ளதாகவும், பேச்சு வழக்கில் நவமணிகள், உலோகம், பறவை, தெய்வம், கொடி, மலர் போன்றவற்றுடன் ஒப்பிட்டுக் கொஞ்சுவர் என்றும், உயர்ந்தோர் (ராஜா) மட்டுமின்றி இழிந்தோரும் கூடக் (திருட்டு ராஸ்கல்) கொஞ்சப் பயன்படும் சொற்களுக்குக் காரணமாவர் என்றும், பொருளற்ற சொற்கள் கூடப் பயன்படும் என்றும் இக்கட்டுரையில் குறிப்பட்டுள்ளது.

"**தமிழில் சிறப்பகராதிகள்**"

சதாசிவம், மு. (மார்ச் - சூன் 1989) தமிழ்க்கலை, தமிழ் - 7, கலை - 1,2, பக்.30-34, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தமிழில் சிறப்பகராதிகள் எவை, அவற்றின் அமைப்பு ஆகியவற்றைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கடினச் சொற்களுக்குப் பொருள் கூறும் அகராதிகளே சிறப்பகராதி எனப்படும் என்றும், ஒருமொழி அகராதியும் இருமொழி அகராதியும் பொது அகராதிகள் என்றும், மற்றவை சிறப்பகராதி என்றும் கூறப்பட்டுள்ளது. சொல்லடைவுகள், சொற் பொருளகராதி, சொல்லாட்சித் தொடர்புள்ள அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் முதலியவை சிறப்பகராதி வகையைச் சார்ந்தவை என்றும், எல்லாப் பல்கலைக்கழகங்களும் வெளியிட்டுள்ள சிறப்பகராதிகளும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. 20ஆம் நூற்றாண்டில்தான் சிறப்பகராதிகள் ஏராளம் வெளிவந்தன என்றும், இதுவரை வெளிவந்துள்ள சிறப்பகராதிகளைத்

தொகுத்தும், இனி வெளிவரவேண்டிய சிறப்பகராதிகள் எவை என்பதையும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

"**தமிழில் சொல்லாக்கம்**"

கார்த்திகேயன், ஆ. (ஏப்ரல் - ஜூன் 1981) மொழியியல், தொகுதி- 4, எண் - 4, பக். 71-80, அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

இக்கட்டுரையில் தமிழில் சொற்கள் எந்தெந்த வகையில் ஆக்கம் செய்யப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. தமிழில் தமிழுக்கே உரிய தனிச்சொற்களும், பிற மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டுத் தமிழாக்கப்பட்ட சொற்களும் இருக்கின்றன என்றும், இதைத் தவிர வினைச் சொற்களிலிருந்தும், பெயர்ச் சொற்களிலிருந்தும் சொற்கள் ஆக்கம் செய்யப்பட்டுள்ளன என்றும், இரண்டு சொற்கள் இணைந்து (காட்டாக பெயர் + பெயர், வினை + வினை, பெயர் + வினை போன்று இணைந்து) கூட்டாக்கம் செய்து புதுச்சொற்கள் உருவாகியுள்ளன என்றும், அவை ஒவ்வொன்றும் சான்று மூலம் விளக்கியும் கூறப்பட்டுள்ளன. ஒரு மொழியின் சொற்களஞ்சியம் சொல்லாக்கத்தினால் விரிவடைகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது.

"**தமிழில் சொற்பிறப்பியலின் வரலாறு ஒரு மேலோட்டப் பார்வை**"

குணசேகரன், துரை. (1986) ஆய்வுக்கோவை 18, தொகுதி - 2, பக். 68-72, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

தமிழில் சொற்பிறப்பியலின் வரலாற்றினைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சொல்லாய்வுத் துறையினை சொல்லாக்கம், சொற்பொருளியல் சொற்பிறப்பியல் என மூன்றாகப் பகுக்கலாம் என்றும், தமிழில் சொற்பிறப்பியல் ஆராய்ச்சி தொல்கப்பியர் காலத்திலேயே தொடங்கிவிட்டது என்றும், அடுத்துப் பவணந்திமுனிவரும், பின்பு கால்டுவெல் என்பவரும் சொற்பிறப்பாராய்ச்சியினை விரிவாகச் செய்தனர் என்றும், சொல்லாராய்ச்சியை முதன்முதலில் நூல் எழுதி

வெளியிட்ட பெருமை கார்த்திகேய முதலியாரையே சாரும் என்றும், பின்பு ஞானப்பிரகாசர், கணேசப் பிள்ளை போன்றோர் சொல்லாராய்ச்சி செய்தாலும் தேவநேயப் பாவாணரே தமிழில் சொல்லாராய்ச்சியில் எண்ணிறந்த நூல்கள் செய்து சொல்லாராய்ச்சியின் தந்தை எனப் போற்றப் பெற்றார் என்றும், பாவாணருக்குப் பின் பலர் இந்தச் சொல்லாராய்ச்சியினை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் இக்கட்டுரை விளக்குகின்றது.

**"தமிழில் துணைவினைகளின் வளர்நிலை"**

மணிகண்டன், இரா. (1987) அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக இரண்டாம் மாநாட்டுக் கருத்தரங்கு மலர்.

தமிழில் துணைவினைகளின் தோற்றம், வளர்ச்சி அவை மொழி வளர்ச்சிக்கு எவ்வாறு துணை நிற்கின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். துணைவினைகள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பும் அவரது காலத்திலும் வழக்கில் உள்ளன என்றும் சங்கம், சங்கம் மருவிய காலங்களில் அருகியும் இடைக்காலத்தில் குறிப்பிட்ட அளவும் இருந்து தற்காலத்தில் நல்ல வளர்ச்சி அடைந்துள்ளனவாகவும் கூறப்பட்டுள்ளது. துணைவினைகளின் பெருக்கத்தால் வினைச் சொற்கள் பெருகி மொழி வளரத் துணை நிற்கின்றன என்றும் கூறப்பட்டுள்ளது.

**"தமிழில் புதுச்சொல்லாக்கம்"**

கருணாகரன், கி. ஜெயா, வ. (சன-சூன் 1986) மொழியியல், தொகுதி - 9, எண் - 3,4. பக். 91-116, அனைத்திந்தியத் தமிழ்மொழியியல் கழகம், அண்ணாமலை நகர்.

தமிழில் சொல்லாக்கத்தின் தேவை, அவற்றின் வளர்ச்சி போன்றவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். முதலில் சொல்லும், அதன் அமைப்பும், அதன் விளக்கங்களும் இலக்கண வகையில் எவ்வாறு அமைந்துள்ளன என்றும், சொல்லாக்கம் தமிழில் ஏன்? தேவைப்படுகின்றது என்பதும், அது

ஒவ்வொரு துறையிலும் கால வளர்ச்சிக்கு ஏற்ப எப்படித் தேவைப்படுகின்றது என்பதும் எடுத்துக்காட்டுகள் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. ஆரம்பகாலச் சொல்லாக்கப் பணி ஒலிபெயர்ப்பு முறை, மொழிபெயர்ப்பு முறை ஆகிய இரண்டு வகைகளில் ஆரம்பிக்கப்பட்டது என்றும், சொல்லாக்கம் செய்யும்போது தொடர்களாக அமைந்த சொற்கள் பின் எளிமையாக்கப்பட்டன என்றும், இறுதியாகச் சொல்லாக்கங்கள் வரலாற்று அடிப்படையில் எவ்வாறு மாற்றம் அடைந்தன என்றும், கடன் வாங்கல் அடிப்படையிலான சொற்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து எடுத்துக்காட்டுகள் கொண்டு விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இறுதியாக, பேச்சு வழக்கிலிருந்து சொற்கள் எவ்வாறு சொல்லாக்கம் செய்யப்படுகின்றன என்பதும் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"தமிழில் பொறியியல் கலைச்சொல்லாக்கமும் கருத்து வளமும்"**

இளங்கோவன், அ. (ஏப்ரல் 1984) அகராதிக்கலைக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பொறியியல் துறையிலுள்ள கலைச்சொற்களை உருவாக்குவதில் உள்ள சிக்கல்களையும் அவற்றின் தீர்வுகளையும் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கலைச்சொல்லாக்கம் செய்யும்போது பொதுக் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா, சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமா என்ற கேள்விகள் எழும்போது மக்களுக்குப் புரியும் வகையில் சொற்கள் அமையவேண்டும் என்றும், இலக்கணம் மொழி நடைக்குத் தடையாக இருக்காது என்றும் கூறப்பட்டுள்ளது. கலைச்சொற்கள் குறிப்பிட்ட கருத்தைச் சுட்டுதற்கும், பழக்கத்திலுள்ள சொற்களைக் குறிப்பிட்ட துறையில் மட்டும் பயன்படுத்த முடியும் என்றும், பொறியியல் கலைச்சொற் பட்டியல் தரப்பட்டுள்ளது பொருள் தெரிந்தாலும் தமிழில் போதிய தெளிவு இல்லாமல் ஆக்கப்பட்ட சொற்கள் உள்ளதாகவும் இரண்டையும் செறிவுபட எண்ணி ஆக்கம் செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"தமிழில் வேர்ச்சொற்கள்"**

வேலாயுதம், க. (1982) ஆய்வுக்கோவை **14**, தொகுதி - **2**, பக். 325-330. அனைத்திந்தியத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

தமிழில் வேர்ச்சொற்கள் எவ்வாறு அமைகின்றன என்று ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அடை, கலை, சுரை, பசை, வழை இவ்வைந்து சொற்களில் ஐ என்னும் ஈற்றுப்பகுதி, அட், கல், வழ் என்பவற்றின் பொருட்களை வேறுபடுத்துகின்றது. இதைப்போன்றே அர், அகு, உவை, அம்பு, உக்கை, அர்ச்சி என்ற ஆறுகளில் பொருள்நிலைகள் சேர்ந்து எவ்வாறு பொருள் மாறுபடுகின்றன என்றும் விளக்கப்படுகின்றது. ஒரே பொருள் நிலையோடு பல்வேறு சொல்லீறுகள் சேர்ந்து ஒரே அடிப்படைப் பொருளில் பல பொருள்களைக் குறிக்கப் பயன்படுகின்றன என்றும், அவை எடுத்துக்காட்டுகளின் மூலம் விளக்கப்படுகின்றன. ஒவ்வொரு வேர்ச் சொல்லிலிருந்து சொற்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்றும் விளக்கப்படுகிறது.

**"தமிழுக்குப் புதிய அகராதி : ஒரு நல்ல முயற்சி"**

நாச்சிமுத்து, கி. கேரளப் பல்கலைக்கழகம், (22.2.84) தினமணி, பக்.2

தமிழுக்குப் புதிய அகராதி ஒரு நல்ல முயற்சி என்ற இக்கட்டுரை, தமிழில் புதிய அகராதி வெளிவருவதைப் பற்றிக் கூறுகின்றது. தமிழர்கள் கலைக் களஞ்சியம், அகராதித் தயாரிப்பதில் முன்னோடியாக இருந்து தயாரித்த பழைய முயற்சியை நினைவு கூறுவதோடு அதனைத் திருத்திச் செப்பனிட்டுக் காலந்தோறும் வெளியிடும் முயற்சியை மேற்கொள்ளாமை ஒரு தேக்க நிலை என்றும், இந்த முறையை நிவர்த்திச் செய்ய முயலவில்லை என்றும், தமிழ் மாணவர்கள் இலக்கணப் பிழையின்றி எழுத ஒலிப்பயிற்சிப் பற்றிய பாலபாடம், இலக்கணச் சுருக்கம் போன்றவற்றையும் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான தனித்தனி அகராதிகளையும் மலிவு விலையில் வெளியிட வேண்டும் என்றும்,

அவற்றை வாங்கும் முயற்சியும் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"தமிழும் அகராதியும்"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (பிப்ரவரி 1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி - 2, பக். 417-426, வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

இக்கட்டுரையில் ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி என்ற அகராதிகளின் வரலாறுகள் கூறப்படுகின்றன. தமிழில் முதலில் அகராதி முறை எங்ஙனம் கையாளப் பெற்றது என்பதை அகராதி நிகண்டினைக் கொண்டும், பின்பு பாதிரிமார்கள் செய்த நன்மைகளையும், சதுரகராதியின் விளக்கமும், ஆங்கிலேயர்களின் உதவியால் வெளிவந்த தமிழ் - ஆங்கில அகராதியினைப் பற்றியும், இருமொழி அகராதியின் அவசியம் பற்றியும், தமிழில் பிறமொழிகளுடன் இணைந்து வெளிவந்த இருமொழி அகராதிகள் எவையெவை என்பதினைப் பற்றியும், பிற அகராதிகளில் உள்ள குறைபாடுகளை ஒட்டுமொத்தமாகத் தொகுத்துத் திருந்திய வகையில் வெளியான 'தமிழ் லெக்சிகன்' பற்றியும், அகராதி என்பது வளரவேண்டிய ஒன்று என்பது போன்ற பல கருத்துக்களை விளக்கமாக எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**"தருமபுரி மாவட்டத்தில் சில தொழிற்சொற்கள்"**

இராசரத்தினம், சு. (1987) ஆய்வுக்கோவை 19, தொகுதி -2, பக். 26-32, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

தருமபுரி மாவட்டத்தில் வழங்கும் சில தொழிற்சொற்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒவ்வொரு சாதிக்கு என்று பேச்சு மொழிகள் வேறுவேறாக இருப்பினும் அந்த மாவட்டத்தில் உள்ள தொழிற் சொற்கள் பொதுவாகவே இருக்கும். தருமபுரி மாவட்டத்தில் உருது, மராட்டி, கன்னடம், தெலுங்கு போன்ற பல மொழிகள் பயின்று வருவதாகவும், கேழ்வரகைக்

குறிக்கும் ஆரியம் என்ற சொல் அந்த மாவட்டத்திற்கே உரியது என்றும் கூறப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் 5 வகை மூங்கில்களைக் கொண்டு 12 வகை கூடைகள் செய்வதாகவும் அடிவைத்தல், கால்வைத்தல் போன்ற சொற்களைப் பயன்படுத்துவதாகவும், கூறப்படுகிறது. கயிறு திரித்தலில் வடம் பிரித்தல், கயிறு விடுதல் போன்ற சொற்களும், கல் உடைத்தலில் கற்களை வசக்கல், முரணக்கல், கருங்கல் என்று கூறவதாகவும், சிறு தொழில்களால் ஏற்படும் தொழிற்சொற்களைப் பற்றியும் ஆய்ந்துள்ளது.

**"தற்காலத் தமிழ் அகராதி"**

*சுதந்திரமுத்து, மு. (டிசம்பர் 1991) புலமை, தொகுதி - 7, பகுதி-2, 38, பீமண்ணன் தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை.*

இக்கட்டுரை, க்ரியா பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கும் 'தற்காலத் தமிழ் அகராதி' என்னும் அகராதி நூலைப் பற்றிய மதிப்புரையாகும். இவ்வகராதி தற்காலத் தமிழுக்கு முதல் அகராதி என்றும், 1956க்குப் பிறகு வந்த தமிழ் நூல்கள், தற்காலப் பாடநூல்கள், படைப்பிலக்கியங்கள், அறிவியல் நூல்கள், தகவல் தொடர்புகள், வட்டார வழக்கு, இலங்கை வழக்கு, சமய வழக்கு ஆகியவற்றில் பெருவழக்கான சொற்களைக் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளதென்றும், தற்காலத் தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் வரையறை செய்யப்பட்டிருக்கிறது என்றும், சில பேச்சு வழக்குச் சொற்களுக்கு எழுத்துவடிவம் தந்திருப்பதும், பண்பாட்டுச் சொற்கள், ஆங்கில விளக்கம், எடுத்துக்காட்டு வாக்கியங்கள், இலக்கணக் குறிப்புகள் போன்றவற்றைப் பற்றியும் இக்கட்டுரை தெளிவாகக் கூறுகின்றது.

**"திராவிட மொழிகளில் அகரமுதலிப்பணி"**

*மதிவாணன், இரா. (டிசம்பர் 1975) செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு- 50, பக். 213.*

இக்கட்டுரை, திராவிட மொழிகளில் அகரமுதலி வளர்ச்சியினைக் கூறுகின்றது. தமிழில் அகராதி தொல்காப்பியம், நிகண்டு என்று வளர்ந்து 1594-ல் அகராதி நிகண்டு என்ற

இரேவண சித்தர் என்பவரது அகராதியே முதல் அராதியாகும் என்றும், தெலுங்கிலும் செய்யுள் வடிவில் நிகண்டுகள் தோன்றி 17ஆம் நூற்றாண்டில் சௌரப்ப கவி இயற்றிய அகராதி வெளிவந்தாலும் 19ஆம் நூற்றாண்டில்தான் அகரவரிசை படுத்தப்பட்ட ஆந்திர தீபிகை வந்ததாகவும் கன்னடத்தில் 'இரன்னகந்த' என்ற நிகண்டே முதல் அகராதியாகக் கொள்ளப் பட்டாலும், 1894-ல் வெளிவந்த கன்னட - ஆங்கில அகராதியே சிறந்ததாகக் கூறப்பட்டுள்ளது. மலையாளத்தில் 1846-ல் பெய்லி பாதிரியார் வெளியிட்ட மலையாள - ஆங்கில அகரமுதலி முதல் நூலாகக் கருதப்பட்டாலும், அரசும் பல்கலைக்கழகமும் இணைந்து 1965-ல் பேரகரமுதலியின் முதல் தொகுதியை வெளியிட்டதாகவும், இந்தியாவிலேயே சிறந்த அகராதியாக இது விளங்குவதாகவும் கூறப்பட்டுள்ளது.

**"திராவிட மொழிகளில் நிகண்டுகள்"**

*சற்குணம், மா. (1985) மொழியியல், தொகுதி - 9, எண் - 1,2, பக். 19-45, அனைத்திந்தியத் தமிழ்மொழியியல் கழகம், அண்ணாமலை நகர்.*

திராவிட மொழிகளில் நிகண்டுகளைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ், கன்னடம் ஆகிய இருமொழிகளிலும், 9,10ஆம் நூற்றாண்டிலேயே அகராதிக் கலை வளரத் தொடங்கிவிட்டது என்றும், தமிழில் சேந்தன் திவாகரமும், கன்னடத்தில் நன்ன கன்னடமும் முதல் அகராதி என்றும், மலையாளத்தில் 19ஆம் நூற்றாண்டில்தான் பெய்லி பாதிரியார் அகராதி உருவாக்கினார் என்றும், இதைத் தவிர்த்த மற்ற மூன்று மொழிகளிலும் அகராதிகள் நிகண்டுகளாகவே தோன்றின என்றும், அவை மனப்பாடம் செய்யத் தக்க வகையில் யாப்புகளில் அமைந்தன என்றும், நிகண்டுகள் ஒருமொழி அகராதிகளாகவே தோன்றின என்றும், அகரநிரல் முயற்சி மேலைநாட்டவர் வருகைக்கு முன்பே திராவிட மொழிகளில் தோன்றினாலும் அது அவர்கள் வருகைக்குப் பின்புதான் வளர்ச்சி அடைந்தது என்றும் மொழியப்பட்டுள்ளது.

**"திவாகர நிகண்டின் காலம்"**

சற்குணம், மா. (1986) ஆய்வுக்கோவை 18, தொகுதி - 2, பக். 95-100, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

சேந்தன் திவாகர நிகண்டின் காலத்தை அறுதியிட முனைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். புலவர் பெயரில் பலர் இருந்திருக்கக் கூடுமாகையால் புலவரை வைத்துக் காலத்தை அறிவது சிரமம் என்றும், நூலிலுள்ள சொல்லாட்சியை வைத்து, ஆய்வு செய்யலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. காப்புச் செய்யுளில் விநாயகரைப் பற்றிக் கூறியிருப்பதால், விநாயகர் வழிபாடு 6ஆம் நூற்றாண்டுவரை இல்லை என்றும், இளம்பூரணரும், யாப்பருங்கல விருத்தியாரும் திவாகரத்தைக் கூறியிருப்பதால் 11ஆம் நூற்றாண்டிற்கு முந்தியது என்றும், மக்கட் பெயர்த்தொகுதியில் சாளுக்கிய மன்னரைக் கூறியிருப்பதால் சாளுக்கியர் காலம் 7ஆம் நூற்றாண்டு எனவும், பாகவதர் என்ற சொல் திவாகரத்தில் காணப்படுவதால் நாதமுனிகள் காலமான 8ஆம் நூற்றாண்டிற்குப் பின் திவாகரம் செய்யப்பட்டது என்றும், தமிழுக்கு இனிமை என்ற பொருளைத் திவாகரம் தராது பிங்கலம் தந்துள்ளதால் 9ஆம் நூற்றாண்டில்தான் அச்சொல்லுக்கு அந்தப் பொருள் வழக்கில் வந்ததால் 8ஆம் நூற்றாண்டுதான் திவாகர காலமாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"திவாகரப் பதிப்பு வரலாறு"**

சண்முகம் பிள்ளை, மு. (1978) ஆய்வுக்கோவை 10, தொகுதி-1, பக். 221-225, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

இக்கட்டுரை, திவாகர நிகண்டின் பதிப்பு வரலாற்றை ஆய்கின்றது. திவாகர நிகண்டை முதன்முதலில் பதிப்பித்தவர் தாண்டவராய முதலியார் ஆவர் என்றும், முதல் எட்டுத் தொகுதிகளே பதிப்பிக்கப்பட்டன என்றும், பிறகு நயநப்ப முதலியார் இன்னும் இரண்டு தொகுதிகள் சேர்த்து 1839-ல் 10 தொகுதிகளாக வெளியிட்டார் என்றும் எ,ஒ முதலிய

குற்றெழுத்துக்கள் புள்ளியிட்டு அச்சிடப்பட்டன என்றும், ஒவ்வொரு தொகுதிச் சூத்திரங்களுக்கும் தொடர் எண் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. குப்பன் அய்யங்கார், சின்னக் கண்ணைய செட்டியார், குருநாத சுவாமிகள், லோகநாத முதலியார் போன்றோர் முறையே 1859, 1886, 1897, 1904-ல் வெளியிட்டனர் என்றும், 1958-ல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்ட பதிப்பே இப்போது கிடைக்கும் அச்சுப் பதிப்பென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"திவாகரம் ஓர் ஆய்வு"**

*பாலகிருஷ்ணன், மு. (1972) தமிழாய்வு, தொகுதி - 1, பக்.63-89, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*

இக்கட்டுரையில் நிகண்டு கற்றலின் இன்றியமையாமையும், நிகண்டு என்னும் பெயர் வந்த வரலாறும், உரிச்சொல் என்னும் பெயர் மாறி நிகண்டு என்னும் பெயர் வழக்குப் புகுந்த காலம் பற்றியும், சொற்பொருள் விளக்கும் நூல் தோன்றக் காரணம் பற்றியும், திவாகர நிகண்டின் தோற்றம், காலம், ஆசிரியர் வரலாறு, நூலின் அமைப்பு, கருப்பொருள்கள், நூலில் உள்ள முப்பெரும் பிரிவுகள், சொல்பொருள் செயல் விளக்கம், இலக்கியத்திற்கும் நிகண்டிற்கும் உள்ள தொடர்பு, திவாகர நிகண்டு தரும் சிறப்புச் செய்திகள் எனப் பல்வேறு தலைப்புகளில் நிகண்டைப் பற்றிய வரலாறும், திவாகர நிகண்டைப் பற்றிய விரிவான விளக்கமும் தரப்பட்டுள்ளன.

**"தென்னாட்டு மொழி வளர்ச்சியில் பிரிட்டிஷாரின் சேவை"**

*மார், ஜான். (ஏப்ரல் 1957) கலைக்கதிர், மலர் - 9, இதழ் - 4, பக். 25-26.*

இக்கட்டுரை, திராவிட மொழி வளர்ச்சிக்கு ஆங்கிலேயர்கள் செய்த தொண்டினை விளக்குவதாக எழுதப் பட்டுள்ளது.

ஆங்கிலேயர்கள் திராவிட மொழிகளைக் கற்பதற்கு நான்கு காரணங்கள் கூறப்பட்டுள்ளன. இக்காரணங்களை அடிப்படையாகக் கொண்டு திராவிட மொழிகளைக் கற்று முதன்முதலில் தமிழ் இலக்கணம் பற்றி 1728-ல் ஒரு நூலை இலத்தீன் மொழியில் வெளியிட்டவர் ஜோசப் பெஸ்கி என்ற வீரமாமுனிவர் ஆவர். இவரைத் தொடர்ந்து மெக்கன்சி என்பவர் பல நூல்களைத் தொகுத்தார். மேலும் தமிழ்நாட்டின் சிறப்பைக் கூறுமிடத்து மாமல்லபுரத்தின் சிறப்பைக் கூறும் கட்டுரை வில்லியம் சேம்பர்ஸ் என்பவர் 1789-ல் 'ஏஷியாடிக் ரிசர்ச்சஸ்' என்ற இதழில் வெளியிட்டார். இதுவே தமிழ்நாட்டின் சிறப்பைக் கூறும் முதல் கட்டுரையாகும். மேலும் பலர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளிலும் அகராதிகளும், நூல்களும் இயற்றத் தொடங்கினர். தமிழில் ஜி.யு.போப், கால்டுவெல் போன்றோர் செய்த பணி தலைசிறந்த பணியாகும். தென்னகத்தின் மொழி, கலை, பண்பாடு, இலக்கியம் போன்றவற்றை வெளிநாட்டவரையும் அறியச் செய்த பெருமை ஐரோப்பியர்களைச் சாரும் என்றும் இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

**"தொகுப்பியலில் வைணவச் சொற்கள்"**

வேங்கடராமன், சு. (1989) தமிழ்க்கலை, தமிழ் - 7, கலை -1,2. பக். 115-122, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வைணவக் கோயில்களிலும், இல்லங்களிலும் வழங்கும் வைணவச் சொற்களைத் தொகுத்துப் பேரகராதி, சிறப்பகராதிகளில் பதிவு செய்யவேண்டும் என்பதையே இக்கட்டுரை விளக்குகின்றது. பொருள்கொள்ளும் முறையில் நேரடி, குறிப்பு என இரண்டு வகைப்பொருள் உண்டு என்றும், திருவரங்கம், வில்லிபுத்தூர், . ஆழ்வார்திருநகரி, திருமாலிருஞ்சோலை, மதுரை ஆகிய தலங்களில் வழங்கும் சொற்கள் தொகுக்கப் பெற்று நேர் அல்லது குறிப்புப்பொருள், சொல்வழங்கும் சூழல், இலக்கிய வரலாறு, ஆவணம், மக்களின் பேச்சுவழக்கு ஆகியன காட்டப்படுகின்றன. திரு என்ற

அடைமொழி சேர்த்தே பல சொற்கள் வழங்கப் படுவதாகக் கூறுகின்றார். வடமொழிக்குத் தமிழ்ச் சொற்களும், வழிபாட்டில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கொண்ட சொற்களும், ஆடை, உணவு, கோயில் பணியாளர், குறித்த சொற்களும், வழக்குச் சொற்கள், பிறமொழிக் கலப்புச் சொற்கள் போன்றவையும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**"தொல்காப்பிய உரியியல் – ஓர் அகராதியியல் கண்ணோட்டம்"**

பாலசுப்பிரமணியன், க. (1985) அகராதிக்கலை கருத்தரங்கு, பெருஞ்சொல் அகராதித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். (1989) தமிழ்க்கலை, தமிழ் - 7, கலை - 1,2, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தொல்காப்பிய உரியியல் அகராதிக் கூறுகளை எங்ஙனம் கொண்டுள்ளது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். உரிச்சொற்கள் அகராதிச் சொற்களே என்று மீனாட்சிசுந்தரனாரும், சண்முகனாரும் கருதுகிறார்கள் என்றும், உரிச்சொற்கள் சொல்லியல் கூறு, பொருளியல் கூறு, பொருள் விளக்கும்முறை ஆகிய மூவகைச் செய்திகளைக் கொண்டுள்ளனவாகவும், சொல்லுக்கு இலக்கணம் கூறுதல் அகராதியியல் மரபு போன்ற செய்திகளும் இந்த உரிச்சொற்கள் பெயரினும் வினையினும் மெய்தடுமாறா என்று தொல்காப்பியர் கூறியதாகவும், ஒருசொல் பலபொருள், பலசொல் ஒருபொருள் போன்ற செய்திகளும் பயிலாதச் சொற்களுக்குப் பொருள் கூறும்போது பயின்ற சொற்களைக் கூறுவதுமாகிய அகராதிக் கூறுகள் உரியியலில் காணப்படுகின்றமை சான்றுகள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

**"தொல்காப்பியத்தில் சமூக உறவுமுறைப் பெயர்கள்"**

ஆறுமுகம், அ. (1986) ஆய்வுக்கோவை 18, தொகுதி - 2, பக்.18-23, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

தொல்காப்பியத்தில் கூறி இருக்கும் சமூக உறவு முறைப்பெயர்களைத் தொகுத்துத் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தொல்காப்பியத்தில் முறைப் பெயர்களைப் பெண்மை, ஆண்மை முறைப்பெயர்கள் என இரண்டாகப் பிரித்து, பெண்ணைக் குறிக்க வந்த பெயர்களும், ஆண்மைப் பெயர்களில் வரும் பெயர்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பின்பு குருதித் தொடர்பினால் வரும் கிளைப் பெயர்கள் எழுத்ததிகாரத்தில் இரண்டு இடங்களில் தரப்பட்டுள்ளன என்றும், பின்பு குழூப்பெயர், குடிப்பெயர், நிலப்பெயர், உடைமைப்பெயர், ஆடியற்பெயர், வினைப்பெயர், எண்ணியற் பெயர், தாபதர், பண்புகொள் பெயர் போன்ற பெயர்கள் என்ன என்ன என்றும், அவை தொல்காப்பியத்தில் எங்கெங்கு வந்துள்ளன என்ற செய்திகளும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**"தொல்காப்பியத்தில் சொற்பிறப்பியல் சிந்தனைகள்"**

குணசேகரன், துரை. (1987) அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், மாநாட்டு மலர், பக். 86.

தொல்காப்பியத்தில் சொற்பிறப்பியல் சிந்தனைகள் எந்த அளவு இடம் பெற்றுள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். எல்லாச் சொற்களும் பொருள் குறிக்கக் கூடியவையே என்றும், அவை பெயர், வினை, இடை, உரி எதுவாக இருந்தாலும் பொருந்தும் என்றும், பெயர் இடுகுறி, காரணம் என்று இருந்தாலும் இடுகுறியும் காரணப்பெயர்தான், காரணத்தினால் மட்டும் அந்தப்பெயர் உண்டாகாது என்றும் கூறப்பட்டுள்ளது. சொல், பொருள் குறித்தாலே சொல் என்று பெயர் பெறும் என்றும், உரிச்சொல் என்பது வேர்ச்சொல் என்று பல்வேறு இலக்கண ஆசிரியர்களால் கூறப்பட்டாலும், உரிச்சொல் என்பது சொல் பிறப்பதற்குரிய சொல் ஆகும் என்றும், தொல்காப்பியத்தின் மூலம் விளக்கப்படுவதாகவும், இறுதியாகச் சொற்பிறப்புப் பற்றி எவ்வளவு ஆய்வுகள் வெளிவந்தாலும் தொல்காப்பியத்தில் எல்லாம் காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

**"தொல்காப்பியரின் சொற்பொருட் சிந்தனைகள்"**

*மாதையன், பெ. (ஏப்ரல் 1989) தமிழ் இலக்கணக் கருத்தரங்கம், மொழியியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். (1990) தமிழ்ப்பொழில், துணர் - 64, மலர் - 5, கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சாவூர்.*

இக்கட்டுரையில் தொல்காப்பியரின் சொற்பொருட் சிந்தனையை மொழியியல் அறிஞர்களின் சிந்தனையோடு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது. தொல்காப்பியரின் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே போன்று பல நூற்பாக்களை ஆசிரியர் சான்று காட்டியும், உரையாசிரியர்களின் உரை விளக்கங்களையும் சான்றாகக் கொண்டு ஸ்டீபன், உல்மன், ஆக்டன், ரிச்சர்ட்ஸ், சுகுஸ்தா போன்ற மொழியியல் அறிஞர்களின் அறிவியல் பூர்வமான மொழியியல் சிந்தனையோடு ஒப்புமைப் படுத்தப்பட்டுள்ளது.

**"தொல்காப்பியரின் மொழிபொருட் சிந்தனைகள்"**

*இராமசாமி, க. (1978) புலமை, 4:1, பக். 50-63*

தொல்காப்பியர் உணர்த்தும் மொழிக்கும் பொருளுக்கும் உள்ள உணர்வுகளை இன்றைய பொருளியல் சிந்தனைகளுடன் ஒப்பிட்டு நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரத்திலும் பொருளைப் பற்றிய குறிப்புகள் காணப்பட்டாலும், தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் தான் மொழிக்கும், பொருளுக்கும் உள்ள உறவு பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. பொருள் ஒருமை, பொருள் பன்மை அல்லது பொருள் மயக்கம், சார்பும் பொருளும், முதலும் சினையும், பொருளுண்மையும் பொருளின்மையும், எதிர்ப்பொருள், பிணிவுறு பொருள், முன்னுறு பொருள் போன்ற எட்டுப் பொருள்கள் நூற்பாக்களுடனும், எடுத்துக் காட்டுகளுடனும் விளக்கப்பட்டுள்ளன.

**"தொல்காப்பியரும் அகராதிக்கலையும்"**

*செயதேவன், வ. (1974) தமிழாய்வு, தொகுதி - 3, பக். 32-60, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*

அகராதியியலின் அடிப்படைக் கூறுகள் தொல்காப்பியத்தில் அமைந்திருப்பதைப் புலப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அகராதியியலின் உயிர்க் கூறான அகரநிரல் நூலின் தொடக்கத்திலேயே இருப்பதாகவும், சொல்லுக்குப் பொருளும், இலக்கணக் குறிப்பும் அகராதியில் அமைவது போன்றே தொல்காப்பியத்தில் பொருள் சுட்டுதல், இலக்கணம் சுட்டுதல் ஆகிய இரண்டும் காணப்படுகின்றன என்றும், இந்தக் கூறுகள் பெயர், வினை, இடை, மரபு போன்ற இயல்களில் மிகுதியாகக் காணப்படுவதாகவும், அகராதிக் கூறுகளில் ஒன்றான மரபு காட்டுதலைத் தொல்காப்பிய மரபியலில் இளமைப் பெயர்கள், உயிர்களின் பாகுபாடு, நூலின் மரபு போன்ற பிரிவுகளில் விளக்கப்படுவதாகவும், அகராதியியலில் காணப்படும் ஒலிப்பு முறை தொல்காப்பியப் பிறப்பியலிலும் சொற்களின் மூலத்தை எச்சயியலிலும் பொதுவாகக் கூறியிருப்பதாக இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

**"தொல்காப்பியரும் அகராதியும்"**

காமேஸ்வரி, தெ.மீ. (மார்ச் - மே 1979) மொழியியல், தொகுதி-2, எண்-4, பக். 93-107. அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

தொல்காப்பியத்தில் அகராதிக் கூறுகள் என்ன என்ன காணப்படுகின்றன என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். உரியியலில் காணப்படும் 116 சொற்களை அகரநிரல்படுத்தி அகராதி போன்று தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சொற்களின் பொருள்கள் காலப்போக்கில் மாறிக்கொண்டே வருகின்றன என்றும், ஒரு சொல்லுக்கு எத்தனைப் பொருள்களைத் தந்தாலும் அந்தப் பொருளானது எளிமையாகவும், பொருத்தமாகவும் இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. உரிச்சொல் என்பது அடிச்சொல், உள்ளடக்கி என்றும் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியர் தரும் இடைச்சொல் பட்டியலில் சில அடிச்சொற்கள் இன்றும் காணப்படுகின்றன என்றும், அவற்றிற்கு எடுத்துக்காட்டுகளும் தரப்பட்டுள்ளன.

**"தொழிற்சாலையில் சொல்லாக்கம்"**

நெடுஞ்செழியன், தி. (1989) வளர்தமிழில் அறிவியல், 2வது கருத்தரங்கு, பக். 570-575, அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழகம், தஞ்சாவூர்.

இக்கட்டுரை ஓர் உரையாடலாகும். ஆங்கிலத்திற்கு நேரான தமிழ்ச்சொல் அமைக்காது சொல்லின் தன்மை, பயன் இவற்றினால் சொல்லாக்கம் செய்யவேண்டும் என்பதை எடுத்துக்காட்டு மூலம் விளக்கப்பட்டுள்ளது. சொல்லாக்கம் செய்யும்போது எல்லோருக்கும் புரியும் வகையில் பேச்சு மொழியில் எளிமை உடைய சொல்லாகக் கையாளவேண்டும் என்றும், எந்தத் துறையில் சொல்லாக்கம் செய்கிறோமோ அந்தத் துறைக்குப் பொருத்தமானதாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும் என்றும், ஒரு துறைக்குப் பொருத்தமானது மற்ற துறைக்குப் பொருத்தமில்லாமல் இருந்தால் அந்தத் துறைக்கு ஏற்ற வகையில் மாற்றவேண்டும் என்றும், சொல்லாக்கம் கருத்துச் செறிவுடையதாக இருக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"நாஞ்சில் நாட்டு வேளாளர் வட்டார வழக்குக் கலைச்சொற்கள்" [இறப்புச் சடங்குகள் தொடர்பானவை]**

ஆனந்தம் பிள்ளை, க. (1987) நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோவை, தொகுதி - 1, பக். 561, இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலை நகர்.

நாஞ்சில் நாட்டு வேளாளர் வட்டார வழக்குச் சொற்களில் இறப்புச் சடங்குகள் தொடர்பான கலைச்சொற்களைத் தொகுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வட்டார, இறப்புச் சடங்கு வழக்குச் சொற்கள், முதலில் சொல்லும், பின் அதன் பொருளும், விளக்கமும், மேலும் பொருள் தெளிவு வேண்டிப் பேச்சு வழக்குப் பழமொழியும் என்னும் அமைப்பில் தொகுக்கப் பட்டுள்ளன. இந்த அமைப்பில் 20 கலைச்சொற்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**"நாமதீப நிகண்டு"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (பிப்ரவரி 1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி-2, பக். 386-393, வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

இக்கட்டுரையில் நாமதீப நிகண்டை ப்பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. நிகண்டுகள் பற்றியும் அவற்றின் வளர்ச்சியைப் பற்றியும் முதலில் கூறப்பட்டுள்ளது. நிகண்டுகளில் கடைசியாக உள்ளது நாமதீப நிகண்டு என்றும், இது ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதியாக விளங்குகிறது என்றும், மற்ற நிகண்டுகளைப் போன்று திவாகரத்தைப் பின்பற்றாது தனக்கென ஒரு பாகுபாட்டினைக் கொண்டுள்ளது என்றும், இதில் பன்னிராயிரம் பொருட்பெயர்கள் கூறப்பட்டுள்ளன என்றும், திசைச் சொற்கள் பற்றியும், இந்நூலினது வரலாறும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூலின் ஆசிரியர் சிவசுப்பிரமணியன் என்றும், 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை இந்நூலைப் பதிப்பித்த செய்தியும், பதிப்பித்த முறைகளும் விளக்கப்பட்டுள்ளன.

**"நிகண்டு"**

சண்முகம் பிள்ளை, மு. (1959) கலைக்களஞ்சியம், தொகுதி -6, பக். 437-441, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை.

தமிழ் நிகண்டுகளின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நிகண்டு என்னும் சொல்லுக்குக் கூட்டம், தொகுதி என்று பெயர் என்றும், உரிச்சொல், உரிச்சொல் பனுவல் என்பவை நிகண்டு என்பதற்குப் பயன்பட்டன என்றும், தொல்காப்பிய உரியியல், மரபியலில் நிகண்டு அமைப்புக் காணப்பட்டது என்றும், பின்பு திவாகரம், பிங்கலம், சூடாமணி, உரிச்சொல் நிகண்டு போன்ற நிகண்டு நூல்கள் தோன்றின என்றும், திவாகர நிகண்டில் தொகுதி என்பது பின்னாளில் வகை, வர்க்கம், படலம் எனப்பெயர் பெற்றது என்றும், சமஸ்கிருத நிகண்டுகளில் முதலாவதாகிய அமரகோசத்தை விளக்கியும் பின்பு வந்த நிகண்டுகளை நூற்றாண்டு கால அடைவில் தொகுத்தும் இக்கட்டுரை விளக்குகிறது.

**"நிகண்டுகளில் சொற்பெருக்கக் காரணிகள்"**

சற்குணம், மா. (டிசம்பர் 1991) ஆய்வுக்கோவை 22, பக். 294-298, புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை.

நிகண்டுகளில் சுட்டப்பெறும் ஒருபொருட் குறித்த பல சொற்கள் எவ்வாறு ஒரு பொருளையே சுட்டுகின்றன என்றாய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பொருள்கள் தத்தமக்குரிய சிறப்பியல்புகளை விளக்குவதற்குப் பல பெயர்களைக் கொண்டுள்ளன. பிறமொழிச் சொற்களால் புதிய பெயர்களை அமைத்தல், பிறழ உணர்ந்த பிறமொழிச் சொற்கள், செய்யுளில் திரிந்த சொல் வடிவங்கள், எழுத்துப் போலியால் திரிந்த சொற்கள், பேச்சு வழக்கை ஒட்டித் திரிந்த சொற்கள், பொருண்மை மாறி வழங்கிய சொற்கள் என்ற வகையில் ஒரு பொருள் குறித்துப் பல பெயர்ச் சொற்கள் பெருகியுள்ளன என்பது எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கப் பட்டுள்ளது.

**"நிகண்டுகளில் சொற்பெருக்கம்"**

சற்குணம், மா. (1984) ஆய்வுக்கோவை 16, தொகுதி - 2, பக்.105-110, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

இக்கட்டுரை, இருவகை நிகண்டுகளில் மொழித்துறை நிகண்டில் உள்ள சொற்பெருக்க வளர்ச்சியை விளக்குகின்றது. மொழித்துறை நிகண்டுகளின் பட்டியலாக 20 நிகண்டுகள் கொடுக்கப்பட்டுச் சொற்பெருக்கம் அடைந்த நிலைகளை வரிசைப்படி கொடுக்கப்பட்டுள்ளன. சேந்தன் திவாகர நிகண்டிலுள்ள 12 தொகுதிகளிலும் உள்ள சொற்கள் விளக்கப் பட்டுள்ளன. ஒரு சொல் பல பொருட் பெயர்த் தொகுதி சொற்பொருள் உணர்வுக்கு மிகவும் தேவையான தொகுதி என்றும், அதனால்தான் பிற்காலத்தில் இத்தொகுதியை மட்டும் கொண்டு தனி நிகண்டுகள் ஏற்பட்டன என்றும், காலப்போக்கில் சொல்லாக்க உருவாக்கங்களும், நிகண்டுகளிலுள்ள சொல்பொருள்

மாற்றங்களும் விளக்கமும் வளர்ந்து வந்துள்ள நிலையினையும் இக்கட்டுரை விளக்குகின்றது.

**"நிகண்டுகளில் தொகைப்பெயர்கள்"**

சற்குணம், மா. (1983) ஆய்வுக்கோவை 15, தொகுதி - 2, பக்.117-122, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலைநகர்.

நிகண்டுகளில் தொகைப்பெயர்கள் எவ்வாறு இடம் பெற்றிருக்கின்றன என்பதைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பொருள்களைத் தொகையாகக் கூறுவது பழைய இலக்கிய மரபு. நிகண்டுகளில் அது சொல்லுக்குப் பொருள் கூறும் நோக்கில் அமைந்துள்ளது. திவாகர நிகண்டில் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி என்பதில் 131 தொகைப் பெயர்கள் காணப்படுகின்றன என்றும், தொகைப்பெயர்களுக்குத் தனித் தொகுதி அமைத்தமை, பல்வேறு பெயர்களைத் தொகுத்துக் கூறியமை, சிற்றெண் முதல் பேரெண் வரை தந்தமை, தனி விளக்கங்கள் தந்தமை ஆகியவை அதன் சிறப்புக் கூறுகளாகும். பிங்கலந்தையிலும் தொகைப்பெயர்கள் இடம் பெற்றுள்ளன என்றும், சூடாமணி நிகண்டின் 12வது தொகுதியில் தொகைப் பெயர்கள் விளக்கப்பட்டுள்ளன என்றும், உரிச்சொல் நிகண்டில் 46 தொகைப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன என்றும், பிங்கலந்தையில் 12 சொற்களும் சூடாமணியில் 9 தொகைச் சொற்களும் அமைந்துள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

**"நிகண்டுகளின் தோற்றமும் வளர்ச்சியும்"**

சண்முகம் பிள்ளை, மு. சுந்தரமூர்த்தி, இ. (பதி.ஆ), (1990) திவாகரம், தொகுதி-1, பக். 9-64, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

நிகண்டுகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்பதில் திவாகரம் பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நிகண்டு என்னும் பெயர் வழக்கு அமைந்ததைப் பற்றியும், தொல்காப்பியமே உரியியலிலும், மரபியலிலும், விளக்குவதைக்

கொண்டு தொல்காப்பியரே வழிகாட்டி என்றும், நிகண்டு நூல் அமைப்பையும், திவாகர நிகண்டு முதல் 20ஆம் நூற்றாண்டு வரை வெளிவந்துள்ள நிகண்டுகளின் தோற்றம், அவற்றின் வளர்ச்சி ஆகியவையும் விளக்கப்படுகின்றன. திவாகரநிகண்டைப் பதிப்பித்த முறை, பன்னிரு தொகுதிகளின் பொருள் விளக்கம், பின்னிணைப்பில் நிகண்டு நூல்கள், ஆசிரியர், காலம் போன்றவை பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன. மேலும், நிகண்டுகளைப் பற்றிய முழு வரலாறும் அவற்றின் வளர்ச்சியும் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

**"நிகண்டு கற்றல்"**

குமரசாமிப் பிள்ளை, அ. (1917-18) செந்தமிழ், தொகுதி - 16, பகுதி - 10, பக். 585-587, மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு.

இக்கட்டுரை, நிகண்டுகள் என்றால் என்ன என்பதையும், அதன் அமைப்பு முறையையும் விளக்குகின்றது. சொல்லுக்குப் பொருள் கூறும் நூலே நிகண்டு ஆகும். இது வடமொழி, தென்மொழி இரண்டிலும் காணப்படுகின்றது. வடமொழிக் நிகண்டில் வரும் சொற்கள் தென்மொழி நிகண்டுகளிலும், மற்றைத் தென்மொழி நூல்களிலும் விரவி வருகின்றன என்றும், எல்லா இலக்கியங்களிலும் நிகண்டுச் சொற்கள் காணப்படுவதாகவும், தமிழ் நூல்களில் வடமொழி கலப்பு இருப்பதால் வடமொழி கலந்தே வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. நிகண்டுச் சொற்கள் பொருள், செயல், உடைமை, பால், உற்பத்தி போன்ற பலவற்றையும் கூறுவதாக இக்கட்டுரை எடுத்துக்காட்டுடன் விளக்குகிறது.

**"நிகண்டு சூடாமணி"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி - 2, பக். 396-399, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

நிகண்டு சூடாமணி என்னும் நூல் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்நிகண்டு 12

தொகுதிகளையுடையது என்றும், கவிகளின் எண்ணிக்கை 1204 என்றும், 11வது தொகுதியில் கல்லணைக்குறிச்சி வேளாளரில் யோகீசுரர் என்பவர் 60 கவிகள் சேர்த்து 310 கவிகளாக்கினார் என்றும் கூறப்பட்டுள்ளது. இராமாயணப் புகழ் திருவேங்கடம் மேற்கண்ட நிகண்டுக்குச் செய்த பாடம், பெரிய திருவடிக் கவிராயர் செய்த பாடம், அட்டவணை ஆகியவற்றை வைத்து ஒப்பிட்டுப் பார்த்துக் குற்றங்கள், பிழைகள் நீக்கித் திருத்தி எழுதி வைத்ததாக இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**"நூதன ஆங்கிலப் பேரகராதி"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (பிப்ரவரி 1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி - 2, பக். 403-408, வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

இக்கட்டுரை, அகராதி உருவாக்கும் அருமைப்பாட்டினை நூதன ஆங்கிலப் பேரகராதி வழி விளக்குகின்றது. இந்த அகராதி 1838-ல் தொடங்கி 1884-ல் வெளிவந்தது என்றும், நாள்தோறும் பல துறைகளில் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டிருக்கும் சொற்களின் பிறப்பிடமாக இவ்வகராதி திகழ்கின்றது என்றும், இவ்வகராதி உருவாக்குவதற்கு 3 இலட்சம் பவுன் செலவானது என்றும், டாக்டர் மர்ரே தொடக்கத்தில் பதிப்பாசிரியராக இருந்தார் என்றும், ஒரு சொல்லுக்கு அதற்குரிய பல பொருள்களும் தரப்பட்டுள்ளன என்ற செய்தியும், இவ்வகராதி உருவாக்குவதற்கு உதவிய உதவியாளர்களைப் பற்றியும் உதவியாசிரியர்களைப் பற்றியும் பதிப்பாசிரியர்களைப் பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த அகராதியில் 4,14,825 சொற்களும், 5,00,000 சொற்பொருள் இலக்கணங்களும் 18, 27, 304 சொற்பிரயோகங்களும் உள்ளன.

**"நெசவுத் தொழிற் சொற்கள் – மொழியியல் ஆய்வு"**

கார்த்திகேயன், ஆ. (1985) மொழியியல், தொகுதி - 9, எண்-1,2, பக். 79-96, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

தென்னாற்காடு மாவட்டக் கண்டாச்சிபுரம் என்னும் ஊரில் வழங்கப்பெறும் நெசவுத் தொழிற் சொற்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பேச்சு வழக்கில் சொற்களில் ஏற்படும் ஒலி மாற்றங்கள் எடுத்துக்காட்டு மூலம் விளக்கப் படுகின்றன. சொற்களின் அமைப்பை ஒட்டி அவை தனிச் சொற்கள், கூட்டுச் சொற்கள் எனப் பிரிக்கப்பட்டு அந்தக் கூட்டுச் சொற்களும் நான்கு வகைப்படுத்தப்படுகின்றன என்றும், இரண்டு சொற்கள் ஒரு பொருளைக் குறிப்பதும், ஒரு சொல் பல பொருளில் வருவதும் சான்றுகள் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. சொல்லாக்கம் அந்தத் தொழிலைக் குறிக்க பொருத்தமான அளவும், பேச்சுக்கு எளிமையானதாகவும் அமைந்துள்ளது என்றும், அந்தச் சொற்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுப் பெயர், வினை, என்பவற்றோ அவற்றின் பொருள்களும் தரப்பட்டுள்ளன.

**"நோக்கு நூல்கள்"**

*செயதேவன், வ. (23.4.1991) சொர்ணம்பாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு (அச்சிடப்படாதது), சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.*

நோக்கு நூல்களின் தன்மையையும், தோற்றத்தையும், வகைகளையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நோக்கு நூல்களின் தோற்றத்தையும், வகைகளையும் கூறுவதோடு அல்லாமல் நோக்கு நூல்களில் இந்நூற்றாண்டில் தோற்றம் கொண்டவற்றை மட்டும் அடிப்படையாகக்கொண்டு அதன் வகைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக வரலாற்று நோக்கில் வகைப்படுத்தி ஆசிரியர் விளக்குகிறார். சென்ற நூற்றாண்டு நூல்களோடு இப்பொழுதுள்ள நூல்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கரடுமுரடான பாதையைக் கடந்து செம்மையான பாதைக்கு வந்தது புரியும் என்றும், பின்னிணைப்பாகச் சிங்காரவேலு முதலியாரின் அபிதான சிந்தாமணி நூலின் முகவுரையும் கொடுக்கப்பட்டுள்ளது.

**"பயிற்றகராதி"**

இராசாராம், சு. (மார்ச் - சூன் 1989) தமிழ்க்கலை, தமிழ்- 7, கலை - 1,2, பக்.35-43, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பயிற்றகராதி என்றால் என்ன, அது பிற அகராதியிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை இக்கட்டுரை ஆய்கிறது. ஓர் அன்னிய மொழியின் இலக்கணத்தைக் கற்பிப்பதற்காக எளிய பயிற்று விதிகளைக் கையாளும் இலக்கணம் பயிற்று இலக்கணம் எனப்படும். பயிற்று இலக்கணத்தின் நோக்கமும் அறிவியல் இலக்கணத்தின் நோக்கமும் வேறாகும். அறிவியல் இலக்கணம் மொழியின் மொத்த அமைப்பையும், பயிற்று இலக்கணம் கற்பவரின் மொழித்தேவையைக் கருதியும் அமையும். பயிற்றகராதி, மொழியாசிரியரை மையப்படுத்தி எழுதப்படும் ஒரு பாடநூல். இக்கட்டுரையில் சோம்சுகியின் சொற்களஞ்சியக் கருத்து, பயிற்றகராதியின் ஆதாரமாக எடுத்துக் கொள்ளப் படுகிறது. பயிற்றகராதியில் பொருண்மைக் கூறுகளே அதிகம் விளக்கப் படுகின்றன. மேலும், கற்பவர்களுக்கும் கற்பிப்பவர்களுக்கும் கடினமாக இருக்கும் ஒரு குறிப்பிட்ட இலக்கணப் பகுதிக்கு மட்டுமே பயிற்றகராதி எழுதப்பட்டுள்ளது என்றும், சிக்கலான சொற்களுக்கு மட்டுமே பயிற்றகராதி எழுதப்படுகிறது என்றும், தமிழில் வினைச் சொற்களின் இறந்தகால இடைநிலையில் சிக்கல் ஏற்படுவதால் வினைச்சொல் இந்த அகராதியில் விளக்கப்படுகிறது. பயிற்றகராதி இருமொழி அகராதி வகையைச் சார்ந்தது என்றும், மற்ற அகராதியைவிடக் குறைந்த சொற்களைக் கொண்டிருந்தாலும், பொருண்மை அளவில் மிகுந்த பயன்பாட்டை உடையது என்றும் கூறப்படுகிறது.

**"பல பொருள் சொற்கள்"**

சித்திரபுத்திரன், எச். (1987) ஆய்வுக்கோவை 19, தொகுதி - 2, பக். 136-141, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

அகராதியில் பலபொருள் சொற்கள் அமைந்துள்ள விதம் பற்றியும் அவை அமையவேண்டிய நெறிமுறைகளையும்

இக்கட்டுரை விளக்குகின்றது. சொல் வளர்ச்சி என்பது சொற்பெருக்கம் மட்டுமின்றிச் சொற்பொருள் வளர்ச்சி என்றும், அதன் உயர்நிலை வளர்ச்சி சொற்கள் பெருகியுள்ள நிலையையும், இடைநிலை வளர்ச்சி பல புதுப் பொருள்களைப் பெரும் நிலையையும், சுட்டுவதாகவும் கூறப்பட்டுள்ளது. சொல்லுக்கும் பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பு ஒருசொல் பல பொருள்களைக் கொண்டிருத்தல், வேறுபட்ட வடிவுடை சொற்கள் ஒரு பொருளைக் கொண்டிருத்தல் என இருவகைப்படும். இதில் முன்னது கிடைநிலை உடையதாகத் திகழும் என்று கூறப்பட்டுள்ளது.

**"பல பொருள் சொற்கள் பொருள்தன்மையும் பெயர்ப் பன்மையும்"**

*சித்திரபுத்திரன், எச். (மார்ச் - சூன் 1989) தமிழ்க்கலை, தமிழ்-7, கலை - 1,2 பக். 88-97, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சவூர்.*

சொல் வளர்ச்சி எவ்வளவு முக்கியமானது என்பதையும், அது எவ்வகையில் நடைபெறுகிறது என்பதையும் இக்கட்டுரை விளக்குகின்றது. ஒரு சொல் தரும் பல பொருள் பெருக்கப் பொருள், மாற்றுப்பொருள் என்ற இரண்டு நிலைகளில் அமைவதை விளக்கி அவற்றிடையே உள்ள பொருள் வேறுபாட்டைப் பொருட்பன்மைச் சொற்கள், பெயர்ப்பன்மைச் சொற்கள் என்ற இரண்டு வரைபடம் மூலம் விளக்கப்பட்டுள்ளது. அகராதியில் பதிவுபெறும் கடினமான துறைகளுக்கு மொழி வரலாற்றறிவு, சொற்பிறப்பறிவு, பன்மொழிப் புலமை ஆகியன வேண்டும் என்றும், சொற்கள் பொருட்பெருக்கம் பெறுதற்கு மொழிச்சூழல் பயன்பாடு, சமூகச்சூழல், அணிநயமாற்றம், பிறமொழித் தாக்கம், பிழைச்சொற் பிறப்பாய்வு என்று ஐந்து வகையாகும் என்றும், பெயர்ப்பன்மைச் சொற்களை விளக்குமிடத்து ஒலிப்பு மற்றும் எழுத்துமுறை அடிப்படையில் மூன்று முறைகளில் இருப்பதாகக் கூறி, அவை சான்றுகளுடன் விளக்கப்படுகின்றன. பெயர்ப்பன்மைச் சொற்கள் தோன்றுவதற்கு ஒலிக்கூட்டு வளர்ச்சி, பொருள் வளர்ச்சி, கடன் வாங்குதல் போன்றவை காரணம் என்பதனைச் சான்றுகள் மூலம் விளக்கப் பட்டுள்ளன. சங்க காலம் முதல் தற்காலம் வரையுள்ள சொற்கள்

மேற்கூறிய முறையில் ஆராய்ந்தால் மேலும் பல காரணங்கள் காணக்கிடைக்கும் என்று இக்கட்டுரை விளக்குகின்றது.

**"பலபொருள் விகுதிகள்"**

சித்திரபுத்திரன், எச். (1987) தமிழ் இலக்கிய ஆய்வுக் கோவை-1, தொகுதி - 1, பக். 294-298.

இக்கட்டுரையில், சொல்லுக்கும் அது குறிக்கும் பொருளுக்கும் இடையே பல பொருள் தன்மை, பல சொல் தன்மை என்று இரண்டு வகையான தொடர்புகள் இருப்பதையும் பலபொருள் தன்மையில் தொடர்புடை பொருள்கள் அதாவது, பொருட்பன்மை சொற்களும் இருக்கின்றன என்றும், தொடர்பில்லாப் பொருள்கள் அதாவது, ஒப்புருச் சொற்களும் இருக்கின்றன என்றும், ஒப்புருத்தன்மையால் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்கள் ஒரே புறவடிவைப் பெற்றுள்ளதையும், அப்பொருள்தன்மை முழுச்சொற்களில் மட்டுமின்றி விகுதிகள், இடைச்சொற்கள் ஆகியவற்றிலும் காணப்படுகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது. பழந்தமிழில் இரண்டு முதல் ஐந்து பொருள்கள் வரை குறிக்கும் விகுதிகள் உள்ளன என்றும், இவை பலபொருள் தன்மையால் வழக்கிலிருந்தன என்றும், தமிழில் காணக்கிடைக்கும் 26 விகுதிகளும் அவற்றின் பொருள்களும் தரப்பட்டுள்ளன.

**"பாகனேரி வாள்கோட்டைக் கள்ளர்களின் உறவுமுறைப் பெயர்கள்"**

முத்தையா, ஆத. (1989) மூன்றாம் கருத்தரங்கு, தொகுதி - 2, பக். 858-863, அனைத்திந்தியத் தமிழ் இலக்கியக்கழகம், தஞ்சாவூர்.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் பாகனேரி வாள்கோட்டைக் கள்ளர்களின் உறவுப் பெயர்கள் பற்றிச் சுட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். உறவு முறை குருதி உறவு, மண உறவு என இருவகைப்படும் என்றும், உறவு முறைப் பெயர்கள் விளிப்பெயர்களாகவும் அமையும் என்றும், வயதின் மூத்த மரியாதைக்குரிய ஆண்மக்களை அப்பு என்றும், வயதில் இளையவரை அழைக்கும்போதும், மகனைத் தந்தை அன்புடன்

அழைக்கும்போதும் அப்பா என்ற சொல்லைப் பயன்படுத்துவர். மாமன், மாமி, நாத்தி, பேத்தி என்பன பிறரிடத்தில் உறவு நிலையை விளக்க மட்டுமே பயன்படும் என்றும், தந்தை மகனெனக் கருதத்தக்க உறவுடைய ஒருவரை மானெ என அழைப்பதும், இடப்பெயர்களை இணைத்துச் சொல்லும் நப்பு, நாந்தா, நண்ணி, நக்கா, நங்கச்சி என்பன என் தந்தை, என் தாய், என் அண்ணன், என் அக்காள், என் தங்கை என்று பொருள் தரும் என்றும், அண்ணன் மனைவி அண்ணமின்டி எனவும், அம்மான் மனைவி அம்மாமுன்டி எனவும், தம்பி, தங்கச்சி எனும் பெயர்கள் விளி நிலையில் அம்பி, அக்கச்சி என அழைக்கப்பெறும் என்றும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

**"பாவாணர் அகரமுதலி : சில குறிப்புகள்"**

சதாசிவம், மு. (1987) ஆய்வுக்கோவை 19, தொகுதி - 2, பக்.112-117, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

இக்கட்டுரை, பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியில் காணப்படும் குறை, நிறைகளையும், குறிப்புகளையும் விளக்குகின்றது. செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் 1985இல் முதற்பகுதி வெளிவந்ததாகவும், சென்னைப் பல்கலைக் கழக அகராதியில் இடம்பெறாத சொற்களைச் சேர்த்தும் தமிழ் வடமொழி கலந்த 132 கூட்டுச் சொற்களும் படங்களும் தரப்பட்டுள்ளன. குறைகளாகச் சில நூல்களிலிருந்து மட்டுமே சொற்களைச் சேர்த்திருப்பதையும், பேச்சு வழக்குச் சொற்கள் இடம்பெறாமலிருப்பதையும் கூறலாம். வடமொழிச் சொற்களுக்குத் தமிழ் மூலங்காட்டி இருப்பதும் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் இடம்பெறாத ஊர், ஆட்பெயர்கள் சேர்த்துள்ளமையும், பிராமணர் என்ற வடசொல்லைப் பல இடங்களில் காட்டியுள்ளமையும் குறிப்புகளாகக் கூறப்பட்டுள்ளன.

**"பாவாணர் நோக்கில் சொற்பிறப்பியல் அகரமுதலி"**

மதிவாணன், இரா. (மார்ச் - சூன் 1989) தமிழ்க்கலை, தமிழ் 7, கலை-1,2, பக். 21-28, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் அமைப்பினை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இது ஆங்கிலத்தில் மட்டும் ஐந்து சொற்பிறப்பியல் அகரமுதலிகள் வெளிவந்த செய்தியையும், ஒரு சொல்லுக்குரிய இனச்சொல் தமிழிலும் பிற மொழிகளிலும் கண்டு ஆராய பாவாணர் எடுத்துக்கொண்ட முயற்சியை விளக்குகிறது. வேர்ச்சொற்களும், அதற்குரிய சான்றுகளும், வேர் முதல் என்பது பற்றிய விளக்கமும், வேர்ச்சொல் விரிவையும் இக்கட்டுரை விளக்குகின்றது. கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சொல்வளர் நிலைகளை ஆராய்வதே பாவாணர் வகுத்த நெறி என்றும், அ,இ,உ என்ற சுட்டிலிருந்தே மொழி தோன்றியது என்பதே பாவாணர் கொள்கை என்பதும், மொழியியல் கருத்தில் பாவாணர் வேறுபடுவதையும், வேர்ச்சொல்லாய்வின் நோக்கத்தையும் பயனையும் மொழிந்துள்ளது.

**"புதிய கலைச்சொற்கள்"**

சீதாராமன், பா. (1984) ஆய்வுக்கோவை 16, தொகுதி - 2, பக்.121-125, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

இக்கட்டுரை, புதிய கலைச்சொற்கள் உருவாக்குதற்குரிய காரணத்தையும், கலைச்சொற்களின் தன்மையையும் விளக்குகின்றது. சமுதாய வளர்ச்சிக்கு ஏற்பப் புதிய கருத்துக்களும், கோட்பாடுகளும், மொழிவளர்ச்சியும் ஏற்படுகின்றன என்றும், இதனால் புதிய கலைச்சொற்கள் தோன்றுகின்றன என்றும், கலைக்குரிய சொல் கலைச்சொல் என்றும், அதன் தனித் தன்மைகளாகக் கலைப்பொருளை உணர்த்துவதும், கலைச்சொல் வட்டாரப் பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்டு அமைவது என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், தற்போது வழக்கில்

உள்ள கலைச்சொற்கள் சிலவற்றைக் கூறி அறிவியல் வளர்ச்சியின் காரணமாக அவை அழியும் நிலையிலும், ஏட்டில் இடம் பெறாமலும் இருந்துவருகின்றன என்றும் விளக்கப்பட்டுள்ளது.

**"புதிய தமிழ் அகராதியின் விவரம்"**

*சாண்ட்லர், ஜே.எஸ். (1913) விவேகபோதினி 5:10, பக்.424-425, ஜனரல் ஸப்ளையர்ஸ் கம்பெனி பதிப்பு.*

இக்கட்டுரை, சென்னைப் பல்கலைக்கழக அகராதி தயாரிப்புக்குழுத் தலைவர் சாண்ட்லர், இவ்வகராதி உருவாக்கத்தின் நோக்கம், அதன் தேவை ஆகியவைப் பற்றிக் குறிப்பிடும் ஓர் அறிவிப்பாகும். இந்த அகராதி தயாரிப்பதன் நோக்கங்களாக ஐந்தினைக் குறிப்பிட்டும், அவற்றை நிறைவேற்ற தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தமிழ் அறிஞர்கள், அமைப்புகள் போன்றவை இப்பணிக்குத் தேவையான பல்வேறு துறைகள் தொடர்பான சொற்கள், ஆய்தவகை, பாத்திரங்கள், மத, சாதி, குல பழக்கவழக்கச் சொற்கள், விரதம், சாத்திர வழக்கங்கள், தற்கால பேச்சு வழக்குச் சொற்கள் போன்றவற்றை அனுப்பவேண்டும என்றும், வின்சுலோ, ராட்லர் முதலியவர்கள் செய்த பணியைப் போல இப்பணியும் சிறக்க வேண்டி அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"பெண்ணியக் கலைச்சொல்லாக்க முறைகள்"**

*கமலி, தி. (டிசம்பர் 1992) ஆய்வுக்கோவை 23, தொகுதி - 1, பக் 179-183. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.*

பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேட்டுத் தயாரிப்புப் பணி பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பொதுநிலை அகராதிப் பணியினின்றும் மாறியதாக, பெண்ணியக் கலைச்சொல் பணி அமையும் என்றும், பெண்ணியவாதிகள் உருவாக்கிய புதுச் சொல்லாக்கம் அகராதிகளில் உள்ளதா என ஆய்தல் வேண்டும் என்றும், பால் பேதத்தை வலிந்து திணிப்பதாய்ச் சொல்லாக்கம் அமைதல் கூடாது

என்றும், சொற்களை இணைத்துக் கூட்டுச்சொல் உருவாக்கல், வழக்கிலிருக்கும் சொற்களின் அடிப்படையில் புதுச் சொற்களை உருவாக்கல் என்பன சில என்றும் கூறப்பட்டுள்ளது. திறனாய்வுப் போக்கில் வேறொரு புதுப் பரிணாமத்தைச் சுட்டுவதாய் பெண்ணியம் உருப்பெற்றுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"பெரியபுராணச் சிறப்புப் பெயரகராதியில் ஒரு பதிவு"**

*வீராசாமி, தா.வே. (1989) தமிழ்க்கலை, தமிழ் - 7, கலை - 1,2. பக். 108-114, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

பெரியபுராணச் சிறப்புப் பெயரகராதியில் கங்கை என்ற பதிவின் பொருட்செறிவு பற்றிய செய்தியை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கங்கை என்ற சொல் சென்னைப் பேரகராதியில் மூன்று பொருள்களிலும் நிகண்டுகளில் 14 வகையான பொருள்களிலும் தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியில் ஒரு பொருளிலும் பதிவாகியுள்ளது என்றும், கங்கைப் பற்றித் தமிழில் வழங்கும் 14 சொற்களில் பெரியபுராண ஆசிரியர் இரண்டை மட்டும் பயன்படுத்தியிருப்பதாகவும், தமிழகத்தில் சங்க காலம்தொட்டு வழங்கும் கங்கை என்ற பெயருக்கே ஆசிரியர் முதலிடம் கொடுப்பதை இக்கட்டுரை விளக்குகின்றது. பெரியபுராணத்தில் 4281 பாக்களில் உள்ள கங்கை பற்றிய செய்திகளை ஆய்வுக் கண்ணோட்டத்தில் கூறி, இவ்வாய்வுவழி சிறப்புப் பெயரகராதிப் பதிவுகளை எவ்வாறு அமைத்தல் வேண்டும் என்பதை மிக விரிவாக இக்கட்டுரை விளக்குகின்றது.

**"பேச்சுத் தமிழ் இலங்கையிலும் தமிழகத்திலும்"**

*ஏசுதாசன், சி. (மார்ச் - மே 1979) மொழியியல், தொகுதி - 2, எண் - 4, பக். 65-88, அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.*

இலங்கைத் தமிழில் காணப்படும் இலக்கணக் கூறுகளும், அதன் தனித் தன்மைகளும் தமிழகத்தின் தென்மாவட்டத்தில் எங்ஙனம் பரவிக் காணப்படுகின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இலங்கைத் தமிழில் காணப்படும்

பழந்தமிழ்க் கூறுகள் எவை என்பது எ.காட்டு மூலம் விளக்கப்படுகின்றன. இலங்கைத் தமிழின் தனித்தன்மை, ஒலியன், உருபன் மாறுபாடுகள், சொல் வேறுபாடுகள் கொண்டு ஆராயப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழுக்கும் பேச்சுப் பொதுத் தமிழுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளும் உருபன், ஒலியன் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. அதன்பின் இலங்கைத் தமிழுக்கும் குமாரி மாவட்டத் தமிழுக்கும் உள்ள ஒற்றுமைகள் மொழியப் பட்டுள்ளன. குமரி மாவட்டத்தைவிட விளவங்கோடு தமிழுக்கும் இலங்கைத் தமிழுக்கும்தான் ஏராளமான ஒற்றுமைகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளன. இறுதியாக இலங்கைத் தமிழ் தமிழகத்திலும், அதிகம் தென்மாவட்டங்களில் குறிப்பாக விளவங்கோடு வட்டத்தில் ஏராளம் காணப்படுவதற்கான காரணகாரியங்கள் வரலாற்று அடிப்படையில் எடுத்துக் காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

**"பேச்சுத் தமிழில் ஆங்கிலச் சொற்களின் ஆதிக்கம்"**

சிவக்குமார், மு. (சனவரி-சூன் 1986) மொழியியல், தொகுதி-9, எண் -3,4. பக். 205-208, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர்.

தமிழில் ஆங்கிலச் சொற்கள் எவ்வாறு பேச்சு வழக்கில் கையாளப்படுகின்றன என்பதைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கற்றவர்களும் கல்லாதவர்களும் பிறரிடம் பேசும்போது ஆங்கிலச் சொற்களைத் திணிப்பதாகவும் அதிலும் கற்றவர்களே பேச்சுத் தமிழில் ஆங்கிலச் சொற்களை அதிகம் கலப்பதாகவும், கல்லாதவர்கள் பயன்படுத்துவதற்கு அவர்கள் வசிக்கும் இடம் மற்றும் சூழ்நிலையே காரணம் என்றும் கூறப்படுகின்றது. கற்றவர்கள் தமிழைவிட ஆங்கிலத்தை அதிகம் பயன்படுத்துவது ஆங்கிலம் எளிமையாக, இயல்பாக அமைந்துள்ளது என்றும், செந்தமிழை வானொலி, இலக்கிய மன்றம், கருத்தரங்கு, செய்தித்தாள் போன்றவற்றில்தான் காணமுடிகின்றது என்றும் கூறியுள்ளது.

**"பேரகராதியும் திட்டமிடுதலும்"**

இலட்சுமணசாமி, கொ. (மார்ச் 1989) அகராதிக் கலைக் கருத்தரங்கு, பெருஞ்சொல் அகராதித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

அகராதி உருவாக்கத்திற்கு வேண்டிய முன்னெச்சரிக்கைக் குறிப்புகள், நடவடிக்கைகள் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அகராதித் தொகுப்பு முறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பேரகராதியில் இடம்பெறும் சொற்கள் இலக்கியம், கலை, சமூக, நாட்டுப்புறப் பண்பாடுகள் பற்றியதாகவும், அரசன் முதல் ஆண்டி வரையுள்ள அனைவரும் பயன் படுத்துவதாயும் அமைதல் வேண்டும். சொற்களைத் திரட்டும் போதே அகராதி வரலாற்று முறையில் அமைக்க வேண்டுமா? வேர்ச்சொல் அடிப்படையில் அமைக்க வேண்டுமா? என முடிவு செய்தல் வேண்டும் என்றும், பணியாளர்களின் எண்ணிக்கை, பணி செய்வதற்கேற்ற இடம், தேவைப்படும் பொருள்கள் ஆகியவற்றையும் திட்டமிட்டுத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"பொதிகை நிகண்டு"**

வையாபுரிப் பிள்ளை, எஸ். (பிப்ரவரி 1989) தமிழின் மறுமலர்ச்சி, தொகுதி - 2, பக். 394-395, வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றம், சென்னை.

இக்கட்டுரை, பொதிகை நிகண்டு பற்றிய செய்திகளைக் கூறுகின்றது. இதன் ஆசிரியர் சாமிநாத கவிராயர் என்றும், இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த கல்லிடை நகரில் வாழ்ந்தவர் என்றும், ஐந்து இலக்கண நூலாகிய சாமிநாதத்தை இயற்றியவர் என்றும், இவர் நாமதீப நிகண்டு ஆசிரியரின் சமகாலத்தவர் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிகண்டின் கடிதப் பிரதி ஒன்றும், ஏட்டுப் பிரதி இரண்டும் நமச்சிவாய முதலியாரவர்களால் பேராசிரியருக்குக் கொடுக்கப்பட்டது

என்றும், இந்நிகண்டு சூடாமணி நிகண்டைப் பின்பற்றியே எழுதப்பெற்றுள்ளது என்றும், சூடாமணி நிகண்டைப் பின்பற்றிய தொகுதியை முதற் தொகுதியாகவும், நூற்பாவினால் இயன்ற ஒரு சொல் பல பெயர்த்தொகுதியை இரண்டாம் தொகுதியாகவும் பேராசிரியர் பதிப்பித்துள்ள செய்தியும், பேராசிரியர் இந்த நிகண்டினை எங்ஙனம் இடர்பட்டுப் பதிப்பித்தார் என்ற செய்திகளும் தரப்பட்டுள்ளன.

**"பொருண்மையியல் நோக்கில் தொல்காப்பிய மரபியல்"**

*செல்லமுத்து, த. (1987) பக். 183, அனைத்திந்தியத் தமிழ்மொழியியல் கழக இரண்டாமாண்டு கருத்தரங்கு மலர், அண்ணாமலை நகர்.*

தொல்காப்பியரின் மரபியலைப் பொருண்மையியல் நோக்கில் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மரபியலை ஒருபொருள் பலசொல், மூவகைப் பெயர்கள், பகுதிப்பொருள் பகுப்பு என்று மூவகைப்படுத்தியும், இந்த மூவகைப் பெயர்களில் இளமை, ஆண்பால், பெண்பால், ஒருசொல் பலபொருள் பகிர்வு, இளமைப் பெயர்களில் பகிர்வு என்று குறுந்தலைப்பிலும், பகுதிப்பெயர்கள் ஆய்வு, பொருள் உட்படுதல் என்ற தலைப்புக்களில் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது பொருண்மையியல் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது ஒருவகை மொழியியல் நோக்கமாகும்.

**"பொருளடக்கத் தொடர்புச் சொற்கள்"**

*கருணாகரன், கி. சண்முகம், செ.வை. (1988) மொழியியல், தொகுதி-11, எண் - 1,2, பக்.109, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர்.*

இக்கட்டுரை, பொருள் அடக்கத் தொடர்புச் சொற்களைப் பற்றி விளக்குகின்றது. சொற்கள் பொருள் அடிப்படையில் அடக்கு சொல்லாகவும், அடங்கு சொல்லாகவும் நிலைபெறுகின்றன என்றும், ஒரே அடக்குச் சொல்லின் கீழ்வரும் இரண்டு அல்லது

இரண்டிற்கு மேற்பட்ட அடங்கு சொற்களை நெருங்கிய அடங்கு சொற்கள் என்றும், அடங்கு மற்றும் அடக்குச் சொற்களை நிறுத்தி ஒருவகையான பொருளடக்கு அமைப்பை உருவாக்க முடியும் என்றும், அடக்குச் சொற்கள் ஒலி அமைப்பில் அடங்கு சொற்களை ஒத்தோ வேறுபட்டோ இருக்கலாம் என்றும், அதிகமான அடக்குச் சொற்கள் இல்லாத மொழியைப் பழங்குடி மொழி என்று கூறுவர் என்றும், ஒரே அடக்குச் சொல்லின் கீழ்வரும் அடங்கு சொற்கள் ஒரே இலக்கணப் பெயரால் அழைக்கப்படும் என்றும், அடங்கு அடக்குச் சொற்களிடையே உள்ள தொடர்பு பொருள்கள் அடக்க நிலைத்தொடர்பு என்றும், பொருளடக்கத்தொடர்பில் 3 வகையான அடங்கு அடக்குத் தொடர்புகளைக் காணலாம் என்றும், பொருளடக்கத் தொடர்பில் பங்கெடுக்கும் சொற்களைப் பலவகைப்படுத்தலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"போளூர் வட்டார வழக்குச் சொற்கள்"**

*சகாதேவன், அ. (1987) ஆய்வுக்கோவை 19, தொகுதி -2, பக்.90-95, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.*

இக்கட்டுரை, வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த போளூர் வட்டார மக்களால் பேசப்படும் சொற்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இதில் அகராதியில் இடம்பெறாத சொற்கள் சிலவும் காட்டப் பட்டுள்ளன. பொருளை விளக்கும் பொருட்டுக் கூட்டுச்சொற்கள் சிலவும், சொற்றொடர்கள் சிலவும் தரப்பட்டுள்ளன. இலக்கிய வடிவம், பேச்சு வழக்கு என்று இரண்டாகப் பிரித்து,

| இலக்கிய வடிவம் | பேச்சு வழக்கு |
|---|---|
| இறக்கை | சப்பட்டை |
| சளி ஒழுகுகிறது | ஊளை ஒயுவுது |
| விதையடித்தல் | கால் பிடித்தல் |

போன்று இன்னும் பல சொற்கள் இக்கட்டுரையில் விளக்கப் பட்டுள்ளன.

**"மக்கட்பெயர்த் திரிவுகளும் மூலவழவங்களும்"**

முத்தையா, எம். (டிசம்பர் 1991) ஆய்வுக்கோவை 22, புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை.

மக்கட்பெயர்கள் எவ்வந்நிலைகளில் திரிகின்றன என ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒருவரிடமிருந்து மற்றொருவரை இனங்கண்டு கொள்ள அமைந்ததே பெயரிடல் முறை என்றும், மொழிக்கலப்பு நிலை, உட்பிணைப்பு நிலை, ஒலிப்பு நிலை, இகர எகர மாற்று நிலை போன்றவற்றால் மக்கட்பெயர்த் திரிவுகள் ஏற்படுகின்றன என்பது எடுத்துக்காட்டு மூலம் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

**"மங்கலம் – வடசொல்லா?"**

பரமசிவம், த.கோ. (1987) ஆய்வுக்கோவை 19, தொகுதி -2, பக். 208-212, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

இக்கட்டுரை, மங்கலம் என்ற சொல் தமிழ்ச்சொல்லே என்று நிறுவ முயலுவதை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. மங்கலம் என்பது மங்கல என்னும் வடமொழியை அடியாகக் கொண்டு சுபம், ஆக்கம், பொலிவு போன்ற பல பொருள்களில் வருவதாகத் தமிழ்ப் பேரகராதிக் கூறுகின்றது. இச்சொல் தொல்காப்பியர் காலம் முதல் வழக்கில் இருப்பதாகவும் மங்கல மகளிர், மங்கல வாழ்த்து, நன்மை பயப்பது, தீமையைத் தடுப்பது என்ற பொருள்களில் வழங்குவதாகவும், நேரெதிரானப் பொருளை உடைய சொல்லில் தொடங்கி அதன் பொருளை அடியோடு மாற்றும் வகையில் எதிர்மறை வியங்கோள் விகுதியைக் கூட்டிச் சொல்லையும் பொருளையும் படைப்பதாகிய தமிழ் மரபுப்படி, மங்கலம் என்பதும் எதிர்மறை இணைந்த சொல்லாகத்தான் இருக்கவேண்டும் என்றும், அமைப்பு, நோக்கம், சூழல் இவற்றால் மங்கலம் தமிழ்ச் சொல்லே என்றும் சான்றுகளுடன் நிருபிக்கப்படுகின்றன.

**"மரபிலக்கணங்களில் தொகைகள்"**

சோமசுந்தரம், மா. (1987) அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழக இரண்டாம் ஆண்டு கருத்தரங்க மலர்.

தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரண்டு மரபிலக்கணங்களில் வந்துள்ள தொகைகள் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இரண்டு சொற்களின் இணைப்பே தொகை என்றும், முறையே அவற்றின் இடையே உருபுகள் தொக்கி நிற்கும் என்றும் கூறப்பட்டுள்ளன. மேலும் வேற்றுமைத் தொகை, உவமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை ஆகிய தொகைகளின் விளக்கங்கள் தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றின் வழி எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

**"மருந்தியல் கலைச்சொற்கள்"**

செல்வகுமார், சி. (1989) வளர்தமிழில் அறிவியல், 2வது கருத்தரங்கு, பக். 548-553, அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழகம், தஞ்சாவூர்.

கலைச்சொல் என்றால் என்ன? அதை ஆக்கும் முறை, அடிப்படைக் கூறுகள் இவற்றைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கலைச்சொல் என்பது பல்வேறு துறைகளிலும் குறிப்பிட்ட ஒரு பொருளுக்குப் பயன்படுத்தப்படும் சொல்லாட்சியாகும் என்றும், கலைச்சொல்லாக்கத்தை ஒலிபெயர்ப்பு, சொல்லாக்கம் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம் என்றும், மொழி பெயர்ப்பு முறையில் கலைச் சொல்லாக்கத்தை உள்நிலை ஆக்கம், கடன் வாங்குதல், கடன் விரிவாக்குதல், கடன் மொழிபெயர்ப்பு போன்ற நான்கு நிலைகளில் செய்யலாம் என்றும், மருத்துவத் துறையில் கலைச் சொல்லுக்குரிய அடிப்படைக் கூறுகளாக நான்கும், கலைச் சொல்லினால் ஏற்படும் பயன்களும் விளக்கப்படுகின்றன.

**“மானுடவியல் மொழிபெயர்ப்புச் சொற்களை அகரவரிசைப் படுத்தும்போது நேரும் சிக்கல்கள்”**

*அறவாணன், க.ப. (1989) தமிழ்க்கலை, தமிழ்-7, கலை-1, 2. பக்.140-145, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

மானுடவியல் மொழிபெயர்ப்புச் சொற்களை அகரவரிசைப்படுத்தும்போது நேரும் சிக்கல்கள் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நெசுதூர்க்கின் கலைச்சொல் வரிசை, சிதம்பரநாதச் செட்டியாரின் சென்னைப் பல்கலைக்கழக அகராதி, சக்திவேலுவின் மானுடவியல் கலைச்சொல் அகராதி ஆகிய மூன்றினையும் அடிப்படையாகக் கொண்டு சிக்கல்கள் ஆராயப்பட்டுள்ளன. மொழியாக்கம் செய்வதில் மூவருக்கும் ஒருமைப்பாடு இல்லாததால் சொற்களைத் தமிழில் வரிசைப் படுத்துவதில் முரண்களும், குழப்பங்களும் ஏற்பட்டுள்ளமையைச் சான்றுகள் மூலம் விளக்கப்படுகின்றன. ஆங்கில மூலச்சொற்கள் கலைச்சொல்லுக்குரிய சொற்செட்டுடன் சுருக்கமாக அமைய, தமிழ்ச் சொற்களோ பெரும்பாலும் தனிக் கலைச்சொலலாக அமையாமல் தொடராகவும், நெடுந்தொடராகவும் அமையும் என்றும், ஆங்கிலத்தைப் பெரும்பாலும் சார்ந்திருக்கும் தமிழ் மொழியில் தமிழ்ச் சொற்களை முன்னிறுத்தி அகர வரிசைப் படுத்தும்போது சிக்கல் நேர்கிறது என்றும், ஒரு பொருள் பற்றிய அகரமுதலி உருவாக்கப்படும்போது அப்பொருளில் உட்பிரிவுகளை வகைப்படுத்தி அமைக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**“மீனவர் நாட்டுப்புறப் பாடல்களில் காணும் கலைச்சொற்கள்”**

*ஸ்டீபன் சேம், நே. (1984) நாட்டுப்புறவியல், தொகுதி-2, எண்-1,2. பக்.81-93, இந்தியத் தமிழ்நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலை நகர்.*

கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களிடையே வழங்கிவரும் சொற்கள் திரட்டப்பெற்று, அவை எந்த அளவு நம் அகராதிகளில் இடம் பெற்றுள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின்

நோக்கமாகும். இவ்வாய்வுக்கு மொத்தம் 70 சொற்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சொற்களைத் தொழிற்சொற்கள் தொழிற்கருவிச் சொற்கள், பிற சொற்கள் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பெற்று அவை அகராதியில் முழுச்சொல்லும் இடம் பெற்றுப் பொருள் மாறுபட்டவை, அகராதியில் பகுதிச்சொல் இடம்பெற்றுப் பொருள் மாறுபட்டவை, அகராதியில் இடம்பெறாத சொற்கள் என்று மூன்று பிரிவுகளாக அட்டவணைப் படுத்தப்பட்டுத் தரப்பட்டுள்ளன. வின்சுலோ, தமிழ் லெக்சிகன், தமிழ்மொழி அகராதி ஆகிய மூன்றும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றுள்ளன.

**"முதல் நிகண்டின் பதிப்பு வரலாறு"**

சற்குணம், மா. (1985) ஆய்வுக்கோவை 17, தொகுதி-2, பக்.111-116, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

சேந்தன் திவாகர நிகண்டின் பதிப்பு வரலாற்றைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். திவாகர நிகண்டை, தாண்டவராய முதலியார் முதலில் பிழையின்றி எட்டுத் தொகுதிகளைப் பதிப்பித்து வெளியிட்டார் என்றும், பின்பு 1839-ல் நயநப்ப முதலியார் மேலும் இரு தொகுதியினைச் சேர்த்து 10 தொகுதிகளை வெளியிட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது. 1839-ல் சேந்தன் திவாகரம் என்ற 245 பக்கங்களுடன் வெளிவந்த பதிப்பில் ஒரு பக்கம் மூலமும் ஒரு பக்கம் பொருளும் தரப்பட்டுள்ளன. 1840-ல் முன்னைய 10 தொகுதிகளுடன் 2 தொகுதியைச் சேர்த்து சென்னைக் கல்விச் சங்கமும், அதன் பின் தொடர்ந்து பல பதிப்புகளும் வெளிவரலாயின. இவ்வாறு 12 பதிப்புகள் வெளிவந்தன என்றும், முதல் தொகுதி மட்டும் 12 முறை பதிப்பிக்கப்பட்டது என்றும், ஆக மொத்தம் 24 பதிப்புகளை இந்நிகண்டு கண்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**"மொழிப் பேரறிஞர் பாவாணரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியும்"**

மகாதேவன், கொண்டல்,சு. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு-49 (சனவரி 1975), பக்.212.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியலின் தேவையையும் அதன் அவசியத்தையும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன. தமிழ்ச் சொற்களின் வேர்ச் சொற்களைத் தொகுக்க பன்மொழி அறிவு தேவைப்படுவதால் பாவாணரே இதற்குச் சிறந்தவர் என்றும், பிறமொழிகளிலும், தமிழின் வேர்கள் காணப்படுவதாகவும், அவற்றை வேறுபடுத்திக் காட்ட வேண்டியதும் கூறப்பட்டுள்ளது. இலக்கியத்தில் காணமுடியாத பல சொற்கள் பேச்சு வழக்கில் காணப்படுவதாகவும், அவையும் இந்த அகரமுதலியில் சேர்க்கப் பட்டுள்ளதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**"மொழியியலும் இடப்பெயர் ஆய்வும்"**

ஆரோக்கியநாதன், எஸ். (சனவரி-சூன் 1986) மொழியியல், தொகுதி-9, எண்-3, 4. பக்.117-129, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர்.

இடப்பெயர்களில் காணப்படும் மொழியியல் கூறுகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பெயராய்வு தனி மனிதப் பெயராய்வு, இடப்பெயராய்வு என இரண்டு வகைப்படும் என்றும், இடப்பெயராய்வினில் ஊர்ப்பெயரும் அடங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. தனிமனிதப் பெயர்கள் ஆண், பெண் பால் வேறுபாடுகளை உள்ளடக்குவதோடு, பல செய்திகளைக் கொண்டு ஒரு தலைமுறையின் வரலாற்றுக் கருவூலமாகவே விளங்குகின்றன என்றும், தனிமனிதப் பெயர் அச்சமூகத்தை ஒட்டிக் எவ்வெவ்வாறு மாறி அமைகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது. இடப்பெயர்கள் எவ்வாறு வரலாற்றைத் தாங்கி நிற்கின்றன என்றும், அந்தப் பெயர்கள் மொழி முதல், இடை, கடைகளில் எவ்வாறு மாற்றம் அடைகின்றன என்றும் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கப் பட்டுள்ளன. இடப்பெயர்கள் பேச்சு வழக்கினை ஒட்டி கூட்டுச்

சொற்களாகவே வழங்கப்படுகின்றன என்றும், பின் மொழியமைப்பிலும் சொல்லமைப்பிலும் எவ்வாறு மாற்றம் அடைகின்றன என்றும் விளக்கப்படுகின்றது.

**"மொழியின் தன்மையும் தோற்றமும்"**

*சித்திரபுத்திரன், எச். (டிசம்பர் 1991) ஆய்வுக்கோவை 22, பக்.317-322, புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை.*

மொழியின் வளர்ச்சி, தோற்றம் பற்றிய கொள்கைகளைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஒரு பொருளைக் குறிக்கும் சொல் மொழிக்கு மொழி மாறுபட்டாலும் அது சுட்டும் உலகப்பொருளின் கருத்து மாறுவதில்லை என்பதையும், பேசுவோரின் திறனைப் பொறுத்து வளரும் மொழி, கொள்கையடிப் படையில் சொல் - பொருள் வளர்ச்சியையும், இலக்கண வாக்கிய அமைப்பையும் கொண்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. மொழி இறைவனால் ஆக்கப்பெற்றது என்றும், மனிதன் தன் சுயநினைவுடன் ஆக்கியுள்ளான் என்றும், தோற்றம் பற்றி இரு கொள்கைகள் உள்ளன என்றும், சைகையின் மூலம் சுட்டப்பட்ட பொருள், பொருள்களின் சிறப்புத் தன்மை அல்லது அவை எழுப்பும் ஒலிகளுக்கு ஏற்ப அமையும் என்றும், இசை, உணர்ச்சி/மெய்ப்பாடு ஆகியனவும் மொழியாக்கத்தில் பெரும்பங்கு வகிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**"வடசொல் – தமிழ் அகராதி"**

*நீலாம்பிகை அம்மையார், நாகை., (1927-28) செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு-5.*

இக்கட்டுரை, வடசொல்-தமிழ் அகராதியின் தேவையையும் அதன் அமைப்பையும் விளக்குகின்றது. அன்னிய நாட்டில் தமிழர் குடியேறியதாலும், தமிழ்நாட்டில் அன்னியர் வரவாலும் வடசொற்கள் தமிழில் ஏராளம் கலக்க ஆரம்பித்தன. தமிழ், வடமொழி வேறுபாடு அறியாத வகையில் சொற்கள் காணப்பட்டதின் காரணமாக வடசொல்-தமிழ் அகராதி தேவைப்பட்டது என்றும், இவ்வகராதியில் வடசொற்கள்

அகரவரிசையிலும், அதற்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் அடுத்தும் கொடுக்கப்பட்டுள்ளன.

**"வண்ணனை நோக்கில் அமைந்த அகராதியில் இலக்கணச் செய்திகள்"**

கோதண்டராமன், பொன். (6.3.89) அகராதிக்கலைக் கருத்தரங்கு, பெருஞ்சொல் அகராதித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இக்கட்டுரை, பொதுவாக அகராதியில் இலக்கணச் செய்திகளைத் தரவேண்டுமா என்பதைப் பற்றியும், எப்படிப்பட்ட இலக்கணச் செய்திகளைத் தரவேண்டும் என்பதையும் விளக்குகின்றது. மேலும், வினை வகைப்பாட்டை எவ்வாறு சுருக்கமாகவும், எளிமையாகவும் அகராதியில் கைகொள்ள வேண்டும், அதன் இன்றியமையாமை, தெரி, புரி, போ, வா முதலான வினைகளைத் தக்கவாறு அகராதியில் குறிப்பிட வேண்டியமை, ஒரே சொல்லின் பல்வேறு இலக்கண நிலைகளைக் குறிக்க வேண்டியதன் தேவை, பல்வகை வழக்கு நிலைகள் போன்ற இலக்கணச் செய்திகள் தேவைக்கேற்ப சொல்லின் பயன்பாட்டு நோக்கில் அகராதியில் இடம்பெறச் வேண்டும் என்ற கருத்தும் இக்கட்டுரை ஆசிரியரால் வலியுறுத்தப்படுகிறது.

**"வயது வந்தோர்க் கல்விக்கான அகராதி தயாரித்தல்"**

கருணாகரன், கி. & செயா, வ. & பாக்கியலட்சுமி, இரா. (மார்ச், 1989) அகராதிக்கலை கருத்தரங்கு, பெருஞ்சொல் அகராதித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வயது வந்தோர்க் கல்வியில் அகராதியின் முக்கியத்துவம் பற்றியும் அக்கல்விக்கான அகராதி தயாரித்தல் பற்றியும் சுட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அகராதி என்ற சொல் வழக்காறு 16ஆம் நூற்றாண்டில் உருவானது என்றும், பலமொழி, கிளைமொழி, ஒருமொழி,

இருமொழி, வேர்ச்சொல், பேரகராதி எனப் பலவகையான அகராதிகள் தோன்றியுள்ளன என்றும், அடிப்படைக் கல்வியறிவு பெற்றவுடன் தொடர் கல்வியறிவு பெற அன்றாட வழக்கு, தொழிற் சொற்கள் தேவை என்றும், மக்களுக்குத் தேவையான கருத்துக்களைத் தரும் சொற்களும், அவ்வவ் வட்டாரச் சொற்களும், அரசு வெளியிடும் அறிக்கைகளும், செய்தி மடல்களும், துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றின் செய்திகளும் இவ்வகராதியில் இடம்பெற வேண்டும் என்றும், அகராதியின் சொல்விளக்கக் கூறு தலைச்சொல், ஒலிப்பு முறை, இலக்கணப் பிரிவு எனவும், பொருள் விளக்கக் கூறு மேற்கோள், விளக்கப்படம் எனவும் அமைய வேண்டும் என்றும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**"வரம்பு கட்டுதலும் வருணித்தலும்"**

*குமரசாமி ராஜா, ந. (ஏப்ரல் 1984) அகராதிக்கலை கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

ஒரு மொழிக்கு எப்படி வரம்பு கட்டப்படுகிறது. அது எப்படி வருணிக்கப்படுகிறது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ் மொழியில் இலக்கிய மொழி, பேச்சு மொழி என்ற இரண்டு மொழிகளில் பேச்சு மொழியானது ஆராய்ச்சியாளரால் வரம்பு கட்டப்பட்டது என்றும், செம்மைப் படுத்தப்படுகிறது என்றும், இலக்கணமும் மொழிக்கு வரம்பு கட்டுகிறது என்றும் கூறப்பட்டுள்ளது. மொழியியல் ஆராய்ச்சியான பொருள் விளக்கம் இரண்டில் எது வரம்பு கட்டப்பட்டது என்பது எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப் படுகிறது. மொழியியலின் பொருளின் புனைவு சீர்மையாக்கம், பொதுமையாக்கம், முழுமையாக்கம் என்ற மூன்றின் மூலம் பொருளைச் செம்மையாக்கிக் கொள்வதே வரம்பு கட்டியது ஆகும் என்றும், அகராதி சொல், பொருள் இரண்டிற்கும் இடையே உள்ள உறவை அதாவது வரம்பு கட்டப்பட்ட மொழியை வருணிக்கிறது என்றும், வட்டார மொழி அகராதி வரம்பு கட்டப்பட்டது ஆகாது என்றும், புனைந்துரைத்தலே வரம்பு கட்டுதல் ஆகும் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

**"வரலாற்று அகராதியும் இக்கால அகராதியும்: வேறுபடும் இரு இடங்கள்"**

சுப்பிரமணியன், பா.ரா. (6.3.89) அகராதிக்கலைக் கருத்தரங்கு, பெருஞ்சொல் அகராதித் துறை. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

வரலாற்று அகராதியும், தற்கால அகராதியும் வேறுபடும் இரு இடங்களைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அன்றைய மொழிக்கும் இன்றைய மொழிக்கும் உள்ள வேறுபாடு காரணமாகப் பழைய அகராதியின் விளக்கங்கள் புதிய அகராதியில் மாற்ற வேண்டியிருக்கும். அவ்வாறு பொருந்தாமல் போவதற்குப் பண்பாட்டில் ஏற்படும் மாற்றம், ஒரு பொருள் சிறு வட்டத்தின் புழக்கத்திலிருந்து விடுபட்டு அதிக புழக்கத்திற்கு வருதல், மொழி நடையில் ஏற்படும் மாற்றம் முதலியவை சான்றுகளுடன் விளக்கப்படுகின்றன. ஒத்த வடிவச் சொற்களைக் கையாளுவதில் இரு அகராதியும் வேறுபடுகின்றன. இவற்றை மூலமொழி அடிப்படையிலும் வேர்ச்சொல் அடிப்படையிலும் ஒத்த வடிவச் சொற்களை வரலாற்று அகராதி தீர்மானிக்கின்றது. தற்கால அகராதிகள் சிலவற்றில் ஒத்த வடிவச் சொற்கள் ஒற்றுமை, வேற்றுமை அடிப்படையில் பிரிக்கப் படுவதைச் சான்றுகள் மூலம் விளக்கப்படுகின்றது.

**"வரலாற்று அடிப்படையில் வடமொழி அகரமுதலி"**

(மே 1978) செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு - 2.

இக்கட்டுரையில் வரலாற்று வடமொழி அகரமுதலி என்றால் என்ன? அதில் கூறப்பட்டுள்ள செய்திகள் போன்றவை விளக்கப்படுகின்றன. ஒரு சொல் அந்தப் பொருளை எந்தக் காலத்தில் பெற்றது என்பதை மேற்கோளுடன் கூறுகின்றது என்றும், 1976-ல் முதல் மடலமும், 1978-ல் இரண்டாவது மடலமும், வெளிவந்ததாகக் கூறப்பட்டுள்ளது. 1948 முதல் 1972 வரை 1000 நூல்களைப் பார்வையிட்டுக் கிட்டத்தட்ட 80 இலட்சத்திற்கு மேற்பட்ட சொற்கள் வேர்ச்சொல் ஆராய்ச்சியோடு தரப்பட்டுள்ளனவாகவும் அதன் தலைமைப் பொறுப்பைப்

பூனாவிலுள்ள கத்ரே என்பவர் ஏற்றுக் கொண்டிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

**"வரலாற்று/விளக்க அகராதிகளில் முறைவைப்பு"**

*மதிவாணன், இரா. (மார்ச்-1989) அகராதிக்கலைக் கருத்தரங்கு, பெருஞ்சொல் அகராதித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

அகரமுதலியின் வகை, பொருளடைவுப் பாங்கு ஆகியவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சொற்களின் பொருள், மேற்கோள், கடன் சொல்லாயின் மூலம் ஆகியவற்றை விளக்குவது ஒரு மடல் அகரமுதலி என்றும், காலத்தால் வழக்கிறந்த சொல், பொருள், மரூஉ, சுவடி, கல்வெட்டு போன்றவற்றை நிறுவுவது பன்மடல் அகரமுதலி என்றும், பயன்பாட்டு நோக்கில் அகரமுதலி நால்வகைப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. சொற்களின் பொருள் வளர்ச்சியை வடிவ வளர்ச்சியுடன் இணைத்தே ஆராய முடியும் என்றார் பாவாணர். குறிப்பால் பொருள் உணர்த்தும் தன்மை தனிச் சொல்லிலும், சொல்லின் வேரிலும் உண்டு என்றும், கால வரிசைப்படி பொருளை வரையறை செய்யும்போது சிக்கல் எழும் என்றும், காலத்தைக் கணிக்க சொற்பொருள் வரிசை பயன்படும் என்றும், சொல்லின் பொருள் பேசுபவனின் எண்ணத்தால் வளர்கிறது என்றும், சில சொற்கள் மூலப் பொருளை இழந்துவிட்டு வழக்கூன்றிய பொருளையே பெற்றுள்ளன என்றும் காட்டுகள் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

**"வளரும் தமிழுக்கு ஒரு வளமான அகராதி"**

*ஐராவதம் மகாதேவன், (25.1.92) தினமணி.*

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் சிறப்புக்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். 20 ஆம் நூற்றாண்டில் சிறந்த அகராதி தமிழ்ப் பேரகராதி என்றும், 21ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கப்போகும் நமக்கு க்ரியாவின்

தற்காலத் தமிழ் அகராதி சிறந்த அகராதி என்றும், தற்காலப் பேச்சு வழக்கிலிருந்து செய்தித்தாள் மற்றும் வார, மாத இதழ்கள், சிறுகதை, நாவல்கள் போன்றவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட 16000 சொற்களைக் கொண்ட சிறந்த தமிழ் அகராதி இது என்றும், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் கூட இதனைப் பயன்படுத்த முடியும் என்றும், இந்திய மொழிகளிலேயே கணிப்பொறி உதவி கொண்டு தயாரிக்கப்பட்ட முதல் அகராதி இதுவே என்றும், புதிதாக ஏராளமான சொற்கள் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் சுட்டப்பட்டுள்ளது.

**"விவசாயத் தொழில் கலைச்சொற்கள் – ஓர் ஒப்பாய்வு" [புதுவை, காரைக்கால் பகுதிகள்]**

*முருகேசன், மு. (1986) மொழியியல் 9, எண்-3, 4. பக்.65-77. அனைத்துலகத் திராவிட மொழியியல் கழகம், புதுவை.*

இக்கட்டுரை, புதுவை, காரைக்கால் ஆகிய இரு பகுதிகளிலும் வழங்கும் விவசாயத் தொழிற் கலைச்சொற்களை ஆராய்ந்து, இரு வட்டாரக் கிளைமொழிச் சொற்களின் வேறுபாட்டைக் கூறுகின்றது. இக்கட்டுரை, மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவை ஆறு சிறு தலைப்புகளாகப் பகுக்கப்படுகின்றன. பாண்டிச்சேரி, காரைக்கால் ஆகிய இருபகுதிகளிலும் பொதுவாக வழங்கும் சொற்கள், வேறுபட்ட சொற்கள், புதுவைக்கே உரிய சொற்கள் என்ற பெரும் தலைப்புகள் ஒவ்வொன்றிலும் இயற்கை தொடர்புடைய சொற்கள், விவசாயக் கருவிகள், நாற்று, பயிர், அறுவடை, விவசாயப் பழக்க வழக்கங்கள் என்ற 6 சிறு தலைப்புகளின் கீழ் சொற்கள் அகரநிரலில் பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன.

**"வின்சுலோ தமிழ்-ஆங்கில அகராதியின் இலக்கணக் குறிப்பீட்டு நெறி"**

*மாதையன், பெ. (1989) ஆய்வுக்கோவை 21, தொகுதி-2, பக்.179-184. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.*

வின்சுலோ தமிழ்-ஆங்கில அகராதியில் பின்பற்றப் பட்டுள்ள இலக்கணக் குறிப்பீட்டு நெறியை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழில் தமிழ்-ஆங்கிலம் என அமைந்த இருமொழி அகராதிகளில் பதிவமைப்பு, பொருள், இலக்கண ஒப்பீடு முதலியவற்றில் வின்சுலோ அகராதியே சிறப்பு உடையது என்றும், வினை அமைப்பு அதனை அடுத்துவரும் எல்லாப் பதிவுகளும் விளக்கமாக எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்படுகின்றது. வினை போன்றே பெயர்ப் பதிவுகளும் தொழிற்பெயர், சுட்டுப்பெயர், சிறப்புப் பெயர் என்னும் அமைப்பில் இடம்பெற்றுள்ளன. பெயர், வினை போன்றே இடைச்சொல், உரிச்சொல், வினையடை, பெயரடை, செயவென் எச்சம் போன்றவையும் விளக்கப்படுகின்றன.

## ஆய்வடங்கல் குறிப்புகளுடன்

## ஆங்கிலக் கட்டுரை அடைவு

**"A Birds Eye view in Tamil Lexicon"**

Innasi, S. (1991) National Seminar on Lexicography, Dept. of Linguistics, M.K.University, Madurai.

சென்னைப் பல்கலைக்கழகத்தினரால் வெளியிடப் பட்டுள்ள தமிழ்ப் பேரகராதியில் காணப்படும் சில குறைகள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. தவத்தள், நகைச்சி, நகைத்தி போன்ற சிலப்பதிகாரம், கம்பராமாயணத்தில் காணப்படும் சில சொற்கள் விடுபட்டுள்ளன என்றும், தேம்பாவணியில் காணப்படும் பல சொற்கள் விடுபட்டுள்ளன என்றும், தேம்பாவணியில் கையாளப்பட்டுள்ள சில சொற்களின் பொருள் இன்மையும், விடுபட்ட சொற்களில் பெயர், வினைமுற்றுக்கள், எண்ணுப்பெயர்கள், வினை, இடைச்சொற்கள் என்பன அடங்கும் என்றும் இவ்வாறு விடுபட்டதற்கான பல காரணங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சொற்களைத் தொகுப்பதில் ஏற்பட்ட குறையும், திட்டமிடுவதில் ஏற்பட்ட குறையும் இதில் கூறப்பட்டக் காரணங்களில் ஒன்றாகும்.

**"Abitana Chintamani - A Review"**

Jayadevan, V. (1976) Ayvukkovai - 8, Part-I, Page-492, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

தமிழ்க் கலைக்களஞ்சிய வரலாற்றில் தொடக்க காலச் சூழலில் வெளிவந்தனவற்றுள் ஒன்றான - அபிதான சிந்தாமணி பற்றிய நூல் மதிப்புரையாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

அபிதான சிந்தாமணியின் உருவாக்க வரலாறு சுருக்கமாய்த் தரப்பட்டுள்ளது. பின்னர் அபிதானம், சிந்தாமணி என்னும் சொற்களின் சொற்பொருளும் கலைக்களஞ்சியம் எனும் சொல்லின் சொற்பொருளும் ஒத்துள்ள தன்மையும் குறிப்பிடப் பட்டுள்ளது. இக் கலைக்களஞ்சிய அகராதியில் இடம்பெற்ற பதிவுகளில் பொருட்புலங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் தமிழின் அனைத்து அறிவுப் பகுதிகளையும் உட்படுத்தாத இயல்பும் ஆராயப்பட்டுள்ளது.

அகரநிரல் அமைப்பு (உயிர், உயிர்மெய், மெய், கிரந்தம்) பதிவுச் சொற்களின் செய்தி அளவு என்பனவும் சுட்டப்பட்டுள்ளன.

இவற்றுடன் இந்நூலில் கையாளப்பட்ட சுருக்கக் குறியீடுகள் எங்கும் விளக்கப்படாமை, சில பதிவுகளில் ஆங்கிலத்தில் செய்தி தரப்பட்ட நிலை, இந்நூலுக்கு முன் வெளிவந்த அபிதானகோசம் பற்றிய செய்தி இடம்பெறாமை, இக் கலைக் களஞ்சிய அகராதி அன்று மேலைநாடுகளில் வளர்ந்திருந்த கோட்பாடுகளைக் கைக்கொள்ளாமல் வரையறுத்த முறையின்றித் தொகுக்கப்பட்ட நிலை முதலான குறைபாடுகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

**"A Brief - Survey of Text Dictionaries in Tamil"**
Jayadevan, V. (1980) Annals of Oriental Research, Vol.XXX, Part-1. University of Madras, Madras.

நூல் அகராதிகள் அவற்றின் தோற்றம், வளர்ச்சி பற்றிய வரலாறு இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆசிரியரின் நூல்களுக்கான அகராதி, குறிப்பிட்ட ஒருகால எல்லைக்குள் அடங்கும் நூல்களுக்கான அகராதி, செம்மொழி இலக்கியங்களுக்கான அகராதி, ஒரு குறிப்பிட்டத் துறைக்கான

அகராதி வெளிவந்துள்ளன. நூல் அகராதிகளும் திருக்குறளுக்கான அகராதி ஒன்றும், 1893, 1900 ஆண்டுகளில் முறையே நாலடியார், திருவாசகம் போன்றவற்றிற்கான நூல் அகராதியும் ஜி.யு.போப் வெளியிட்டார். ஐரோப்பியர் வருகைக்குப்பின் வளர்ச்சியடைந்த பதிப்புத்துறையில் உ.வே.சா. குறிப்பிடத்தக்கவர். 1924-ல் மார்ச்சுசகாயம் செட்டியாரும் 1952-ல் சாமிவேலாயுதம் பிள்ளையும் திருக்குறள் சொல்லடைவுகளை வெளியிட்டனர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தொல்காப்பியம், நற்றிணை, ஐங்குறுநூறு போன்ற நூல்களுக்குச் சொல்லடைவினை வெளியிட்டார். நூல் அகராதிப் பணியில் கேரளம், அண்ணாமலை, பாண்டிச்சேரி போன்ற பல்கலைக்கழகங்கள் ஈடுபடலாயின.

**"An Evaluation of J.P.Fabricius Tamil and English Dictionary"**

Jayadevan, V. (1991) National Seminar on - Lexicography Dept. of Linguistics, Madurai Kamaraj University, Madurai.

இக்கட்டுரையில் பெப்ரீசியசின் தமிழ்-ஆங்கில அகராதி பற்றிய பல செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் - ஆங்கில இருமொழி அகராதி வளர்ச்சியில் - முதன்மையாகத் திகழ்பவர் பேப்ரீசியஸ். தற்பொழுது தமிழில் வழங்கிவரும் தமிழ்-ஆங்கில அகராதிகளில் பழமையும் முதன்மையும் வாய்ந்தது பெப்ரீசியசின் அகராதியாகும். "தமிழும் இங்கிலீசுமாயிருக்கிற அகராதி" என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இவ்வகராதி 1779-ல் வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் அச்சிடப்பட்ட முதல் அகராதியும் இதுவேயாகும். இவ்வகராதி மதம் மற்றும் வியாபாரத்தின் பொருட்டு தமிழகம் வந்த பிற நாட்டினர் தமிழ் கற்றுக்கொள்ளும் நோக்கில் படைக்கப்பட்டது.

இவ்வகராதி, பல்வேறு வழிகளில் திருத்தி அமைக்கப் பெற்று நான்கு பதிப்புக்களில் வெளியாகியுள்ளது. மூல

அகராதியின் அமைப்பும், நோக்கமும் பின்வந்த பதிப்புக்களில் பல்வேறு நிலைகளில் மாற்றம் அடைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**"A Note on the Use of some Lexical items"**

Gopinathan, V.P. (1978) Ayvukkovai-10, Part-2, Page-109. All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

இக்கட்டுரை, மலையாளத்தில் பயன்படுத்தப்படும் தனித்தன்மை வாய்ந்த சொற்பயன்பாட்டு நிலைகளை ஆராய்கின்றது. தமிழ், மலையாளம் இரண்டிலும் பயன்படும் சில சொற்கள் பயன்பாட்டுச் சூழல்கள், பழஞ்சொல், பொருள் விரிவு, பயன்பாட்டு வேறுபாடு, பொருள் வேறுபாடு எனும் ஐந்து நிலைகளில் ஆராயப்பட்டுள்ளன.

தமிழில் ஒரு சொல் சுட்டும் இரு பொருளைக் குறிப்பிட மலையாளத்தில் இருவேறு சொற்கள் கையாளப்படும் நிலை, ஒரே சொல் இருமொழியிலும் இருவேறு பொருள் தரும் நிலை ஆகியன சான்றுகளுடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

பழஞ்சொற் பகுதியில் கொள்ளி, தூக்கம், கொள், தெரி, குந்து எனும் சொற்களும் பொருள் விரிவுப் பகுதியில் வெள்ளம், பள்ளி, இழி எனும் சொற்களும் மலையாளத்தில் பயன்படும் சூழல்கள் ஆராயப்பட்டுள்ளன. பயன்பாட்டு வேறுபாடு எனும் பகுதியில் பார், படி, கேள் எனும் சொற்கள் தமிழில் வழங்கும் நிலைகளும் மலையாளத்தில் இச் சொற்கள் உ ணர்த்தும் பொருள் வேறுபாட்டிற்கு ஏற்ப, கண்டு, நோக்கு, எனப்படுவனவும் படி, வாசி எனும் சொற்களும் கேள், சோதி என்பனவும் அவை பயன் படுத்தப்படும் நிலைகளும் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

**"A Study of Synonyms in Tamil"**

Balu, S. (1984) Ayvukkovai-16, Part-2, Page-247, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

தமிழின் ஒருபொருட் பல சொற்கள் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

இக்கட்டுரையில் முற்றொருபொருட் பன்மொழிகளும் ஒருபுடை ஒருபொருட் பன்மொழிகளும் தமிழ்ச் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. ஒருபுடை ஒருபொருட் பன்மொழிகள் குறிப்புப் பொருள் நிலையில் பலவாய் வேறுபடும் தன்மைகளும் ஆராயப்பட்டுள்ளன. இவ்விரண்டுடன் பகுதி ஒருபொருட் பன்மொழிகளும் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. உல்மன், சுகுஸ்தா, லையன்ஸ் போன்ற அறிஞர்களின் ஒருபொருட் பன்மொழிச் சிந்தனைகளும் அவற்றுக்கான தமிழ்ச் சான்றுகளும் தரப்பட்டுள்ளன.

**"Ati - A Homonym in Tamil"**

Boologa Rambai, A. (1984) Ayvukkovai-16, Part-2, Page-282, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

"அடி" எனும் ஒப்புருச் சொல்லின் பயன்பாட்டினையும் பொருள் வேறுபாட்டு நிலைகளையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

அடித்தான், (மரத்தின்) அடி, (எட்டு) அடி எனும் மூன்றும் பொருள் நிலையில் வேறுபட்டு ஒப்புருச் சொல்லாய் செயற்படும் நிலைகளும், அவை ஒவ்வொன்றும் தம்மளவில் தொடர்புடைய பொருட்களைக் கொண்டு பல்பொருளொரு சொல்லாய் உள்ள நிலைகளும் விளக்கப்பட்டுள்ளன.

அடி எனும் முதல் வினையும் அடிபோடு, விசிறிஅடி என்பன போன்ற கூட்டுச்சொற்களும் மொழியில் செயற்படும் பொருட்சூழல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அடி எனும் பெயர்ச்சொல் (அடிப்பகுதி எனும் பொருளில் வருவது) கீழ்ப்பகுதி, தொடர், முழுமை, ஆழம், கால், அடியவர், அடிப்படை என்பன போன்ற பலபொருள்களில் பயன்படும் நிலையும் ஆராயப்பட்டுள்ளது.

**"Children's dictionary in Tamil"**

Sankara Narayanan,G. (1989) All India Seminar on Lexicography and Encyclopaedia, Tamil University, Thanjavur.

குழந்தைகளுக்கான அகராதியின் தேவைகளும் அதைத் தொகுப்பதில் ஏற்படும் சில சிக்கல்களும் அவற்றிற்கான தீர்வுகளும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. ஆங்கிலம் போன்ற பிற உலக மொழிகளில் குழந்தைகள் அகராதிகள் பல தொகுக்கப் பட்டுள்ளன. ஆனால், தமிழில் இம்முயற்சி இன்னும் தொடங்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

குழந்தைகளுக்கான அகராதிகளைத் தொகுப்பதில், தலைச்சொல் மற்றும் பொருள் தரும் நிலைகளில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அகராதி தொகுப்பாளர் தாம் தொகுக்கும் அகராதி குழந்தைகளுக்குப் பள்ளி வகுப்பறையில் தோன்றும் பல தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அமையுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழ் மொழியிலுள்ள மொழிச் சூழல் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சு மற்றும் எழுத்து மொழியைப் பயன் படுத்துவதில் சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றது. தலைச்சொல் தேர்வில் ஏற்படும் சிக்கல்கள், தெரிவுசெய்யப்பட்ட சொற்களைத் தலைச்சொற்களாகத் தருவதில் ஏற்படும் சிக்கல்கள், ஒலிப்பு முறையில் ஏற்படும் சிக்கல்கள் போன்றவை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கப்பட்டு அவற்றிற்கான தீர்வுகளும் கொடுக்கப் பட்டுள்ளன.

மொழிநடையால் தலைச்சொல்லில் பல சிக்கல்கள் தோன்றுகின்றன. இச்சொற்களை விளக்க கடைபிடிக்க வேண்டிய பல்வேறு நெறிமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன.

தலைச்சொற்களின் பொருளை விளக்கும் நிலையில் குழந்தைகளின் சொற்றொகுதித் திறனையும் வளர்க்கும் முறை கையாளப்பட வேண்டும். அதற்காக ஒருபொருட் பன்மொழிகளும், எதிர்ச்சொற்களும் விளக்கப் பகுதியில்

இடம்பெற வேண்டும். தனிச்சொற்களின் பல்வேறு பண்புகள் குறிப்பான்கள் மூலம் விளக்கப்பட வேண்டும். இது பழங்கால சொற்களைத் தற்காலச் சொற்களிலிருந்து பிரித்து அறிய உதவும் தலைச்சொற்களுக்கான வழக்குகளும் தரப்படல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**"Common Vocabulary Series; A New dictionary Type Retrospect and prospect"**

Balasubramanian,K. (1989) All India Seminar on Lexicography & Encyclopaedia, Tamil University, Thanjavur.

இந்திய மொழிகள் வெவ்வேறு மொழிக் குடும்பங்களைச் சார்ந்திருந்தாலும், அவை தங்களுக்குள் பொதுச் சொற்றொகுதியைக் கொண்டுள்ளன. இது பெரும்பாலும் பொது இனமொழி மூலத்தினாலும் பொது கடன் சொற்களாலும் ஏற்படுகின்றது. வடமொழி, பெர்சியன், ஆங்கிலம் என்பன பொது கடன் சொற்களைத் தரவல்லன. பொதுச் சொற்றொகுதிப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிறுவனங்கள் சிலவும் குறிப்பிடப் பட்டுள்ளன. நடுவண் மொழி நிறுவனம், மைசூரிலிருந்து வெளியாகியுள்ள பொதுச் சொற்றொகுதி சிறப்பாக அமைந்துள்ளது என்றும் இக்கட்டுரை கூறுகிறது.

**"Compiling A Learner's Dictionary"**

Sankara Narayanan,G. (1991) National Seminar on Lexicography, Dept. of Linguistics, Madurai Kamaraj University, Madurai.

கற்போர் அகராதி தொகுப்பதில் ஏற்படும் சிக்கல்களும் அவற்றிற்கான தீர்வுகளும் நெறிமுறைகளும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

சொல்தேர்வு, தலைச்சொல் பதிவு, கடன்சொல், ஒலிப்பு, இணைச்சொல், பொதுச்சொல், ஒருபொருட் பன்மொழி, தலைச்சொல் இலக்கணம் போன்ற பல அகராதிக் கூறுகள் கற்போர் அகராதி அடிப்படையில் விளக்கம் பெற்றுள்ளன.

கற்போர் அகராதியில் மூலமொழி (Source Language) மற்றும் விளக்க மொழி (Target Language)யின் பங்கு; அவ்விருமொழிகளிலும் இடம்பெறும் சொற்களும் விளக்க மொழியில் பொருளின் தன்மையும் விளக்கப்பட்டுள்ளன. விளக்க மொழியினர் பயன்பெறும் நிலையில் அமையும் கற்போர் அகராதியில் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, குழந்தைகள் இலக்கியம், பள்ளிப் புத்தகங்கள் என்பன தரவுகளாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

பழஞ்சொல், கிளைச்சொல், இருமொழியம் என்பன கற்போர் அகராதிகளில் இடம்பெறுவதில்லை.

கடன்சொற்களைச் சேர்ப்பதில் அகராதி தொகுப்பாளர் கவனம் செலுத்துதல் வேண்டும்.

விளக்க மொழியினருக்காகத் தொகுக்கப்படும் அகராதிகளில் சொல்லின் ஒலிபெயர்ப்பின் தேவையும் விளக்கப் பட்டுள்ளது. மூலமொழிக்கான இணைச் சொற்களை விளக்கமொழியில் தருவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இணைச்சொற்களின் பொருள் மாற்றமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஒருபொருட் பன்மொழிகளைத் தலைச் சொல்லாகத் தருவதில் வரவு எண்ணிக்கைக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனப் பல செய்திகளைக் கொண்டுள்ளது.

**Compiling Bilingual Dictionaries (Tamil -Bengali or Bengali - Tamil) Some Problems.**

Sukla Chakrabarti. (1989) Ayvukkovai-21, Part -2; page - 112, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

தமிழ்-வங்காள பயிற்றுமொழி அகராதித் தொகுப்பில் ஏற்படும் சிக்கல்களும் அவற்றின் தீர்வுகளும் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. ஒப்புமுறை தருவதிலும், சொற்பொருளை விளக்குவதிலும் ஏற்படும் சிக்கல்கள் தமிழ்-வங்காள எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. கலைச்சொற்களின்

இலக்கணக்குறிப்பைத் தருவதில் பல சிக்கல்கள் தோன்றியதையும், அவற்றிற்கான சில தீர்வுகளும் விளக்கப்பெற்றுள்ளன.

**Conjugational Indication in Tamil Dictionaries**

Mathayan,P. (1991) National Seminar on Lexicorgraphy, Dept. of Linguistics, M.K.University, Madurai.

இக்கட்டுரை, வினைவிகற்பங்களை அகராதியில் காட்டுவதிலுள்ள பல்வேறு நிலைகளையும் வரலாற்று முன்னேற்றங்களையும் குறைபாடுகளையும் அவற்றின் தீர்வுகளையும் தருகின்றது. ஐரோப்பிய அகராதியியலாளர்கள் வினைவிகற்பங்களை வெளிக்காட்ட வினைப்பதிவுகளுடன் பல்வேறு இலக்கணச் செய்திகளையும் தந்துள்ளனர் என்றும், வினைப்பதிவிற்குரிய இலக்கணங்களைத் தருவதில் இரண்டு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன என்றும், தலைச்சொல் அடுத்து வினைவிகற்பங்களையும், வினைஅடிகளையும், எச்ச வடிவங்களையும் தருதல், தலைச்சொல்லின் பின்னர் விகற்பங்களை வருவிக்கும் எண்களைத் தருதல் என்பன கூறப்பட்டுள்ளன. தமிழ்ப்பேரகராதி பெருஞ்சொல் அகராதிகளில் காணப்படும் குறைகள் பெரும்பாலும் அகராதிச் சொற்களை மீள்பார்வை செய்யாமையாலும், அச்சுப்பிழையினாலும், கூட்டுப் பணியின் காரணமாகவும் ஏற்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

**Contrastive Lexicology of Tamil and Malayalam**

Rajendran,S. (1980) Ayvukkovai - 12, Part - 2. Page - 425. All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

இக்கட்டுரை தமிழ், மலையாளம் இரண்டிலும் இடம்பெற்றுள்ள குறிப்பிட்ட சொற்றொகுதியை உறழ்ந்து ஆராய்வதன் வழி தமிழ் - மலையாளம் எனும் இருமொழி அகராதியை உருவாக்குவதற்கான கொள்கை அடிப்படையாலான வரைவுச் சட்டம் உருவாக்குவதை நோக்கமாய்க் கொண்டுள்ளது.

முதலில் 'நைடா' -வின் சொல் வகைப்பாட்டுச் செய்திகள் விரிவாய்த் தரப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பொருட்புலம் சார்ந்த இருமொழிச் சொற்களையும் உறழ்ந்து ஆராய்ந்து அவற்றிடையே காணப்படும் ஒருபுடை ஒப்புமை, முழு ஒப்புமை என்பன எப்படிக் குறிப்பிடப்படவேண்டும் எனும் செய்தியும் தரப்பட்டுள்ளது.

படர் எனும் சொல் தமிழில் கூடுதல் பொருளில் வழங்கும் நிலையும், கேள் எனும் சொற்பொருளை உணர்த்த மலையாளத்தில் சோதி, கேள் எனும் இருசொல் பயன்படுத்தப்படும் நிலை சுருள் போன்ற சொற்கள் தமிழில் தரும் பண்பாட்டுப் பொருட்கூறு மலையாளத்தில் மூளைச்சோறு எனக் கூட்டுச் சொல்லாய் வழங்கும் நிலையும் ஆராயப்பட்டுள்ளன.

**Dictionary Making and dialect Usages some problems in Tamil**

Neethivanan,J.(1991), National Seminar on Lexicography, Dept. of Linguistics, M.K.University, Madurai.

அகராதித் தொகுப்பில் கிளைமொழிச் சொற்கள் ஏற்படுத்தும் சிக்கல்கள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. அகராதிகள் அவற்றின் தன்மைக்கேற்ற கிளைமொழிச் சொற்களைத் தலைச்சொற்களாகக் கொடுக்கின்றன என்றும், அகராதியியலார் கிளைமொழிச் சொற்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும், கிளைமொழிச் சொற்களைத் தொகுப்பதும், தொகுத்தவற்றைத் தலைச்சொல்லாகக் கொடுப்பதிலும் உள்ள சிக்கல்களும் விளக்கப்பட்டுள்ளன. கிளைமொழிச் சொற்களின் பொருள் நிலையில் ஏற்படும் சிக்கல்களும், கூட்டுச் சொற்களைத் தொகுப்பதில் உள்ள சிக்கல்களும் விவரிக்கப்பட்டுள்ளன.

**Dictionary Making in The Tamil Region**

Agesthiyalingam,S. Kumarasamy Raja, N. (1980) Lexicography in India, Page-119, Central Institute of Indian Languages, Mysore.

இக்கட்டுரை, சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் விடுபட்டுப்போன சொற்களையும் சொற்பொருட்களையும் எடுத்துக்காட்டி, இனி எதிர்காலத்தில் பல்வேறு நிலைகளில் புதுவகை அகராதிகள் உருவாக வேண்டுவதன் தேவைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வட்டார வழக்கு, தோடா, கோடா போன்ற மொழிகளுக்கும் அகராதி உருவாக வேண்டுவதன் தேவையும் வரலாற்று அகராதி, பிற மொழியாளர்களுக்கான சொற்றொகுதி, அடிப்படைத் தமிழ்ச் சொற்களுக்கான சொற்றொகுதி, மருத்துவம், தொழில்நுட்பம், அறிவியல் போன்ற பல துறைகளுக்கு உரிய அகராதிகள் உருவாக வேண்டுவதன் தேவையும் முன்வைக்கப் பட்டுள்ளன. இத்துடன் இக்காலத் தமிழுக்கான சொற்றொகுதி, அகராதி போன்றவற்றின் இன்றியமையாமையும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

**Difference between synonyms**

**Balu,S.** (1985) Ayvukkovai - 17, **Part - 2, Page** - 213, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

ஒருபொருட் பன்மொழிகளும் (synonyms) அவற்றின் வகைகளும் முழு மற்றும் பகுதி ஒருபொருட் பன்மொழிகளை வேறுபடுத்தி அறியும் முறை என்பன போன்ற செய்திகள் இந்தக் கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. ஒரு பொருட் பன்மொழிகளின் வகையை அறிந்துகொள்ள இரண்டு முறைகள் கொடுக்கப் பட்டுள்ளன. அவை 1. பதிலிடு முறை 2. எதிர்மறைச் சொற்களைக் கண்டுகொள்ளும் முறை. சுத்தம், கூச்சம், இரைச்சல், இனிய, தித்தித்த எனும் ஒருபொருட் பன்மொழிகள் மேற்கண்ட முறைகளின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன.

**Grammar Contents in a Dictionary**

Sadasivam,M. (1991) National Seminar on Lexicography, Dept, of Linguistics, Madurai Kamaraj University, Madurai.

அகராதிகளில் இடம்பெறும் இலக்கணச் செய்திகள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. மரபு வழியாகவே அகராதிகளில் இலக்கணச் செய்திகள் அதிகம் இடம் பெறுவதில்லை. சில அடிப்படை இலக்கணச் செய்திகள் மட்டும் பெரும்பாலான அகராதிகளில் இடம்பெறுகின்றன. தமிழ்ப் பேரகராதியில் விடுபட்டுள்ள வினைக்குரிய சில செய்திகள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

**History of Tamil Lexicography (introductory part of Tamil Lexicon)**

Vaiyapuripillai,S. (1982) Tamil Lexicon; Vol.1, Page-25, University of Madras, Madras.

தமிழ் அகராதியியலின் தோற்றமும் வளர்ச்சியும் இம்முன்னுரையில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ் அகராதியியலின் தோற்றுவாய் தொல்காப்பிய உரியியலாகும். தொல்காப்பியத்தை அடுத்துப் பல்வேறு வகையான நிகண்டுகள் தோன்றியுள்ளன. எட்டாம் நூற்றாண்டிலிருந்து தொடங்கிய இம்மரபு பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி வரையிலும் நீடித்துள்ளது. 26 நிகண்டுகளின் அமைப்பும் வரலாறும் இம்முன்னுரையில் இடம் பெற்றுள்ளன. பிற்காலங்களில், நிகண்டுகளின் ஒவ்வொரு தொகுதியும் சிறுசிறு அகராதிகளாகத் தோற்றம் பெற்றது. தமிழில் தோன்றிய முதல் இருமொழி அகராதி தமிழ் - போர்த்துகீசு (1679) அகராதியாகும். இவ்வகராதி முதல் தமிழ்ப் பேரகராதி வரையிலான காலக்கட்டத்தில் தோன்றிய பல்வேறு ஒருமொழி இருமொழி அகராதிகளின் வரலாறும் அமைப்பும் இம்முன்னுரையில் இடம்பெற்றுள்ளன.

**Homonyms in Tamil**

Chithiraputhiran,H.(1989). Ayvukkovai - 21, Page - 106, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

இக்கட்டுரையில் ஒருசொல் பலபொருள் தன்மை, ஒப்புருத் தன்மை ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. பலபொருள் மற்றும் ஒப்புருச் சொற்களின் வேறுபாடு, ஒருசொல் ஒப்புருச்சொல்லா அல்லது பலபொருள் சொல்லா என்பதைக் கண்டறிவதற்குரிய வழிமுறைகளும் ஒப்புருச்சொற்களின் வகைகள், அவற்றிற்கான எடுத்துக் காட்டுகள், மொழிகளில் ஒப்புருச்சொற்கள் தோன்றுவதற்குரிய காரணங்கள் ஆகியவை இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. பிறமொழிச் சொற்கள் எவ்வாறு தமிழில் ஒப்புருச் சொற்களாகத் தோன்றுகின்றன என்ற செய்தியும் தமிழ் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளது.

## Hyponymy in Tamil

Regunathan, T.K (1984) Ayvukkovai - 16, Part - 2, Page-347, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

பொருண்மையியல் கோட்பாட்டில் அடிப்படைப் பொருட் கூறாய் உள்ள உட்பொருட்சொல் பற்றிய சிந்தனைகளை முன்வைக்கிறது இக்கட்டுரை.

மீச்சொல், உட்பொருட்சொல் என்பனவும் ஒரு மீச்சொல்லுக்கான இணை உட்பொருட் சொற்களும் முதற்கண் விளக்கப்பட்டுள்ளன. இதன் பின்னர் உட்பொருட் சொற்களுக்கு இடைப்பட்ட உறவுநிலைகள் பலநிலைகளில் ஆராயப் பட்டுள்ளன. மீச்சொல் பல உட்பொருட் சொற்களை உள்ளடக்கிய நிலையும் பொதுச் சொல்லைக்காட்டிலும் உட்பொருட் சொல் பலவித பொருண்மைக் கூறுகளைக் கூடுதலாய்க் கொண்டுள்ள நிலைமையும், 'ஆ' எனும் மீச்சொல் 'இ' எனும் மீச்சொல்லுக்கு உட்பொருட் சொல் ஆகும் நிலையில் 'ஆ' எனும் மீச்சொல்லில் அடங்கும் உட்பொருட்சொல் 'இ' யின் உட்பொருட் சொல்லாயும் செயற்படும் தன்மையும் சான்றுகளுடன் ஆராயப்பட்டுள்ளன.

## Lexicalization in Tamil

Deiva Sundaram, N. (1978) Ayvukkovai -10, Part-2, Page-220, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

'Lexicalization' என்ற சொல்லுக்கே சொல்லாக்கம் என்ற மொழிபெயர்ப்பு இங்குக் கொள்ளப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் தோன்றியுள்ள சில சொல்லாக்கச் சொற்களும் அவை தோன்றுவதற்குரிய காரணங்களும் முதலில் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. பின்னர்த் தமிழில் காணப்படும் சில சொல்லாக்கங்களின் நெறிமுறைகள் எடுத்துக்காட்டுகளுடன் கூறப்பட்டுள்ளன.

ஒருசொல் இலக்கண விதிகளுக்கு அப்பாற்பட்டு இயங்கும் நிலையில் அச்சொல் பழைய சொல் உறவுநிலையிலிருந்து விடுபட்டுப் புதுச் சொல்லாகத் தோன்ற வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வாறு தோற்றம்பெறும் சொற்கள் பல்வேறு மொழி மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன.

சில இலக்கண விதிமுறைகள் வழக்கிழக்கும்போது இவ்விதிமுறைகளால் படைக்கப்பட்ட சொற்களும் தனிச் சொற்களாகக் கொள்ளப்படும் வாய்ப்பு ஏற்படுகின்றது. சில சொற்களின் அசைகள் விடுபடுவதன் மூலமும் புதுச் சொற்கள் தோற்றம் பெறுகின்றன. சில சொற்களை ஒலிப்பிற்கு எளிமையாகக் குறுக்கிக்கொள்வதனால் குறுக்கம் பெற்ற சொல் தனிச்செல்லாகக் கொள்ளப்படுகிறது. சில கூட்டுச் சொற்கள் தங்கள் அடிப்படைப் பொருளை இழந்து .வழக்கிழக்கின்றன. ஆனால், அவற்றில் காணப்படும் தனிச்சொற்கள் புதுப்பொருள் பெற்றுப் புதுக் கூட்டுச் சொற்கள் கால வளர்ச்சியில் தனிச்சொற்களாகக் கூட மாற்றம் பெறுகின்றன. விகுதிகள் முழுச் சொல்லாகத் தோற்றம் பெறுகின்றன எனப் பல செய்திகளைக் கொண்டுள்ளது இக்கட்டுரை.

**Lexical opposites in Tamil**

Regunathan, T.K. (1981), Ayvukkovai - 13, Part-2, Page-311, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

இக்கட்டுரை, எதிர்மறைகளை வகைப்படுத்திக் காட்டுகின்றது. சொற்பொருள் உறவுகளில் முக்கியமானது எதிர்மறை என்றும், ஒருபொருள் பன்மொழியும் எதிர்மறையும் பொருள் உறவு அடிப்படையில் எழுந்தவை ஆயினும், அவை வேறு வேறானவை என்றும், பொருண்மையியல் ஆய்வில் எதிர்மறை என்பது உடன்பாட்டிற்கு முற்றிலும் எதிரானது என்ற எண்ணம் நிலவிவருகிறது என்றும், படிநிலை எதிர்மறை (பெரியது - சிறியது) உருபனியல் எதிர்மறை (நீதி-அநீதி), Complimentary (ஆண்-பெண், நண்பன் - பகைவன்), மாற்று எதிர்மறை (வாங்கு-வில்), திசைக்குறி எதிர்மறை (வடக்கு - தெற்கு) - (மேல் - கீழ்) என்ற பல்வேறு வகையான எதிர்மறைகள் எடுத்துக் காட்டுகளுடன் விளக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**Lexical Variation in Journalistic Language**

Thangamaniam. (1978), Ayvukkovai - 10, Part -2, Page - 203, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

இக்கட்டுரையில் இன்றைய பத்திரிகை மொழிநடையில் ஒரே சொல் வேறுபட்ட நிலைகளில் பயன்படும் நிலைகளும், ஒருபொருட் பலசொற்கள் பலவாறாய்க் கையாளப்படும் சூழல்களும் ஆராயப்பட்டுள்ளன.

ஒலிப்புநிலை வேறுபாடு, தமிழாக்கம், வடமொழியாக்கம், மொழிபெயர்ப்பு, சந்தி, எழுத்தாக்கம், நடை எனும் பலவித காரணங்களால் பத்திரிகை மொழியில் சொல் வேறுபாடுகள் காணப்படும் நிலைகள் சான்றுகளுடன் ஆராயப்பட்டுள்ளன.

தூயதமிழில் எழுதுவதில், மொழித்தூய்மை பற்றிய நாட்டம் இல்லாமல் பிறமொழிச் சொல், தமிழ்ச் சொல்

இரண்டையும் விரவி எழுதுவதில் மக்களிடம் செய்திகள் சென்று சேரவேண்டும் என்பதை மட்டுமே நோக்கமாய்க் கொண்டு பேச்சு வழக்குகளையும் பயன்படுத்தல் எனும் மூன்று போக்குகளுமே இத்தகு வேறுபட்ட சொல்லாட்சிகளுக்குக் காரணம் எனும் கருத்து முடிவாய்க் குறிப்பிடப்பட்டுள்ளது.

**Lexical Variations in Krishnavagai speech**

Thayalan, V. (1985), Ayvukkovai - 17, Part - 2, Page - 311, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

ஒரு மொழியைப் பேசுபவர் சார்ந்துள்ள சமுதாயத்தின் பண்பாடு, பொருளாதாரம், அறிவியல் தாக்கம் போன்றவற்றைச் சார்ந்தே அவரின் சொல் தொகுதி இயங்குகின்றது. சொல் தொகுதியின் வளர்ச்சிக்கும் அமையும் மாற்றங்களுக்கும் மேற்கூறப்பட்டன ஓரளவு காரணமாக அமைகின்றன. கிருஷ்ண வகைச் சமுதாயச் சொற்கள் வயது, கல்வி, இனம் (ஆண், பெண்) என்பனவற்றின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளன. அக்கா, சித்தப்பா, மாமா, மனைவி எனும் உறவுமுறைச் சொற்களும் அகப்பை, சோப்பு எனும் சொற்களும் மேற்கூறப்பட்ட சமூக அளவைகளில் விளக்கப்பட்டுள்ளன.

**Meaning Discrimination in Bilingual Dictionaries Special reference to Tamil and Tribal Languages**

Jayadevan, V. (1991), National Seminar on Lexicography Dept. of Linguistics, M.K.University, Madurai.

மலைவாழ் மக்கள் பயன்படுத்தும் மொழிக்கும் தமிழுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் இவண் தரப்பட்டுள்ளன. மலைவாழ் மக்கள் மொழிகற்பதில் பல சிக்கல்கள் உள்ளன என்றும், அவர்கள் மொழியைக் கற்கவும், கற்பிக்கவும் இருமொழி அகராதிகள் தேவை என்றும், மூலமொழியினருக்கான அகராதி, எடுப்பு மொழியினருக்கான அகராதி எனவும், அகராதிகள் வகைப்படுத்தப்பட்டன. இருளர், குரும்பர், கோதர், தோடர்,

பணியர், காட்டுநாயக்கர் மொழிகளில் காணப்படும் சிலசொற்கள் உருவ ஒற்றுமையில் தமிழ் போல் காணப்பட்டாலும் பொருளில் மாறுபடும். இத்தகைய சொற்கள் மலைவாழ் மக்கள் தமிழ் படிக்கும்போதும், தமிழர் மலைவாழ் மொழிகளைப் படிக்கும் போதும் சிக்கல்கள் தோற்றுவிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## Meaning of Meaning

Chithiraputhiran,H. (1992) Seminar of Theory of Meaning, Dept. of Philosophy, Tamil University, Thanjavur.

பொருள் பற்றி இக்கட்டுரையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. பொருள் என்பது என்ன? அது எவ்வாறு பல்வேறு துறையினரால் விளக்கப்பட்டுள்ளது என்றும், மொழியியலார் கொள்ளும் நான்கு வகையான பொருள் கோட்பாடுகளும், மூன்று வகையான சொற்பொருண்மைக் கூறுகளான கருத்துப் பொருள், குறிப்புப்பொருள், பயன்பாட்டு எல்லை என்பன விளக்கப்பட்டுள்ளன. பொருளுறவு நிலையில் ஏற்படும் பண்புகளாகப் பலபொருள் தன்மை, ஒருபொருள் பன்மொழி, எதி..மொழி ஆகியவையும் மீச்சொல், கீழ்ச்சொல் என்பனவும் விளக்கப்பெற்றுள்ளன.

## Muslim Dialect of Tamil

Srinivasa Sarma,G. (1975), Ayvukkovai-7, Part-2, Page- 511, All India University Tamil Teachers Association, Annamalai Nagar.

இக்கட்டுரை, முகமதியர் பேசும் தமிழின் சிறப்புக் கூறுகளையும் இத்தமிழ் முகமதியர் அல்லாதார் பேசும் தமிழினின்றும் வேறுபட்ட தன்மைகளையும் ஆராய்கின்றது.

முகமதியரின் தமிழ்ப் பேச்சு வழக்கு ஒலியனியல் நிலையில் தமிழ் வழக்குகளினின்றும் வேறுபட்ட தன்மைகளும் உறவுமுறைப் பெயர்களில் சம்பந்தி, சம்பந்தன் என்பன போன்ற ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனிச் சொற்கள்

பயன்படுத்தப்படும் நிலைகளும் ஆராயப்பட்டுள்ளன. தமிழ்ச் சொற்கள் சில பொருள் நிலையில் சற்றே வேறுபடும் நிலையும் அதா, வாபா, பாவா எனும் சொற்கள் ஒரே பொருளினவாக இருந்தாலும் ஒன்றோடு ஒன்று பொருள் வேறுபடும் நிலைகளும் ஆராயப்பட்டுள்ளன.

முகமதியர் தமிழ்ப் பேச்சு வழக்கின் குறிப்பிடத்தக்கக் கூறுபாடுகளை வெளிப்படுத்தும் மாதிரிச் சொற்பட்டியல் ஒன்றும் பொருட் குறிப்புகளுடன் தரப்பட்டுள்ளது.

முகமதியர், முகமதியர் அல்லாதாரின் தமிழ்ப் பேச்சுவழக்குப் பற்றிய விரிவான ஆய்வு தமிழ்க் கிளைமொழி வழக்குகளின் சமுதாய மொழியியல் இயல்புகளில் பெருந் தெளிவை வெளிப்படுத்தும் என்கிறார் ஆசிரியர்.

## Nature of Lexicography

